விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 01 திங்கட்கிழமை (15.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 147

## மே–18 காலை 9.30 மணிக்கு
## தமிழர் தாயகம் எங்கும்
## 3 நிமிட மௌன அஞ்சலி
### அனைவரிடமும் வடக்கு முதல்வர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் சரித்திரத்தில் மாறா இடம்பெற்று விட்ட சோக வரலாற்றுப் பதிவான முள்ளிவாய்க்கால் உயிரிழப்புக்களின் உண்மைநிலை வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், நினைவேந்தல் இறுதிநாளான மே-18 ஆம் திகதி அன்று வடக்கு -கிழக்கு உள்ளிட்ட புலம் பெயர் தேசமெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒருமித்து காலை 9.30 மணி தொடக்கம் 3 நிமிட மௌன அஞ்சலியை செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (24-ம் பக்கம்...)

### குடும்பஸ்தர்மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

வீதியில் நின்று தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு தாக்குதல் 02

### மீனவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பாசையூர் கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான 23

### பயணச்சீட்டு பரிசோதகர் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

மதவாச்சி புகையிரத 24

### மோடியின் புகழாரம்; முரளிதரன் மகிழ்ச்சி



(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, எனது பெயரைக் குறிப்பிட்டதை மிகப் 23


### முல்லையில் கடும் வரட்சி குடிநீரை வழங்க ஏற்பாடு

(பரந்தன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் குடிநீர் நெருக்கடி ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தகவல் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவின் கரைதுறைபற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் குடிநீர் நெருக்கடி நிலவுவதன் கார 24

### மத்தி - மாகாண முரண்பாடு; தொழிற்துறைக்கு பாதிப்பு
#### அமை.குழுவிடம் எடுத்துரைப்பு



23

### மங்கள சமரவீரவுக்கு நிதியமைச்சர் பதவி!


(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றம் செய்ய போவதாக தான் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளதால், வாக்குறுதியை நிறைவேற்றும் வரை வாராந்த அமைச்சரவைக் கூட்டங்களை ஒத்திவைக்க உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையிலேயே இது தொடர்பில் கூறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 24

### மியன்மார் தலைவி சூகியை சந்தித்தார் பிரதமர் ரணில்



24

### சைபர் தாக்குதல்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் கடந்த 13 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் மிக மோசமான இணையத் தாக்குதலில் 150 நாடுகளிலுள்ள 2, இலட்சம் 23

#### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்
### வட்டு., வவு., நவாலியில் 3ஆம் நாள் அஞ்சலி



23

#### புதிய பயங்கரவாத சட்டமூலம்
### பரந்த எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுக்க ரெலோ முடிபு

(குருமன்காடு)

அனைத்து தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளையும் இடதுசாரி மற்றும் முற்போக்கு கட்சிகளையும் இணைத்து தேசிய ரீதியில் புதிய பயங்கரவாத சட்டமூலத்திற்கு எதிராக ஒரு பரந்த எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுக்க தமிழீழ விடுதலை இயக்கம் தீர்மானித்துள்ளது என அதன் செயலாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தலைமைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினை அறிவிக்கும் முகமாக வவுனியாவில் அமைந் 02

### பிரான்ஸின் ஜனாதிபதியாக மக்ரோன்



(பாரிஸ்)

பிரான்ஸின் புதிய ஜனாதிபதியாக இமானுவல் 24

#### நாவற்குழி விகாரைப் பகுதியில்
### பிரமாண்டமான கோபுரம் அமைக்க நேற்று அடிக்கல் நாட்டும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சமுத்தி சுமண விகாரையில் பல கோடி ரூபாய் செலவில் பிரமாண்டமான கோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றைய தினம் குறித்த விகாரையில் இடம்பெற்றது.

குறித்த விகாரைக் கோபுரத்துக்கான அடிக்கல்லினை 523 ஆவது படைப்பிரி 23

### புதிய முதலீட்டு வரிச்சலுகை

(கொழும்பு)

அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய தேசிய வருமான வரி சட்டத்தின் கீழ் புதிய முதலீட்டு வரிச்சலுகை முறைமை 23

### தோல்வியை ஏற்காத அரசியல்வாதி மகிந்த!
#### சமீர பெரேரா சாடல்

(கொழும்பு)

ஒரு அரசியல்வாதி தோற்றுவிட்டால் அந்த தோல்வியை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அந்த தோல்வியை ஏற்றுக்கொள்ளாத ஒருவரே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என இடதுசாரி கேந்திர நிலையத்தின் ஏற்பாட்டாளர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்ஷ முடி 23

## பரந்த எதிர்ப்பு இயக்...

துள்ள குறித்த கட்சியின் அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதில் அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனும் கலந்து கொண்டார்.

இதன்போது சிறிகாந்தா மேலும் தெரிவித்ததாவது,

பாராளுமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்பு மசோதா என புதியதொரு மசோதாவை தாக்கல் செய்வதற்கான வேலைகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதை நாங்கள் எல்லோரும் அறிவோம். இந்த புதிய மசோதாவின் உள்ளடக்கம் தற்போது வெளியாகியுள்ளது. இந்த மசோதா ஏற்கெனவே 1979 ஆம் ஆண்டில் சட்டமாக்கப்பட்டு இன்று வரை நடைமுறையில் இருந்து வரும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை விட மோசமான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கிறது.

இந்த மசோதா சட்டமாக்கப்படுமானால் தற் போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை விட மோசமான ஒரு சட்டத்தை தமிழ் மக்கள் மாத்திரமல்ல முழு இலங்கைத்தீவு மக்களுமே எதிர்கொள்ள வேண்டி வரும் என நாங்கள் கருதுகின்றோம்.

2009ஆம் ஆண்டு வைகாசி மாதம் முள்ளிவாய்க்கால் யுத்தத்துடன் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக முன்னைய அரசாங்கம் மட்டுமல்ல இந்த அரசாங்கமும் கூறி வருகிறது. இந்தப் பின்னணியில் தோற்கடிக்கப்பட்ட பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு எதற்காக ஒரு சட்டமூலம் தேவைப்படுகிறது என்பது எங்களது கேள்வி. இருந்தாலும் அப்படியொரு சட்டத்தை இலங்கை அரசாங்கம் கொண்டு வர விரும்பினால் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதி நியாயங்களின் அடிப்படையிலும் அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

ஆனால், தற்போது கொண்டு வரவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு மசோதாவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களில் முதலாவதாக பயங்கரவாதம் தொடர்பான வரைவிலக்கணம் என்பது சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதற்கு மாறாக மேலும் பல விடயங்களை உள்ளடக்கி பரந்தும் விரிந்தும் காணப்படுகின்றது. இரண்டாவதாக பயங்கரவாத எதிர்ப்பு மசோதா சட்டமூலம் சட்டமாக்கபபடுமானால் அதனை நடைமுறைப படுத்துகின்ற போது அதன் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரஜைகள் தொடர்பிலே, சந்தேக நபர்கள் தொடர்பிலே அவர்களுக்குள்ள ஒரு அடிப்படை உரிமை சட்டத்தரணிகள் உடைய சேவையை உடனடியாக பெற்றுக் கொள்வதாகும். அந்த அடிப்படை உரிமை மறுக்கப்படுகிறது.

மூன்றாவது இன்னும் பாரதூரமானது. ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு வந்துள்ள குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் என்று அழைக்கப்படுகின்ற பாரதூரமான வாக்குமூலங்கள் யாரால் அந்த வாக்குமூலங்கள் கொடுக்கப்பட்டனவோ அவர்களுக்கு எதிரான வழக்கிலேயே அவர்களுக்கு எதிராக அரச தரப்பு சாட்சியமாக கடந்த 1979ஆம் ஆண்டில் இருந்து பயன்படுத்துப்பட்டு வந்திருக்கின்ற பின்னணியிலே அத்தகைய குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள் புதிய மசோதாவின் கீழ் சட்டமாக்கப்படுகின்ற பொழுது பதிவு செய்யப்படுவதற்கும் அந்த வாக்குமூலங்களை வழங்குகின்ற சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குகளில் அரசாங்க தரப்பு சான்றாக வழக்கு தொடுநர் தரப்பு சாட்சியமாக பயன்படுத்துவதற்கும் புதிய சட்டமூலம் வழி சமைகிறது.

ஆகவே, இது எதிர்க்கப்பட வேண்டும். இதை எதிர்க்க வேண்டிய கடமை ஜன நாயகத்தை நேசிக்கிற ஒவ்வொருவரையும் சார்ந்திருக்கிறது. இந்த நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளில் எவை எவையெல்லாம் ஜன நாயகத்தை மதிக்கின்றனவோ அத்தனை அரசியல் கட்சிகளும் இந்த சட்டமூலத்தை எதிர்க்க கடமைப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இந்த நாட்டிலே அடக்கி ஒடுக்கப்பட்டு பயங் கரவாத எதிர்ப்பு என்ற பேரிலே பல்வேறு விதமான சித்திரவதைகளுக்கும், துன்பங்களுக்கும் கொடூரங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்ற தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் முழு மூச்சாக எதிர்க்க வேண்டிய கடமை இருக்கிறது. அதேபோல் தமிழ் பேசும் சிறுபான்மையினமான எங்கள் முஸ்லிம் சகோதரர்கள் மத்தியில் அரசியல் நடத்துகின்ற கட்சிகளுக்கும் அந்த கடமை இருக்கிறது. ஆகவேதான் நாங்கள் இன்றைய தினம் (நேற்று) எங்களது கூட்டத்திலே விவாதித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம்.

முதல்படியாக இந்த சட்டமூலத்திற்கு எதிராக ஒரு பாரிய பரந்து விரிந்த எதிர்ப்பு இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு ஏதுவாக முதல் கட்டமாக வடக்கு கிழக்கை தளமாக கொண்டு இயங்குகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் இந்தவாரம் கூட்டம் ஒன்றை கூட்டுவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

அதற்காக ஒரு உபகுழுவை நியமித்து அதில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், இரு மாகாண சபை உறுப்பினர் உட்பட 5 பேரை நியமித்து அதற்கான ஏற்பாடுகளை இன்றில் இருந்து செய்ய வேண்டும் என்கின்ற கடமை அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக வடக்கு கிழக்கை தளமாக கொண்டு இயங்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டம் இடம்பெறும். அதனைத் தொடர்நது மலையகத்தை தளமாக கொண்டு இயங்கும் அரசியல் கட்சிகள், முஸ்லிம் மக்கள் மத்தியில் செயற்படும் அரசியல் கட்சிகள் என்பவற்றை இணைத்து அதை விஸ்தரிக்க தீர்மானித்திருக்கிறோம்.

இறுதிக் கட்டத்திலே இந்த நாட்டில் உள்ள இடதுசாரிக்கட்சிகள், முற்போக்கு கட்சிகள், ஜனதா விமுத்தி பெரமுன, விக்கிரமபாகு கருணாரட்ன தலைமையிலான நவசமசமாஜக் கட்சி, சிறிதுங்க ஜெயசூரிய தலைமையிலான அரசியல் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கொமியுனிஸ்ட் கட்சி, தினேஸ் குணவர்தனவினுடைய மக்கள் ஐக்கிய முன்னணி உட்பட இதில் அக்கறை காட்டக் கூடிய அத்தனை இடதுசாரி கட்சிகளையும் முற்போக்கு கட்சிகளையும் இணைத்து அகில இலங்கை தழுவிய ரீதியில் ஒரு பரந்த எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுக்க தமிழீழ விடுதலை இயக்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளுக்கு சம்மந்தப்பட்ட அரசியல் கட்சிகள் அதனை தலைவர்கள் மட்டுமல்ல மக்கள் மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கின்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள், சிவில் அமைப்புக்கள், ஊடகங்கள் என அனைவரதும் ஒத்துழைப்பையும் எதிர்பார்கின்றோம்.

இந்த மசோதாவில் உள்ள பாதகமான விடயங்கள் அனைத்தும் நீக்கப்பட்டு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாகரிகமான ஒரு வடிவத்தை கொண்டதாக மாற்ற அனைவரதும் ஒத்துழைப்பையும் கேட்டு நிற் கின்றோம் என சிறிகாந்தா தெரிவித்தார்.(செ-250)

## குடும்பஸ்தர் மீது...

நடத்தப்பட்டதில் அவர் படுகாயமடைய நேரிட்டுள்ளது.

யாழ்.கொக்குவில் மஞ்சவனப் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்ற இவ் வாள்வெட்டுச் சம்பவத்தில் சிராணி கோவில் கேணியடியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் ரதீபன் (வயது-34) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

பிரஸ்தாப குடும்பஸ்தர் கடையொன்றின் முன்பாக நின்று தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த வேளை அவரை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவர் பின்னால் இருந்து சரமாரியாக வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இத்தாக்குதலில் முதுகுப் பகுதியில் படுகாயங்களுக்கு உள்ளான குடும்பஸ்தர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-30)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவக்கொழுந்து அகிலதாஸ்



வர்த்தக சமூகத்துக்காய் 1990 முதல் தோளோடு தோள் நின்று நெல்லியடி வர்த்தக சமூகத்தின் உற்ற நண்பராய் வர்த்தகர்களுக்கு குரல் கொடுப்பவராய் எங்கள் தலைவர் சக வர்த்தக சங்கத்தின் உப தலைவர் அகிலதாஸ் சிவக்கொழுந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டமைக்கு நெல்லியடி வர்த்தகர்கள் சார்பாக எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-8566) நெல்லியடி வர்த்தக சங்கம்



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



✌ கேக் ஐசிங் - பட்டர், றோயல், Parchment, Frosting, Fondant, Water Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள் (Sugar Flowers).

✌ உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா சிற்றுண்டிகள் குளிர் பானங்கள், ஐஸ் கிறீம், புடிங், சுப் தயாரித்தல்



✌ கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டு தல், Hair Colouring, முடி வெட்டுதல்,



✌ FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)



✌ BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.



✌ பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமைநாள் தையல் பயிற்சிகள்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-05-2017
புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 27-05-2017
சனி காலை 10.00 மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

(C-8563) -இயக்குநர்-

# மைத்திரிக்கு மகிந்த நிபந்தனையுடன் ஆதரவு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அரசியல் ரீதியான இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முயன்று வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அரசியல் ரீதியில் ஆதரவு வழங்குவதற்காக மகிந்த ராஜபக்ஷ ஒப்பந்தம் ஒன்றை முன் வைத்துள்ளார்.

நிபந்தனையுடன் ஆதரவு வழங்குவதாக மகிந்த தனது அறிக்கையின் ஊடாக தெரிவித்துள்ளார்.

மனைவியான ஷிராந்தி ராஜபக்ஷ, பிள்ளைகளான நாமல் ராஜபக்ஷ, யோஷித ராஜபக்ஷ மற்றும் ரோஹித ராஜபக்ஷவுக்கு எதிராக உள்ள வழக்குகளை நீக்கிக் கொள்வது தொடர்பாக அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு நெருக்கமான பிரபல அமைச்சர் ஊடாக இந்த ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும் ஜனாதிபதியால் அந்த ஒப்பந்தம் முழுமையாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

மகிந்தவின் கோரிக்கைகளுக்கு இணங்கினால் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக வழங்கிய பிரதான வாக்குறுதியான ஊழல் மோசடிக்காரர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்பதனை நீக்கிக் கொள்ள நேரிடும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அது அரசாங்கத்தின் எதிர்கால அரசியல் பயணத்திற்கு நேரடியாக தாக்கம் செலுத்தும் என ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)


## சிறுநீரக நோய்களுக்குச் சிகிச்சை
## Ayurvedic Treatment for Renal Diseases

சிறுநீர் குறைவாகவும், வலி மற்றும் எரிச்சல் கடுப்புடன் வெளியேறல். ஆரம்ப நிலை சிறுநீரக செயலிழப்பு நிலை (Renal Failure in Primary Stage). சிறுநீரகம், சிறுநீர்பை இவற்றில் கற்கள் காணப்படுதல் (Stone in the Kidney & Bladder) கற்கள் காரணமாக ஏற்படும் வயிற்று வலி, சிறுநீர்த் தடை, இரத்தம் கலந்த சிறுநீர் வெளியேறல் மற்றும் ஆண்களில் ஏற்றபடும் புரஸ்தகோள (Enlargement of the Prostate gland) பிரச்சினைகள் போன்றவற்றால் சிறுநீர் கழிப்பதில் தாமதம், தடை, அடிக்கடி வெளியேற்றும் உணர்வு மற்றும் சிறுநீர்த்தொற்று (Urine Infection), கீழ்வயிற்று வலி, நித்திரை மற்றும் மனக்குழப்பம் போன்ற பிரச்சினைகளுக்கு சித்த ஆயுள்வேத முறையில் சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# அரசியல் யாப்பில் அதிகாரம் எவ்வாறு பகிரப்படுகின்றது

## இலங்கையிடம் ஐ.நா விளக்கம் கோரல்

(கொழும்பு)

**உத்தேச அரசியல் யாப்பில் அதிகாரம் பகிரப்படும் விதம் குறித்து தெளிவுபடுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழு இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.**

ஜூன் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள அவ்வாணைக்குழுவின் 35 ஆவது கூட்டத் தொடரில் இது தொடர்பான அறிக்கையை இலங்கை அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டும் என ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி ஜூவன் மென்ட்ஸின் 9 நாள் இலங்கை விஜயத்தின் பின்னர் விசேட அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளார்.

அதில் அரசியலமைப்பு சபைக்கு அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 49 பரிந்துரைகளை அவ்வறிக்கை முன்வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மே18 இற்கு பின்னர் பாரிய மாற்றம் ஏற்படும்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கும் 25 ஆம் திகதிக்கும் இடையில் பாரிய மாற்றம் ஏற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார். ஜனாதிபதி எடுக்க உள்ள தீர் மானங்கள் காரணமாக இந்த மாற்றம் ஏற்படவுள்ளது. நாடு வலுப்படும் இதன் மூலம் பதவி மாற்றம் ஒன்று ஏற்படும். இந்த பதவி மாற்றத்தின் மூலம் வலுவாக அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்ல முடியும் என்று நம்புகிறேன். நாட்டு மக்கள் எதிர்பார்ப்பதை நாம் நிறைவேற்ற வேண்டும்.

இந்தியாவின் பிரதமர் இலங்கைக்கு வந்தார். அவர் இங்கிருந்து எதனை எடுத்துச் சென்றார் என கேட்க விரும்புகிறேன். இந்திய பிரதமர் எந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். எம்முடையவற்றில் எதனையாவது எழுதி எடுத்துக் கொண்டாரா?. இந்திய பிரதமர் வரும் போது கறுப்புக்கொடி ஏற்ற போவதாக கூறினார்கள். எனினும் நாட்டில் உள்ள எவரும் கறுப்புக் கொடிகளை ஏற்றவில்லை.

கறுப்புக்கொடி ஏற்ற போவதாக கூறியவர்களுக்கு பாடம் கற்பிக்கும் வகையில் இந்திய பிரதமரை வரவேற்கும் நிகழ்ச்சிக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருகை தந்தார். தினேஷ் குணவர்தன , வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் வருகை தந்தனர்.

இவர்கள் வந்து இந்திய பிரத மருக்கு மரியாதை செலுத்தினர். இதன் காரணமாக அடிப்படைவாதிகள் நிராகரிக்கப்பட்டனர். அடிப்படைவாதம் யாருக்கு தேவை என்பது அங்கு தெளிவாக தென்பட்டது எனவும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேலும் தெரிவித்தார். (இ-7)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை
## Special Treatment for Rheumatism

கழுத்தும்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# நாடாளுமன்றத்தில் 21பேர் ஊமைகள்

## அசாத் சாலி கடும் விசனம்




"நாடாளுமன்றத்தில் 21 ஊமைகள் இருப்பதன் காரணத்தினாலேயே, முஸ்லிம்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றத்துக்கு கொண்டு செல்ல முடியாதுள்ளது" என்று, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அசாத் சாலி தெரிவித்தார். கண்டி, ரைட்வே கல்வி நிறுவனத்தில், பாலர் பாடசாலை ஆசிரியை பயிற்சியை நிறைவு செய்வதர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"புனித நோன்புக்காக சவுதி அரசு அன்பளித்த பேரீச்சம்பழங்களுக்கு, அரசு வரி விதித்துள்ளதாக அப்பட்டமான பொய்யை சிலர் பரப்பி வருகின்றனர். இது வதந்தியாகும். முஸ்லிம்களின் புனிதநோன்பை முன்னிட்டு, மத்தியக் கிழக்கு நாடுகளில் இருந்து கிடைக்கப் பெரும் பேரீச்சம்பழங்கள், முற்றிலும் வரி நீக்கப்பட்டே கிடைக்கின்றன.

இருந்தபோதும் சிலர் இதிலும் அரசியல் இலாபம் தேடுகின்றனர். இதற்கு சரியான பதிலைக் கொடுக்க நாடாளுமன்றத்தில் இருக்கின்ற முஸ்லிம் உறுப்பினர்களால் முடியாதுள்ளது. அதனால்தான் நாடாளுமன்றத்தில் 21 ஊமைகள் இருப்பதாக கூறுகின்றேன். இந்த ஊமைகளால் எதுவும்செய்ய முடியாது" என்று, அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 73 ஓட்டங்களில் சுருண்டது கிங்ஸ் லெவின் இலகு வெற்றியுடன் பிளேஓஃப்க்குள் புனே



கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்கெதிராக ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பிளேஓஃப சுற்றுக்கு முன்னேறியது.

கிங்ஸ் லெவின் பஞ்சாப் - ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணிகளுக்கு இடையிலான போட்டி புனேயில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற புனே அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 73 ஓட்டங்களில் சுருண்டது.

அதிகபட்சமாக அக்சர் பட்டேல் 22 ஓட்டங்களும், சகா 13 ஓட்டங்களும், ஷோன் மார்ஷ் மற்றும் ஸ்வாப்னில் சிங் தலா 10 ஓட்டங்களும் எடுத்தனர். புனே அணியில் ஷர்துல் தாகூர் 3 விக்கெட்டும், உனட்கட் மற்றும் ஆடம் சம்பா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களும் வீழ்த்தினார்கள்.

பின்னர் 74 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணி களம் இறங்கியது. தொடக்க வீரரான திரிபாதி 20 பந்தில் 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அடுத்து ரகானே உடன் ஜோடி சேர்ந்த ஸ்மித் மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டார்.

இதனால் புனே அணி 12 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 78 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ரகானே 34 பந்தில் 34 ஓட்டங்களுடனும், ஸ்மித் 18 பந்தில் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.


இந்த வெற்றியின் மூலம் 14 போட்டிகளில் 9இல் வெற்றி பெற்று 18 புள்ளிகளுடன் புனே அணி



பிளேஓஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணியின் உனட்கட் தெரிவு செய்யப்பட்டார்.

# தென்னாபிரிக்க கிரிக்கெட் விருதுகள் - 2017 ஐந்து விருதுகளை வென்ற குயின்டன் டி கொக்




தென்னாபிரிக்கா அணியின் விக்கெட் காப்பாளர் குயின்டன் டி கொக் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர் உட்பட ஐந்து விருதுகளை தட்டிச் சென்று அசத்தியுள்ளார்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் வாரியம் சார்பில் சிறந்த வீரர்களுக்கான விருதுகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இதில் விக்கெட் காப்பாளரான குயின்டன் டி கொக் இந்த வருடத்திற்கான சிறந்த வீரர், சிறந்த டெஸ்ட் வீரர், சிறந்த ஒருநாள் வீரர், வீரர்களின் சிறந்த வீரர், ரசிகர்களின் சிறந்த வீரர் என ஐந்து விருதுகளை தட்டிச் சென்றார்.

கடந்த வருடம் வேகப்பந்து வீச்சாளர் காகிசோ ரபாடா 6 விருதுகளை தட்டிச் சென்றார். தற்போது டி கொக் ஐந்து விருதுகளை பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு எதிரான ஒருநாள் போட்டியில் 178 ஓட்டங்கள் அடித்ததற்காகவும், ஹோபர்ட்டில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் சதம் அடித்ததற்காகவும் டி கொக் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிறந்த இருபது - 20 கிரிக்கெட் வீரராக இம்ரான் தாஹிர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் நியூசிலாந்துக்கு எதிராக 24 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து ஐந்து விக்கெட்டுக்கள் கைப்பற்றியிருந்தார்.

# மாட்ரிட் ஓபன் இறுதிப் போட்டியில் நடால்-டொமினிக் தியெம் பலப்பரீட்சை



மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் நடால் உடன் டொமினிக் தியெம் பலப்பரீட்சை நடத்துகிறார்.


ஸ்பெயின் நாட்டில் மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் நடால், ஜோகோவிச்சை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதி போட்டியில் உருகுவேயின் பப்லோ குயேவாஸ் - ஆஸ்திரியாவின் டொமினிக் தியெம் மோதினார்கள். இதில் டொமினிக் 6-4, 6-4 என நேர்செட் கணக்கில் பப்லோ குயேவாஸை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

ஏற்கெனவே நான்கு முறை மாட்ரிட் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ள நடாலை 9-வது இடத்தில் இருக்கும் டொமினிக் தியெம் இறுதிப் போட்டியில் சந்திக்கிறார்.

ரியோவில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் டொமினிக் தங்க பதக்கம் வென்றார். கடந்த மாதம் பார்சிலோனாவில் நடைபெற்ற தொடரில் நடாலிடம் தோல்வியடைந்து சம்பியன் பட்டத்தை இழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல் வெற்றிக்கிண்ணத்துடன் ஈடன் கார்டன் திரும்புவோம்



பிளேஓஃப் சுற்றுகளில் வெற்றி பெற்று சம்பியன் டிராபியுடன் கொலகத்தா ஈடன் கார்டன் திரும்புவோம் என்று ஷாருக் கான் உறுதியளித்துள்ளார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதிய கடைசி லீக் ஆட்டம் கொலகத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது. இந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வெற்றி பெற்றது.

கொல்கத்தா அணியின் உரிமையாளராக ஷாருக் கான் இருந்து வருகிறார். தற்போது அவர் சினிமா பட ஷூட்டிங்கில் பிசியாக இருப்பதால் பெரும்பாலான போட்டிகளை நேரில் வந்து பார்க்கவில்லை.

கொல்கத்தாவின் கடைசி லீக் போட்டி என்பதால் நேற்று மைதானத்திற்கு வந்திருந்தார். அவர் ரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

போட்டி முடிந்த பின்னர் ஷாருக கான், கொல்கத்தா அணி கோப்பையுடன் ஈடன்கார்டன் திரும்பும் என்று ரசிகர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

இதுகுறித்து ஷாருக் கான் கூறுகையில் ஒவ்வொரு போட்டிக்கும் ரசிகர்கள் எங்களுக்கு கொடுத்து வந்துள்ள ஆதரவை பார்க்கையில், நாங்கள் எங்களுடைய சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி, கோப்பையுடன் ஈடன் கார்டன் வர முயறசிப்போம்.

நாங்கள் சில போட்டிகளில் வெற்றியை நெருங்கி வந்து தோல்வியடைந்தோம். தற்போது இது கடினமாக இருந்தாலும், தொடரில் நல்ல நிலையில்தான் உள்ளோம்.

கோப்பையை வெல்ல நாங்கள் இன்னும் மூன்று போட்டிகளில் வெற்றி பெற வேண்டியுள்ளது. கொல்கத்தாவில் இது எங்களுக்கு கடைசி போட்டி. சற்று அதிர்ஷ்டம் இல்லாமல் போனது.

இந்த சீசனில் இனிமேல் ஈடன் கார்டன் வரப்போவதில்லை. ஆனால் போட்டியில் விளையாட இங்கே வராவிட்டாலும், கடவுள் கிருபையால் டிராபி கோப்பையுடன் திரும்புவோம் என்றார் ஷாருக் கான்.

# மும்பை - புனே, ஹைதராபாத் - கொல்கத்தா பிளேஓஃப் இல் பலப்பரீட்சை நடத்தவுள்ளன

குவாலிபையர் - 1

மும்பை VS புனே

ஐ.பி.எல். தொடரில் பிளேஓஃப் சுற்றின் முதல் குவாலிபையரில் மும்பை - புனே அணிகளும், எலிமினேட்டரில் ஹைதராபாத் - கொலகத்தா அணிகளும் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

'ஐ.பி.எல். சீசன் 10' இருபது - 20 கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் 5ஆம் திகதி தொடங்கியது. சுமார் 40 நாட்களாக நடைபெற்ற லீக் ஆட்டங்கள் நேற்றுடன் முடிவடைந்தது.

பிற்பகல் 4 மணிக்கு தொடங்கிய போட்டியில் புனே - பஞ்சாப் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் வெற்றிபெறும் அணி பிளேஓஃப் சுற்றுக்கு முன்னேறும் என்பதால் இரு அணிகளுக்கும் வாழ்வா? சாவா? போட்டியாக அமைந்தது. ஆனால் பஞ்சாப் அணி 73 ஓட்டங்களில் சுருண்டு தோல்வியடைந்தது.

இதனால் புனே அணி பிளேஓஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது. தற்போது மும்பை இந்தியன்ஸ், ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட், சன்ரைசர்ஸ் ஹைதராபாத், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் பிளேஓஃப் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

லீக் போட்டிகள் முடிவில் மும்பை இந்தியன்ஸ் 14 போட்டிகளில் 10 வெற்றி, நான்கு தோல்வியுடன் 20 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணி 9 வெற்றிகளுடன் 18 புள்ளிகள் பெற்று 2-வது இடத்தையும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 8 வெற்றி, ஒரு சமனிலையுடன் 17 புள்ளிகள் பெற்று 3-வது இடத்தையும், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் 8 வெற்றிகளுடன் 16 புள்ளிகளுடன் 4-வது இடத்தையும் பிடித்துள்ளது.

ஐ.பி.எல். தொடர் விதிப்படி முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் பிளேஓஃப் சுற்றுக்கு முன்னேறும். முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் குவாலிபையர் 1-ல் மோத வேண்டும். அதன்படி 16ஆம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் மும்பை இந்தியன்ஸ் - ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

3-வது மற்றும் 4-வது இடங்களை பெறும் அணிகள் எலிமினேட்டர் சுற்றில் விளையாடும். அந்த வகையில் 17ஆம் திகதி பெங்களூரவில் நடைபெறும் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

குவாலிபையர் 1இல் தோற்கும் அணியும், எலிமினேட்டரில் வெற்றி

எலிமினேட்டர் சுற்று

கொல்கத்தா VS ஹைதராபாத்

பெறும் அணியும் குவாலி பையர் 2இல் மோத வேண்டும். இந்த போட்டி 19ஆம் திகதி பெங்களூரில் நடக்கிறது.

குவாலிபையர் 1இல் வெற்றி பெறும் அணியும், குவாலிபையர் 2இல் வெற்றி பெறும் அணியும் 21ஆம் திகதி ஹைதராபாத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தும்.

## சம்பியன் டிராபியின் பரிசுத் தொகைகள் அறிவிப்பு

இங்கிலாந்தில் ஜூன் 1ஆம் திகதி தொடங்கும் சம்பியன்ஸ் டிராபி தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு 2.2 மில்லியன் டொலர் பரிசு வழங்கப்படும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இறுதிப் போட்டியில் தோல்வியடைந்து 2-வது இடத்தை பெறும் அணிக்கு 1.1 மில்லியன் டொலர் பரிசுத் தொகையும், ஒட்டு மொத்தமாக 4.5 மில்லியன் டொலர பரிசுத் தொகை வழங்கப்பட இருப்பதாக அறிவித்துள்ளது.

# அரசியல் காரணங்களுக்காக முக்கிய முடிவுகளை நாம் எடுக்காததால் மக்களிடையே விரக்தி, விசனம்

## வடக்கு முதலமைச்சர் அமெரிக்க குழுவிடம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**நாம் முன்னெடுக்க வேண்டிய முக்கிய நடவடிக்கைகளை அரசியல் காரணங்களுக்காக செயற்படுத்தாது தவிர்ப்பது மக்களிடையே விரக்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அமெரிக்க குழுவினரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.**



அமெரிக்க காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் பில் ஜோன்சன், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் ஆகியோர் வட மாகாண முதலமைச்சர சி. வி.விக்னேஸ்வரனை வட மாகாண முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

குறித்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க காங்கிரஸில் இலங்கை தொடர்பான விடயங்களை பிரதிபலிக்கும் அமைப்பினுடைய தலைவராக பில் ஜோன்சன் உள்ள காரணத்தால் மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இங்குள்ள நிலைமைகளை அறிவதற்காக வந்துள்ளதாக தெரிவித்தார்.

இங்கு அரசியல் ரீதியான நடவடிக்கை எவ்வாறு உள்ளது எனக் கேட்டிருந்தார். கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னர் நாம் எதிர்பார்த்ததுக்கு எதிராக தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த தாமதம் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்போதும் பல பகுதிகளில் எமது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு காரணம் துணிவாக துணிவுடன் சில நடவடிக்கைகளை எடுக்காதது தான் என நான் நினைக்கிறேன். அதாவது அரசியல் காரணங்களுக்காக நாம் எடுக்கவேண்டிய முக்கியமான செயற்பாடுகளை முன்வைக்காது இருந்தால் அது மக்களிடையே விரக்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தும் என தெரிவித்தேன்

மேலும் காணி விடுவிப்பு, காணாமல் போனவர்களின் நிலை, வேலை வாய்ப்பில்லாத பிரச்சினை, இராணுவமயமாக்கல் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தோம்.

இப் பிரச்சினைகளை தீர்க்க தம்மால் என்ன செய்ய முடியும் என கேட்டிருந்தார்கள்.

இலங்கைக்கு கடந்த மார்ச் மாதம் இரண்டு வருட காலம் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசும் குறித்த கால எல்லைக்குள் தமது வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவோம் என தெரிவித்துள்ளது.

எனவே அவர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள அமெரிக்கா இலங்கைக்கு நெருக்குதல்களை கொடுக்க வேண்டும் இப்பொழுதுஇருந்தே அழுத்தம் கொடுத்தால் தான் அவர்கள் தாம் உறுதி அளித்த விடயங்களை நடைமுறைப் படுத்துவார்கள் என கூறியிருந்தேன் என தெரிவித்தார். (இ-9)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சபாரட்ணம்



(நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் இலங்கை சினிமா என்டடெயின்ஸ்மென்ற் லிமிட்டெட்,புலோலி)

இளவாலை சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் புலோலி புற்றளையை வசிப்பிடமாக வும் கொண்ட வேலுப்பிள்ளை சபாரட்ணம் (நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் இலங்கை சினிமா என்டடெயின்ஸ்மென்ற் லிமிட்டெட்) 13.05.2017 சனிக்கிழமை இறைபதமெய்தினார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். (சி-8565)

புற்றளை,
புலோலி. குடும்பத்தினர்


## மகிந்தவுடன் சுஜீவ சந்திப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி வழிமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தகத்துறை இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க, நேற்று முன்தினம் இரவு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.



ராஜபக்ஷவின் இளைய சகோதரியின் மரணத்திற்கு பின்னர் நடைபெற்ற 7 ஆம் நாள் சமய நிகழ்வில் கலந்து கொள்ள சென்றிருந்த சேனசிங்க, முன்னாள் ஜனாதிபதியுடன் நட்புறவாக பேசி கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நேரம் வீட்டில் இருந்து விட்டே இராஜாங்க அமைச்சர் திரும்பிச் சென்றுள்ளார். (இ-7)

## இராசி பலன்

15.05.2017

(வைகாசி 01, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

சதுர்த்தி முற்பகல் 10.54 மணிவரை

பூராடம் பின்னிரவு 2.52 மணிவரை

சுபநேரம் 11.53 - 1.23 மணிவரை

இராகுகாலம் 7.23 - 8.53 மணிவரை

சர்வதேச குடும்ப நல தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | புத | செவ் சூரி | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மிருகசீரிடம் | | |
| | | | ராகு |
| சந் | சனி | | குரு |

**மேடம்:** தடைகள் அகன்று தன வரவுகள் ஏற்படலாம், தொழில் ரீதியாக செயற்பட்டு மறைமுக போட்டிகளை சமாளிப்பீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான நாள்.

**கடகம்:** மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்,வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு,நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**துலாம்:** சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுறு சுறுப்புடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்கள் மூலம்சு ப தகவல்கள் வந்து சேரலாம், தன வரவு திருப்திகரமாக அமையும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வாய்ப்புக்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபடவேண்டிய நாள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.

**மகரம்:** வீட்டை அழகுபடுத்துவதில் கவனம் செலுத்துவீர்கள், பக்குவமாய் பேசி காரியம் சாதிப்பீர்கள், இடமாற்றத்தால் இனிமை காண வேண்டிய நாள்.

**கும்பம்:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.


**மீனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.





கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டினை முன்னிட்டு மாபெரும் நடை பவனி நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம் பெற்றது. கல்லூரி அதிபர் மு. கனகலிங்கம் தலைமையில் நடை பெற்ற இந் நடை பவனியில் கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே. யோகநாதன் ,பாடசாலை மாணவர்கள் , பாடசாலையின் பழைய மாணவர்கள் , வர்த்தகர்கள், பொது மக்கள், பெற்றோர் , நலன் விரும்பிகள் என ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். பாடசாலையில் இருந்து காலை 7 மணிக்கு ஆரம்பமான நடை பவனி செல்லப் பிள்ளையார் கோவில் வீதி - யாக்கரை வீதி - சம்மந்தர் கடையடி - அரசடிச் சந்தி - நெல்லியடி - நாவலர் மடம் - கரணவாய் ஊடாக பாடசாலையைச் சென்றடைந்தது. (படங்கள் - மகாலிங்கம்)





வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் முயற்சியினால் மத்திய அமைச்சினால் வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரதிணைக்களத்திற்கு வழங்கப்பட்ட சுயதொழில் முயற்சி ஊக்குவிப்பு உதவித் திட்டத்தின் கீழ் வடமாகாணசபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினத்தின் சிபார்சில், யாழ்.மண்டைதீவுப் பகுதியில் அன்றாடம் வாழ்வாதாரத்திற்கு பெரும் சிரமப்படும் வறியநிலையிலுள்ள 15 குடும்பங்களில் குடும்பம் ஒன்றிற்கு ரூபா 4 ஆயிரம் வீதம் 15 குடும்பங்களுக்கும் ரூபா 60 ஆயிரம் பெறுமதியான ஒருமாத லேயர் வகை கோழிக் குஞ்சுகள் அண்மையில் வழங்கப்பட்டன.

# நீரை விரயமாக்குபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## முதல்வர் விக்னேஸ்வரன் ஆலோசனை

நீரை விரயமாக்குபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசித்துள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். சர்வதேச நீர் மையத்தில் இருந்து அவுஸ்திரேலியாவை சேர்ந்த கைலி மிலிகன், பாப்லோ போரன்ஸ் என்ற இரு செயற்றிட்ட அலுவலர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அதிகாரிகள் ஆகியோரை முதலமைச்சர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இதன்போதே மேற்படி விடயம் தொடர்பில் ஆராயப்பட்டதாக முதலமைச்சர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில மாதங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவிற்கு எங்கள் மாகாண சபை உறுப்பினர்களும் பொறியியலாளர்களும் ஒரு கருத்தரங்கிற்கு சென்றிருந்தார்கள். அந்த கருத்தரங்கின் அடிப்படையில், இங்கு என்ன நடைபெறுகின்றது? என்ன செய்யப்பட வேண்டும் என்பவற்றை அறிந்து கொள்வதற்குமாக அவுஸ்திரேலிய அதிகாரிகள் வந்திருந்தார்கள். இதன்போது அவர்கள் முக்கியமாக கூறியது என்னவென்றால் கருத்தரங்குகளில் ஆராயப்படும் விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்றுதான். குறிப்பாக நாங்கள் ஒரு மட்டத்திலே பேசிக் கொண்டுள்ளவற்றை மக்கள் அறிந்து கொள்கின்றனர் இல்லை எனவும் மக்களின் பங்கேற்பு இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்கள். நீர் பாவிப்பு முறைகளில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும் எனவும் அந்த மாற்றத்தை ஏற்படுத்த மக்களுடைய பங்கு அவசியமானது எனவும் அதற்கு மாறாக மக்கள் நடந்து கொண்டால், அது சம்பந்தமான ஒழுங்கு நடவடிக்கைகளையும் கட்டாயமாக எடுக்க வேண்டும் எனவும் கூறினார்கள். நீர் தொடர்பில் மாகாண மத்திய அரசுகள் ஒருமித்து வேலை செய்யாமல் வெவ்வேறாக இருந்து வேலை செய்வதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். இது நன்மையை தராது, இரு தரப்பையும் உள்ளடக்கி ஒரு அதிகார பூர்வமான அமைப்பொன்றை ஸ்தாபிக்க வேண்டும் எனவும் கூறினார்கள்.

இதன் அடிப்படையில் தான் எமது பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. எங்களுடைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் உறுப்பினர்கள் பல கருத்துக்களை தெரிவித்திருந்தார்கள். சில நேரங்களில் பிழையான நடவடிக்கைகளில் மக்கள் இறங்கும் போது அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை முனையும் போது, அரசியல்வாதிகள் குறுக்கீடு செய்வதாகவும் கூறப்பட்டிருந்தது.

பேராசிரியர் திருமதி செந்தில் நந்தனன், கடல் நீரேரி ஒரு சில பிரச்சினைகளை கொண்டுள்ளதாகவும் கடல் நீரேரியில் பொசுபரசு மற்றும் மனித கழிவுகள் அதிகம் கலந்துள்ளதாகவும் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கூறினார். இதனை சுத்தப்படுத்துவதற்கு பொருத்தமான கடல் தாவரங்களை நட வேண்டும் எனவும் அவர் கூறினார். இவ்வாறான பலவிதமான விடயங்கள் பேசப்பட்டன.

பிரதானமாக நீரின் உபயோகத்தை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் பாரம்பரியமாக கிணற்றில் நீர் பாவித்து வந்த நிலையில், எந்தவிதமான கட்டுப்பாடும் இன்றியும் பாவித்து வருவதனால் நில மட்டத்தில் உள்ள நன்னீரில் உப்புநீர் கலந்து வருவதாகவும் கூறிய அவர்கள், நீர்ப் பாவிப்பை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன குறித்து எமது கலந்துரையாடல்கள் அமைந்தன.

காட்டு மரங்கள் அழிந்து கொண்டு செல்லல், மண்ணரிப்பு, சட்டவிரோத மணல் அகழ்வு என பல விதமான பிரச்சினைகளை கூறி இதற்கு எல்லாத் திணைக் களங்களும் ஒன்றிணைந்து அதிகார அலகு ஒன்றை உருவாக்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

எமது நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்கு மூன்று விதமான யோசனைகளை முன்வைத்திருந்தனர். ஒன்று தரைக்கீழ் நீர், இரண்டு சேமித்து வைத்து கீழே இருந்து எடுக்கப்படும் நீர், மூன்றாவது கடல்நீர், இவை மூன்றிலும் இருந்து நீர் எடுக்க வேண்டிய தேவை உள்ளது எனவும் எடுத்துக் கூறப்பட்டது என்றார் முதலமைச்சர். (இ-4)

# யாழ். சிங்கள மகாவித்தியாலயத்திலுள்ள இராணுவத்தினர் வெளியேற வேண்டும்

## இளைஞர் சேவைகள் மன்றத்தினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கான கட்டடத்தினை அமைப்பதற்கு யாழ். சிங்கள மகா வித்தியாலயத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் வெளியேறி உதவி புரிய வேண்டும் என யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வருடாந்த ஊடகவியலாளர் மாநாடு யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ள அவர்களது அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே குறித்த மன் றத்தின் பிரதிநிதிகள் மேற் கண்டவாறு தெரிவித்தனர்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட சம்மேளன தேசிய பிரதிநிதி எஸ்.விஜிதரன் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கென ஒரு அலுவலகமோ, பயிற்சி நிலையமோ இல்லை. மைதானம், தங்குமிட வசதிகள் எவையும் இல்லை. எனவே இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என கடந்த 3 வருடங்களுக்கு முதல் நாம் இளைஞர் சேவை மன்றத்தின் ஊடாக கோரியிருந்தோம். அதற்கென இந்த வருடம் குறித்த அலுவலகத்தை மாவட்டம்தோறும் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன் முதலாவதாக அதை யாழ்ப்பாணத்தில் அமைக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அந்த வகையில் குறித்த கட்டடம் அமைப்பதற்கு இவ் வருடம் 12 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதற்குரிய பகுதியாக கைதடி வெளியில் ஒரு இடத்தினை தெரிவு செய்துள்ளனர். ஆனால் அப் பகுதியை நிரவி அந்த இடத்தில் கட்டடத்தை அமைக்க வேண்டும் என்றால் அதற்கு 70 கோடி ரூபாய் தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே அந்தளவு பணம் ஒதுக்கப்படாததால் குறித்த திட்டத்தை நிறுத்தி அப்பணத்தை வேறு மாவட்டத்துக்கு கொடுக்கவுள்ளனர்.

எனவே எமக்கு என ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லாது நிறுத்த வேண்டும். அதற்கு தைரியமாக வாதாடுவதற்கு யாரும் முன்வரவில்லை. எமது மக்கள் பிரதிநிதிகள் முன்வந்து குறித்த பணத்தில் எமக்குரிய அலுவலகத்தை அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த ஆட்சியின் போது நாம் எமது இளைஞர் சேவை மன்றத்துக்கான கட்டடத்தை அமைப்பதற்கு யாழ்.. நகரப் பகுதியல் அமைந்துள்ள சிங்கள மகாவித்தியாலயத்தின் மைதானத்தை கோரியிருந்தோம். அப்போதைய ஆளுநர் குறித்த காணியை எமக்கு வழங்குவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் எந்தச் செயற்பாடும் இடம்பெறவில்லை. எனவே அப்பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தின் 512 ஆவது படையணி தமது முகாம்களை அகற்றி வேறு இடத்தில் அமைக்க வேண்டும்.

அந்த இடத்தில் எமக்கான கட்டடத்தினை அமைத்தால் சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ள முடியும். ஒதுக்குப் புறமாக அமைந்திருந்தால் இளைஞர்களுக்கு எந்தவித முன்னேற்றமும் ஏற்படாது. இதை உரத்துக் கதைப்பதற்கு யாரும் இல்லை.

எமக்கு கிடைக்க வேண்டிய திட்டதை மாற்றாமல் எமது எதிர்கால இளைஞர்களின் நல்ல நிலையை கருத்தில் கொண்டு குறித்த நிதியை திரும்பிச்செல்ல விடாது தடுத்து எமக்குரிய கட்டடத்தை அமைத்து தர அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


44

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



## கொழும்பு தமிழ் அரசியல் தலைமையிடம் சரணாகதியடைந்த செல்வம் அடைக்கலநாதன்

சர்வதேச விசாரணையை நடத்த எவருக்கும் உரிமை இல்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதையடுத்து சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஈ.பி. ஆர்.எல்.எப். புளொட், ரெலோ ஆகியன கூட்டாக அறிக்கை விட்டன. முக்கூட்டுக் கட்சிகள் சேர்ந்து விடுத்த இவ்வறிக்கை கூட்டமைப்பில் இருக்கக்கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு



பயத்தைக் கொடுத்தது.

அதாவது இலங்கை அரசுடன் சேர்ந்து செயற்படுவது என்று தாம் நினைத்திருக்க சர்வதேச விசாரணையை மூன்று கட்சிகளும் வலியுறுத்தியதால் நிலைமை மோசமாகி விடுமோ என்று தமிழரசுக் கட்சித் தலைமை பயந்தது.

இதன் காரணமாக முக்கூட்டில் இருக்கக்கூடிய ரெலோவைப் பிரித்தெடுத்துவிட்டால் கூட்டாக அறிக்கை விடுவது நின்று போகும் எனக் கருதிய கூட்டமைப்பின் தலைமை, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனை பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராக நியமனம் செய்வதற்கு ஏற்பாடு செய்தது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்று முதலாவது பாராளுமன்ற அமர்வு 01.09.2015 அன்று கூடியபோது செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராக நியமனம் பெற்றார். அவ்வளவு தான்.

அந்தப் பதவியோடு செல்வம் அடைக்கலநாதன் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமையிடம் சரணாகதியடைந்து விட்டார் என்பதுதான் உண்மை.

இவற்றின் மத்தியில் 03.09.2015 அன்று எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தர் பதவியேற்றார். ஆக, எந்தப் பதவிக்காக நெடு நாள் காத்திருந்ததோ அந்தப் பதவி இரா. சம்பந்தரை வந்து சேர்ந்தது.

உண்மையான- நேர்மையான வழிகளில் இன்றி ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் ஒன்றுபட்டு இணங்கி இரா. சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குவதன் மூலம் தாங்கள் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்ற அடிப்படையில் சம்பந்தருக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப் பட்டது.

இது மத்தியில் நடக்க, வடக்கு மாகாண சபையில் ஒரு முக்கியமான தீர்மானம் மன்றுக்கு வருகிறது. ஆம், 01.09.2015 அன்று வடக்கு மாகாண சபை ஒரு கனதியான தீர்மானத்தை நிறைவேற்றுகிறது. தமிழின அழிப்புக்கு நீதி கிடைக்க சர்வதேச பொறிமுறை- சர்வதேச விசாரணை அவசியம் என்ற தீர்மானத்தை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் வடக்கு மாகாண சபையில் பிரேரணையாகக் கொண்டு வர, அதனை மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் வழிமொழிய, சபை ஏகமனதாக அத்தீர்மானத்தை நிறைவேற்றியது.

இவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஐ.நா. சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழின அழிப்புக்கு நீதி கிடைக்க சர்வதேசப் பொறிமுறை கட்டாயமானது என்ற தீர்மானத்தை வடக்கு மாகாண சபை நிறைவேற்றியபோது, தென்பகுதியில் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான பிரசாரம் வெடித்தது.

விக்னேஸ்வரனுக்கு எதிராகச் சிங்களத்தில் பாடல்கள் இயற்றப்பட்டு அவை முகநூல்களில் வெளியிடப்பட்டன.

கூடவே, வடக்கு மாகாண சபையைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கை தென்பகுதி அரசியல்வாதிகளிடம் இருந்து எழுந்தன.

எதுவாயினும் மேற்படி எதிர்ப்புக்களை எல்லாம் தனியொரு மனிதனாக இருந்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் எதிர்கொண்டார் என்பது மறுக்க முடியாத உண்மை.

எதுவாயினும் 2015 ஒகஸ்ட் 17 இல் பொதுத்தேர்தல் நடந்து முடிந்து இலங்கை பாராளுமன்றம் 01.09.2015 அன்று பிரதமர் ரணில் தலைமையில் கூடிய போது அதே நாளில் வடக்கு மாகாண சபை சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியமை ஒரு முக்கியமான விடயம் என்றே கூறவேண்டும்.

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றிய அதேவேளை சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழு (Tamil Action Committee for International Accountability Machanism- TACIAM) சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு எங்கும் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டது.

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நடத்தப்பட்ட கையெழுத்து வேட்டை வடக்கு, கிழக்கு எங்ஙனமும் நடந்தது. சர்வதேச விசாரணைக்குப் பங்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் தமிழ் மக்கள் மிகவும் உறுதியாக இருந்தனர்.

எங் களுக்கு இழைக்கப்பட்ட போர் அநீதிக்கு சர்வதேச விசாரணை ஒன்றுதான் நியாயம் தரும் என்ற கோசத்தோடு நடந்த இக்கையெழுத்து வேட்டை எழுச்சி பூர்வமாக நடைபெற்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதிர்ந்து போனது என்று தான் கூறவேண்டும்.

அதிலும் நல்லூர் முருகன் ஆலய மகோற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கோயில் வீதியில் தமிழர் செயற்பாட்டுக் குழு முகாமிட்டிருந்து கையெழுத்துப் பெறும் பணியை முன்னெடுக்க, பொதுமக்கள் தாமாக முன் வந்து கையெழுத்திட்டுச் சென்றனர்.

(வளரும்)

-புருசோத்தமன்-

# கிளிநொச்சியில் 84 நாட்களை கடந்தும் உறவுகளின் போராட்டம் நீடிக்கின்றது





(பரந்தன்)

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 84ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டமே இரவு பகலாக தொடர்கின்றது. (2-5-312)

# 43 மழைநீர் சேகரிக்கும் நீர்த்தாங்கிகள் கையளிப்பு

பூநகரி பிரதேச செயலக பிரிவில் இலங்கை மழைநீர் சேகரிப்பு ஒன்றியத்தின் (USAID) நிறுவன நிதி உதவியுடன் தலா 75ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 43 மழைநீர் சேகரிக்கும் நீர்த்தாங்கிகள் கையளிக்கும் நிகழ்வு கடந்த வாரம் கிளி/பூநகரி மட்டுவில் நாடு அ.த.க.பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது மேற்படி ஒன்றியத்தின் அலுவலர் ருத்திரா கருத்துத் தெரிவிக்கையில், ஆலங்கேணி கிராம அலுவலர் பிரிவிற்கு பொதுமக்களின் பாவனைக்கு 20 மழைநீர் சேகரிக்கும் தாங்கிகள் மட்டுவில் நாடு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 20 மழைநீர் சேகரிக்கும் தாங்கிகள், கிளி/ பூநகரி மட்டுவில் நாடு அ.த.க. பாடசாலை, கிளி/பூநகரி கரம்பன் கிராய் அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு தலா ஒவ்வொன்றும் பூநகரி பிரதேச அரசினர் வைத்திசாலைக்கு நோயாளர் நலன் கருதி 16 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட ஒரு மழைநீர் சேகரிக்கும் நீர்த்தாங்கி என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக மழைநீர் சேகரிப்பு ஒன்றியத்தின் அலுவலர் தெரிவித்துள்ளார். (2-5-84)




# ஊற்றுப்புலம் பாலம் சேதம் தொடர்பில் அதிகாரிகள் கவனத்தில் கொள்வார்களா?




கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பிரதான வீதியில் அமைந்துள்ள ஊற்றுப்புலப் பாலம் பயன்பாட்டிற்கு உதவாத வகையில் மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த வீதியில் அமைக்கப்பட்ட பாலம் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்தில் தகர்க்கப்பட்டது.

மக்கள் மீள்குடியமர்வின் பின்னர் குறித்த பாலம் புனரமைக்கப்பட்டது. தற்போது பாலம் சேதமடைந்து காணப்படுவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைப் பார்வையிட்டு புனரமைத்துத் தருமாறு பொதுமக் கள், பயணிகள் கேட்டுள்ளனர். (2-5-272)

# காணாமல் போனோரின் உறவுகளை சந்தித்தனர் பாராளுமன்ற உறுப்பினர்கள்



வவுனியாவில் போராட்டத்தினை மேற்கொண்டு வரும் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்ந்தும் சுழற்சி முறையில் நேற்று 80 ஆவது நாளாகவும் மழை, வெயில் என்பவற்றை பொருட்படுத்தாது தற்காலிக தகரக் கொட்டகைக்குள் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

கையளிக்கப்பட்ட தமது உறவினர்களை விடுவிக்கக் கோரியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும், பயங்கரவாதச் சட்டத்தை நீக்குமாறு கோரியும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சி ஊடகப் பேச்சாளர் துளசி ஆகியோர் சென்று பார்வையிட்டதுடன் அவர்களுடன் கலந்துரையாடினர். இதன்போது தீர்வு கிடைக்கும் வரை இச்சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.(2-5-250)

# போலியான அனுமதிப்பத்திரங்களுடன் மணல் கடத்திய வாகனங்கள் கைப்பற்று

(பூநகரி)

போலி அனுமதிப்பத்திரங்களைத் தயாரித்து பூநகரி பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மணல் கடத்திய கும்பல் ஒன்றை பூநகரி–சங்குப்பிட்டி சோதனைச்சாவடியில் வைத்து பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபில பண்டார தலைமையில் விரைந்த குழுவினர் போலி அனுமதிப் பத்திரத்துடன் கடத்துவதற்கு தயாரான நிலையில் இருந்த இரண்டு லோட் மணல், டிப்பர்களை கைப்பற்றியதுடன் இரு சந்தேக நபர்களையும் கைது செய்து பூநகரி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இரு சந்தேக நபர்கள் மீதும் பூநகரி பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். இரு சந்தேகநபர்களும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் நாட்களில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் இரண்டு லோட் மணல், வாகனங்களும் மேற்படி நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-5-84)

# 30 குடும்பங்களுக்கு வாழ்வுடைமை ஊக்குவிப்பு



வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 500 ரூபா நிதி உதவியுடன் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் துரைராசா ரவிகரனின் ஒழுங்கமைப்பில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் நல்லின முட்டையிடும் கோழிக் குஞ்சுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேச கால் நடை பராமரிப்பு வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வடக்கு மாகாண சபையின். விவசாய அமைச்சின் நிதியொதுக்கீட்டில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 5 புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 25 மாக மொத்தம் 30 குடும்பங்களுக்கு தலா 4 ஆயிரத்து 250 ரூபா படி மொத்தம் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியுடைய ஒரு மாத வயதுடைய சேவல் இனக்கோழிக் குஞ்சுகளை து. ரவிகரன் வழங்கி வைத்துள்ளார். (2-5-15)

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால்

# மன்னார் வேலைத்திட்டங்கள் குறித்து ஊடகவியலாளருக்கு விளக்கமளிப்பு

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள். மன்றத்தின் இவ் வருடத்திற்கான ஊடக மகாநாடு கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ரி.பூலோகராஜா தலைமையில் இடம்பெற்ற குறித்த ஊடகவியலாளர் மாநாட்டில் விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாவட்ட பணிப்பாளர் என்.எம்.முனவ்பர் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதேச இளைஞர் சேவை அதிகாரிகள், நிஸ்கோ முகாமையாளர் சைமன் சில்வா, கணக்காளர் ஜோன் பொஸ்கோ உட்பட மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பிரதேச இளைஞர் சேவை அதிகாரிகளூடாக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

எனினும் மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினூடாக வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பில் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு உரிய நேரத்தில் தெரியப்படுத்துவதில்லை. எல்லா நிகழ்வுகளையும் தொகுத்து அறிக்கையாக ஊடகவியலாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற போது முழுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கலந்து கொண்ட மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும் குறித்த ஊடகவியலாளரின் கருத்தை ஏற்றுக்கொண்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாவட்ட பணிப்பாளர் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது. மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினூடாக மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து வேலைத்திட்டங்கள் குறித்தும் ஊடகவியலாளர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என அவர் இளைஞர் சேவைகள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5-4)

# 75ஆவது நாளாகவும் தொடர்கிறது போராட்டம்




(பனிக்கன்குளம்)

தமது வாழ்வாதார பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமெனில் பூர்வீக நிலத்தை இராணுவம் மீள வழங்கவேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மக்கள் முன்னெடுத்துள்ள தொடர் போராட்டம் இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் நேற்றுடன் 75 ஆவது நாளாக நடைபெற்று வருகின்றது. 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி இந்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்று வருகின்றது. இராணுவத்தினர் தமது காணிகளில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கும் மக்கள் தாம், சொந்த நிலத்தை இழந்து நாளாந்த கூலித் தொழிலாளிகளாக வாழ்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளனர். தமது நிலத்தில் வாழ்ந்தபோது மீனவக்குடும்பங்களும் விவசாயக் குடும்பங்களும் பண்டமாற்று பொருளாதார முறையை கடைப்பிடித்து ஒற்றுமையாக வாழ்ந்ததாக மக்கள் குறிப்பிட்டனர்.

இறுதி யுத்தம் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டு எட்டு வருடங்கள் நிறைவடையவுள்ள நிலையிலும் மக்களின் காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-281)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க இணைவோம்

(பனிக்கன்குளம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்' நிகழ்வை வெவ்வேறு இடத்தில் அரசியல் வாதிகளின் நிகழ்வுகளாக நடத்தக் கூடாது. நடத்த வேண்டாம் என பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் முல்லைத்தீவு ஊடக அமையம் அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் கொடூர யுத்தம் நடைபெற்று பல ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்ட இறுதிநாளான மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளாக உலகெங்கும் வாழும் தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப் படுகிறது.

இந்த நாள் பாதிக்கப்பட்ட மக்களால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க இடமளித்து தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து முள்ளிவாய்க்காலில் ஒரே இடத்தில் நடத்துவதோடு பாதிக்கப்பட்ட மக்களை முன்னுரிமைப்படுத்தி ஆதரவாக நிற்க வேண்டுமே தவிர பல கட்சிகளும் முள்ளிவாய்க்காலில் வேறு வேறு இடத்தில் அரசியல்வாதிகளின் நிகழ்வுகளாக நடத்தக் கூடாது.

கடந்த காலங்களில் முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் முள்ளிவாய்க்காலில் வெவ்வேறு இடங்களில் பல கட்சிகளும் நிகழ்வுகளை நடத்தியதன் விளைவாக மக்கள் எந்த இடத்தில் நிகழ்வுக்கு செல்வது என்று கூட தெரியாது அல்லறப்பட்டதனையும் அரசியல்வாதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு நிகழ்வுகள் நடத்தப் பட்டன. எனவே "உயிரிழுந்த உறவுகளை அஞ்சலிக்க வலி சுமந்தவர்களாக ஓரணியில் ஒன்றிணைவோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-281)




## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

# கடந்த வருடத்தை விட இவ்வருடம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவிப்பு

(முள்ளியவளை)

ஈழ மண்ணில் நடந்தேறிய மிகப் பெரும் மனிதப் பேரவலப் படுகொலையின் 8 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இம்முறை முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை முள்ளிவாய்க்கால் மே 18 நினைவேந்தல் நிகழ்வுகள் கடந்த 2015, 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தொடர்ச்சியாக வடக்கு மாகாண சபையினால் அனுஷ்டிக்கப்பட்டு வந்த நிலையில் இவ் வருடமும் கடந்த வருடங்களை விட மேம்பட்ட நிலையில் இந் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வை அனைத்து தமிழ் உறவுகளும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

குறிப்பாக முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் கடந்த வருடம் நடைபெற்ற இடத்தில் இடம் பெறுமென அவர் அறிவித்தார்.

பேருந்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதால் ஓரிரு தினங்களில் பேருந்து சேவைகள் தொடர்பில் அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதன்ஏற்பாடுகள் அனைத்தும் தீவிரமாக நடைபெறுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (2-5)

## வடக்கு மாகாணத்தில்

# 12 ஆயிரத்து 210 மாற்றுவலுவுடையோருக்கு இதுவரை உதவிக் கொடுப்பனவு கிடைக்கவில்லை

(மல்லாவி)

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் மாற்று வலுவுடையோர் 16 ஆயிரத்து 213 பேர் உள்ள நிலையில் 4 ஆயிரத்து 3 பேருக்கு மட்டுமே மாதாந்தம் 3000 ரூபா உதவிக் கொடுப்பனவு சமூக சேவைகள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் வழங்கப் பட்டு வரும் நிலையில், இந்த உதவி பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள மாற்று வலுவுடையோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நாட்டில் இடம் பெற்ற யுத்த சூழ்நிலைகளாலும் மற்றும் ஏனைய வழிகளாலும் மாற்றுத் திறனாளிகளாக்கப்பட்டவர்கள் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் 16 ஆயிரத்து 213 பேர் பல்வேறு துன்பத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் முற்று முழுதாக உடல் வலுவிழந்த நிலையிலும் மற்றும் பகுதி அளவில் உடல் வலுவிழந்த நிலையிலும் ஆயிரக்கணக்கான மாற்றுத் திறனாளிகள் பொருளாதார ரீதியாக உதவித் திட்டங்கள் இன்றி, பிறரின் தயவில் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு சமூக சேவைகள் அமைச்சின் ஊடாக வழங்கப்படும் உதவித் திட்டங்கள் மிகவும் குறைவாக உள்ளது.

இந் நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 413 மாற்றுத் திறனாளிகள் வாழும் நிலையில், 672 பேருக்கு மட்டுமே 3 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 672 மாற்றாற்றல் கொண்டோர் வாழும் நிலையில், 474 பேருக்கு மாத்திரமே 3 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப் படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 15 மாற்றாற்றல் கொண்டோர் வாழும் நிலையில் 425 பேருக்கு மட்டுமே 3 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 622 மாற்றாற்றல் கொண்டோர் வாழ்ந்து வரும் நிலையில், 422பேருக்கு மாத்திரமே 3 ஆயிரம் ரூபா உதவித்தொகையாக வழங்கப்படுகின்றது.


யாழ்ப்பாண மாவட்டத்தில் 6 ஆயிரத்து 491 மாற்றாற்றல் கொண்டோர் வாழ்ந்து வரும் நிலையில், 2 ஆயிரத்து 10 பேருக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

ஒட்டு மொத்தமாக 16 ஆயிரத்து 213 மாற்றாற்றல் கொண்டோர் வாழ்ந்து வரும் நிலையில், 4 ஆயிரத்து 3 பேருக்கு மட்டுமே 3 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படும் நிலையில், மீதமாகவுள்ள 12ஆயிரத்து 210 பேருக்கு இந்த உதவித் தொகை கிடைக்காத நிலையில் காணப்படுகின்றது.

எனவே வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி. வி. விக்கினேஸ்வரன் எங்களின் நிலை தொடர்பில் மத்திய அரசின் சமூக சேவைகள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்கவுடன் கலந்துரையாடி வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் 3 ஆயிரம் ரூபா உதவித் தொகை கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள மாற்று வலுவுடையோர் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (2-5-15)

# மூலஸ்தானக் கதவு உடைக்கப்பட்டு அம்மனின் பொட்டுத் தாலி திருட்டு

## சேற்றுக்கண்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலில் சம்பவம்



(மல்லாவி)

கிளிநொச்சிமுரசுமோட்டை பகுதியில் அமைந்துள்ள சேற்றுக்கண்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக கிளிநொச்சிபொலிஸில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கோவில் பூசை முடிந்த பின்னர் நேற்று முன்தினம் மாலை கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் நேற்று காலை ஆலயத்திற்குப் பூசகர் சென்ற போது ஆலயத்தின் மூலஸ்தான கதவுகள் உடைக்கப் பட்டிருந்ததை அவதானித்தார்.

இதன் போது உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருட்டு போயுள்ளதாகவும் மூலஸ்தான கதவு உடைக்கப்பட்டு அம்மனின் பொட்டுத்தாலி உள்ளிட்டவை சூறையாடப்பட்டுள்ளதாகவும் அம்மனுக்கு அணியப் பட்டிருந்த தங்க நகைகள் கள வாடப்பட்டு இருந்ததாகவும் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளைகுறித்தகோவிலில் 2015 ஆம் ஆண்டு இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றதாக பூசகரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-5-312-15)

# வேலைக்குச் சென்ற எனது தாய் இன்றுவரை வீடு திரும்பவில்லை

## கலங்கிய கண்களுடன் மகள் ஏக்கம்

(பனிக்கன்குளம்)

கடந்த 2010 ஆம் ஆண்டு வவுனியாவில் கடைக்கு வேலைக்குச் சென்ற எனது தாயார் இன்று வரை வீடு திரும்பவில்லை. கடைக்குச் சென்ற என் அம்மா எங்கே? என தனது தாயைத்தொலைத்த மகள் கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துள்ள தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுடன் 69 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

நாட்டில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் இராணுவத்திடம் சரணடைந்த நிலையிலும், மற்றும் கடத்தப்பட்டும் காணாமல் போகச் செய்யப்பட்டுள்ள உறவுகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைதீவு மாவட்ட செயலகம் முன்பாக முன்னெடுத்துள்ள தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுடன் 69 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.


இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிறுமியொருவர் வவுனியாவில் கடைக்கு வேலைக்கு சென்ற வேளை காணாமல் போன தனது தாய் எங்கே? என கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து வவுனியா செட்டிகுளம் ZONE-04 முகாமில் வாழ்ந்த போது தனது 3 பிள்ளைகளையும் வளர்ப்பதற்காக வறுமை காரணமாக வவுனியா கச்சேரியில் சிற்றுண்டிச்சாலைக்கு வேலைக்குச் சென்றவர் 2010.07.20 ஆம் திகதி வேலைமுடித்து திரும்பியவர் இன்றுவரை வீடு திரும்பவில்லை எனது தாய் எங்கே? என மகள் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை தனது மகள் காணாமல் போனதிலிருந்து இன்று வரை அவருடைய பிள்ளைகளை வளர்ப்பதற்கு பெரிதும் கஷ்டப்படுவதாகவும் கச்சான் வித்தே பிள்ளைகளை வளர்ப்பதாகவும் தனக்கு 66 வயதாகி விட்டதாகவும் தன்னால் உழைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தனது மகளை விரைவில் தன்னிடம் ஒப்படைக்குமாறும் தாயார் கோரியுள்ளார். (2-5-281)

# குமுதினி கொலைக்களத்தின் ஞாபகப் பதிவுகள்




ஆழ்கடலின் ஆதிக்கத்திற்கு அடங்கி விடாமல் கற்பார்கள் காவல் செய்ய பனையும், பூவரசும் மற்றும் விருட்சங்களும் துணையிருக்க கல்வேலி அழகை மெருகூட்ட நிம்மதித் தூக்கமிடும் சுந்தர பூமி எம் நெடுந்தீவு.

நீண்ட கடல் வெளியால் பிளவுண்டு கிடப்பினும் எம்மவரின் சிந்தனைகளும் செயல் வடிவங்களும் ஓங்கி ஒலித்தபடி என்றும் இருக்கும். சுனாமியால் கூட தொடமுடியாமற் போன தேசத்தின் சொந்தங்கள் மீதே ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து ஐந்தாம் ஆண்டு வைகாசி மாதம் பதினைந்தாம் திகதி (1985. 05.15) அந்த வரலாற்றுத் துயரம் மேற்கொள்ளப்பட்டது.

ஈழத்தமிழரை மட்டுமன்றி உலகமே உறைந்து போன நாளாகிய துடன் விடுதலை வேட்கையை மேலும் வீறு கொள்ள வைத்த வரலாற்றுச் சம்பவமாகவும் அமைந்திருந்தது.

நாளாந்த கடமைகளின் பொருட்டு அன்றைய நாளும் அப்பாவித் தனமாகப் பயணம் ஆரம்பமானது. குழந்தைகள், தாய்மார்கள், அரச உத்தியோகத்தர்கள், பெரியவர்கள் என 60 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்த குமுதினி பரந்த கடல்வெளியில் நிறுத்தப்பட்டது.

பயணிகள் கரை வந்து விட்டதா என எட்டிப் பார்த்த வேளை சிறிய படகு ஒன்றில் வந்தவர்கள் குமுதினிப் படகில் ஏறிக் கொண்டனர்.

சோதனையிட வேண்டும் எனக் கூறி எல்லோரையும் பின்பக்க அறைக்கு (Compartment) செல்லும் படியும் பணித்து பின் ஒவ்வொருவராக முன் அறைக்கு (1st Compartment) வரவழைக்கப்பட்டு கத்தி, கோடரி, கொட்டன்கள் என்பவற்றால் அடித்தும் வெட்டியும் கொத்தியும் சித்திரவதை செய்து சரித்தமை மறக்க முடியாத சோகமாக அமைந்தது.

கடமையே கண் என வாழ்ந்து காட்டிய அதிபர் திருமதி புஸ்பராணி வேலுப்பிள்ளை, ஆசிரியர் க.சதாசிவம், குமுதினியின் பிரதானி தேவசகாயம் பிள்ளை, இ.போ.ச. ஊழியர்களான ந. கந்தையா, ச.கோவிந்தன் மற்றும் கூ.கார்த்திகேசு என பல அரச உத்தியோகத்தர்களுடன் பெரியவர்கள், குழந்தைகள் கர்ப்பிணிப் பெண் உட்பட ஈவிரக்கமின்றி யாவரும் குதறப்பட்டனர். இரத்த வெள்ளத்தில் தத்தளித்த இவர்களில் முப்பத்தாறு (36) பேர் கொலை வெறிக்கு இரையாகினர். ஏனையவர்கள் உயிர் தப்பினாலும் நீண்ட கால நோயாளிகளாகவே அவர்களால் வாழ முடிந்தது.

இனவாத அரசியலின் கோரமும், கோழைத்தனமும் வெளிப்படுத்தப்பட்ட இச் சம்பவம் தமிழ் இன விடியலுக்காக இளைஞர்களை வீறு கொள்ள வைத்த வரலாற்றுத் தடங்களில் முதன்மையானதெனலாம். சுமுகமான ஒரு சூழ்நிலை நிலவும் போது குடும்ப உறவுகளோடு இணைந்திருக்க வேண்டியவர்கள் இன்று இல்லை என்பதை எண்ணிப் பார்க்கையில் இது எத்தனை கொடுமையானது என்பது புரியும்.






வெட்டுவதும் கொத்துவதும் வேரோடு சாய்ப்பதுவும் இனவாத சக்திகளுக்கு இது புதியதல்ல. குமுதினியில் மட்டுமல்ல குருநகரிலும் இதே கொடுமை நிகழ்ந்தது.

**கவிஞர் கண்ணில் குமுதினி**

சமகால கவிஞர்களால் குமுதினிப் படுகொலை கவி வரிகளில் வெளிவந்தன. கவிஞர் புதுவை ரத்தின துரை அவர்கள் "குமுதினிப் படகில் யார் வெட்டினார்கள்.... குருநகர் கடலில் ஏன் கொத்தினார்கள்... என்றும் நயினைக் கவி குலத்தின் கார்த்திகேசு என்னவானாள்...'' என்று நீளும் கவி அவலமும் புங்குடுதீவு கவிஞர் சு.வில்வரத்தினத்தின் ''காலத்துயர்'' கவிதையூடாக முட்களை வெட்ட ஏந்திய வாள்கள் மலர்களை, தளிர்களை, பிஞ்சுகளை கனிய நின்ற தோப்புகளை வெட்டி எறிந்த குருதிக் காட்டில் எது பூக்கும்? என்ற ஏக்கமும் என்றும் எம் தீவு மக்களின் நாடித் துடிப்பின் அடையாளங்களாய் நீண்டு செல்லும்.

**திருப்புமுனை நோக்கி...**

செல்லரித்துப் போன தேச கட்டுமானங்களில் எம்மவரின் இழப்புக்கள் நிலையானவை. இனவாத அரசுகளை ஆட்டங்காண வைத்த வரலாற்றுப் பதிவுகளில் ஒரு முக்கிய திருப்புமுனை. ஈழ விடுதலை வரலாற்றில் என்றும் ஈரம் காயாத வரிகளாய் நிலைத்து நிற்பது குமுதினி படுகொலை. அன்று அரச படைகளின் கோரத் தாண்டவத்தால் குதறப்பட்டோரை ஒன்றுபட்ட "இளைஞர் அணிகளும்" பொதுமக்களும் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததால் அநேகமானோர் காப் பாற்றப்பட்டனர்.

**நினைவு தினமும் நினைவாலயமும்**

இறந்தோரின் நினைவாக சமய வழிபாடுகளுடன் ஊர்வலங்களும் நினைவுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. "இளம்பறவைகள் கலாமன்றம்" எனும் அமைப்பு நினைவாலயம் அமைப்பதற்கான முதல் முயற்சியை செய்திருந்தது. காலப் போக்கில் பிரஜைகள் குழு, பிரதேச சபை போன்றன தற்போதைய நினைவாலயம் வரையான ஆக்கபூர்வ பணிகளை மேற்கொண்டிருந்தன எனலாம்.

முப்பத்திரெண்டு (32) வருடங்கள் நிறைவடையும் இன்றைய நாள் வரை பேசு பொருளாகவே குமுதினி அமைந்திருக்கிறது.

**குமுதினியின் சேவையும் தேவையும்**

குமுதினி படகு இற்றைக்கு சுமார் 80 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. இன்று வரை அது சேவை செய்து வருகிறது. இடையில் பழுதானால் பத்திரிகைகள் சோக கீதம் பாடுவதைக் கேட்கலாம். அத்தனை முக்கியத்துவம் குமுதினிக்கு உண்டு.

காற்றும் மழையும்
வெயி லும் கொடு மழையும்
ஏற்று எமைச் சுமக்கும்
குமுதினித் தாய்
கூற்றுவரின் கூட்டக்
கொடுங்கத்தி வாள்
முனையில்
வீழ்ந்தாள் கடல்வெளி
யில்
உப்புதிருங்காற்றின்
உதவியுடன் கரை சேர
செத்தவராய் போனோம்
நாம்
அவளோ...
சாகாவரம் எடுத்தாள்
மீண்டும் எமைச் சுமக்க

குமுதினியின் வயது எண்பதைத் தாண்டினாலும் இத் துன்பியல் இன்றுடன் முப்பத்திரண்டு ஆண்டுகளை கடந்து நிற்கின்றது. எமது வாழ்வின் நெருக்கீடுகளையும் தடைகளையும் உணர்ந்து கொள்ளும் ஒரு நாளாக இன்றைய நாள் அமையும் . குமுதினிக்குள் நடந்த இந்த சோகங்களைப் போல் குமுதினியும் பல சோகங்களைச் சுமந்தும் நெடுந்தீவு மக்களை சுமந்து கரைசேர்க்கும் தாயாக பாரிய பொறுப்பை செய்து வருகின்றாள்.

ஈரமின்றி இறுகிப் போன மனித மனங்களுக்கு வாழ்வின் வலியையும் வழியையும் வீணப்புக்களையும் சொல்லும் வளமான ஆசானாய் இன்றும் எம்முடனே வலம் வரும் குமுதினியாள் என்றும் அவளே துணை என்ற நினைப்புகளுடன் எம்மவரின் கடல் வழிப் பயணம் தொடர்கின்றது.

கோ.பத்மநாதன்
நெடுந்தீவு.



# பட்டதாரிகளுக்கு நியமனங்கள் குறித்து கிழக்கில் விசேட அமைச்சரவைக் கூட்டம்

## முதலமைச்சர் நஷீர் அஹமட் தெரிவிப்பு



(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனங்கள் தொடர்பான கிழக்கு மாகாண அமைச்சரவையின் விஷேட கூட்டம் நாளை மறுதினம் மே மாதம் 17ஆம் திகதி இடம்பெறுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஷீர் அஹமட் தெரிவித்தார்.


பட்டதாரிகளின் நியமனம் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"என்னென்ன பாடங்களுக்காக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற விபரங்களைப் பெறும் வேலைகள் அடுத்த ஓரிரு நாட்களில் ஆரம்பித்து விடும். அதற்கான பணிப்புரைகள் ஏற்கெனவே உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு விட்டன.

அத்துடன் வேலைவாய்ப்பின்றி போராட்டத்தில் ஈடுபடும், பட்டதாரிகளுக்கு நியமனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தற்போது வேறு அரச தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பட்டதாரிகள் மாகாணசபையால் கோரப்படவுள்ள விண்ணப்பங்களின் போது குறித்த விண்ணப்பங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

உடனடியாக 1000 பேரும், பின்னர் கட்டங்கட்டமாக ஏனைய அனுமதி வழங்கப்பட்ட 3784 பேரும் நியமனம் செய்யப்படவுள்ளார்கள். இதன் மூலம் கிழக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் முழுமையாக நிரப்பப்படுவதோடு ஆசிரியர் பற்றாக்குறையும் முற்றாக நீங்கி விடும்" என முதலமைச்சர் நஷீர் அஹமட் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை - மலேசிய பிரதமர்கள் சீனாவில் நேற்று சந்தித்து பேச்சு



சீனாவின் தலைநகர் பீஜிங்கில் நடைபெறும் ஒரே கரையோரம் - ஓரே பாதை என்ற மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மலேசிய பிரதமர் நஜீப் ரசாக் உடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இருநாடுகளுக்கிடையலான நல்லுறவை மேம்படுத்துவது தொடர்பில் நேற்று பிற்பகல் இருவரும் கலந்துரையாடினார். (இ-7)

# ரணிலின் கோரிக்கையின் பிரகாரமே மலையகத்துக்கு 10 ஆயிரம் வீடுகள்

## பிரதமர் அலுவலகம் உரிமை கோரல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளின் பிரகாரமே மலையக மக்களுக்கு 10 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு இந்தியா முன்வந்துள்ளது என்று பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் டில்லி சென்றிருந்தார். இதன்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்த சந்திப்பின்போதே மலையக மக்களுக்காக மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 10 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்ற உறுதிமொழியை மலையக மக்களுக்கு வழங்கியுள்ளார்.

நோர்வூட் மைதானத்தில் மக்கள் மத்தியில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் மோடி, இந்திய அரசின் உதவியுடன் மலையகத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் 4 ஆயிரம் வீடுகளுக்கு மேலதிகமாக 10 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படும் என்று அறிவிப்பை விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திருடிய மாடு பொலிஸாரிடம்



(கரணவாய்)

திருடிச் செல்லப்பட்ட மாடு ஒன்றை பொலிஸாரின் ரோந்து வாகனத்தைக் கண்டதும் கைவிட்டுவிட்டு தப்பியோடியுள்ளார். நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நெல்லியடிப் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது துன்னாலைப் பகுதியில் மாடு ஒன்றை கொண்டுவந்தவர்கள் பொலிஸாரைக் கணடதும் தப்பியோடியுள்ளனர்.

மாட்டைப் பொலிஸ் நிலையம் கொண்டு வந்த பொலிஸார் அதன் உரிமையாளர் இருந்ததால் உரிய ஆதாரத்தைக் காட்டி பெற்றுக் கொள்ள முடியும் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# ஐ.தே.கவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீடிக்க சு.க. இன்னும் தீர்மானிக்கவில்லை

## டிலான் பெரேரா கூறுகிறார்

ஐக்கிய தேசியக் கட்சியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீடிப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தீர்மானிக்கவில்லை என்றும் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்தாலோசிக்க வேண்டிய தேவை உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

பிரதான கட்சிகள் ஒன்றிணைந்து வெற்றிகொள்ளவுள்ள பிரதான விடயங்கள் நிறைவடையும் வரையில் இணைந்து செயற்படுவது ஆரோக்கியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கைச்சாத்திட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் பூர்த்தியாகவுள்ளது. இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளது என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

குழுதினிப்படகு படுகொலையின் 32ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று...

# குமுதினியால் குமுறல்

நீண்ட தொரு நீலக் கடலன்னை
நாளும் தனைத் தாலாட்டி
கரைசேர்க்கும் நினைவுடனே குமுதினியாள் காலை தன்
பயணத்தை தொடர்ந்திட்டாள்
சிந்தனையில் சிக்காத
சிதைப்பொன்று நடுக்கடலில்
நரிகளின் கூட்டத்தால்
தந்திரமாய் நடந்தேறியது
பக்குவமாய் பயணிகளை
பதட்டமின்றி கதைபேசி
தாம் எண்ணி வந்த
தாண்டவத்தை கச்சிதமாய் முடித்தனர்
உயிரற்ற உடலங்களை
தம்மடியில் சுமந்து கொண்ட
குமுதினியாள்...
நீரோட்டத் துணையோடு
கரைசேர்ந்த நாளிதுவாம்
கால நீரோட்டம்
கனதியாய் போன போதும்
மாறவில்லை எம்மனதில்
குமுதினியாள் குமுறியதை.

(கண்ணன் நெடுந்தீவு)

# நாகர் கோவிலில் ஆட்டோ தீக்கிரை

(கரணவாய்)

வடமராட்சிக் கிழக்கு நாகர் கோவில் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோ ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த ஆட்டோவை அப்பகுதியில் உள்ள ஒருவர் நாகர் கோவில் கிழக்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தியுள்ளார்.

அவ்வாறு நிறுத்தப்பட்டிருந்த இவ் ஆட்டோ நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகபொலிஸில்முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

# குடும்பஸ்தர் மீது தாக்குதல் முயற்சி

## பொலிஸில் தஞ்சம்

(கரணவாய்)

பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்து விட்டு வீடு திரும்ப முற்பட்ட குடும்பஸ்தரை ஆறுபேர்கொண்டகும்பல்தாக்க முற்பட்டதால் நேற்று முற்பகல் பருத்தித்துறை பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கற்கோவளம் பகுதியில் சில வாரங்களிற்கு முன்னர் ஆட்டோ ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது. இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து நான்கு பேரை முற்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் அவர்களின் வீட்டின் மீது கற்கள் வீசப்படுவதனால் அவர்களின் முறைப்பாட்டை பருத்தித்துறை பொலிஸில் செய்துவிட்டு வீடு திரும்ப முற்பட்ட போது பொலிஸ் நிலையத்தில் இருந்து 120 மீற்றர் தூரத்தில் வைத்து அவரை ஆறு பேர் கொண்ட கும்பல் தாக்க முற்பட்டமையை அடுத்து அவர் பொலிஸில் பாதுகாப்பு தேடி ஓடி தஞ்சம் புகுந்துள்ளார். தாக்க முற்பட்டவர்கள் மீது பல முறைப்பாடுகள் பருத்தித்துறை பொலிஸில் உள்ளதாக பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன. (இ-60)

# ஜெயலலிதாவின் சமையல்காரரை கொலை செய்ய முயற்சி



(சென்னை)

ஜெயலலிதாவின் கார் சாரதி மரணம், கொடநாடு காவலாளி கொலையைத் தொடர்ந்து, ஜெயலலிதாவின் சமையல்காரரையும் கொலை செய்யும் முயற்சி நடந்துள்ளது.

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கொடநாடு பங்களா காவலாளி கொலை செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து கொலை, கொள்ளையில் ஈடுபட்டதாக கூறப்படும் ஜெயலலிதாவின் கார் சாரதி கனகராஜ் விபத்தில் மரணம் அடைந்தார்.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் ஜெயலலிதாவின் சமையல்காரராக இருந்தவரை கொலை செய்யும் நோக்கில் தலையில் அரிவாளால் வெட்டியுள்ளனர். சிவகங்கையை சேர்ந்தவர் கே.பஞ்சவர்ணம் இவர் 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரை ஜெயலலிதாவின் வீட்டு சமையல்காரராக பணியாற்றியவர். ஜெயலலிதாவின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றவர் சமையல்காரர் பஞ்சவர்ணம்.

பஞ்சவர்ணத்தின் பேரனுக்கு பெயர் சூட்டியதே ஜெயலலிதா தான். இவரது மகன் ப.முருகேசன் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையில் உதவி மக்கள் தொடர்பு துறை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

தற்போது சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையில் உதவி மக்கள் தொடர்பு துறை இயக்குநராக இருக்கிறார். சைதாப்பேட்டையில் தந்தை பஞ்சவர்ணம் மற்றும் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார்.

நேற்று முன்தினம் காலையில் பஞ்சவர்ணம் நடைப்பயிற்சி செய்து விட்டு, வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். அப்போது 5 பேர் கொண்ட கும்பல் அவரை சுற்றி வளைத்தது.

பயங்கர ஆயுதங்களுடன் அவரை தாக்கியது. இதில் பஞ்சவர்ணத்தின் தலையில் அரிவாள் வெட்டு விழுந்தது. அவரது அலறல் சத்தத்தை கேட்டு அருகே இருந்தவர்கள் வருவதற்குள் அந்தக் கும்பல் தப்பிச் சென்று விட்டது.

உயிருக்கு ஆபத்தான நிலையில் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் பஞ்சவர்ணத்துக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பணம் கொடுக்கல் வாங்கல் தகராறில் இந்த தாக்குதல் நடந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜெயலலிதாவின் கார் சாரதி கனகராஜ் விபத்தில் மரணமடைந்த பரபரப்பு அடங்குவதற்குள் சமையல்காரரை கொலை செய்யும் நோக்கில் வெட்டப்பட்டது மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

# தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி 3 மாதம் நீடிப்பதே சந்தேகம்

## திருமாவளவன் கணிப்பு

(நெல்லை)

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி 3 மாதம் நீடிப்பதே சந்தேகம் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் மற்றும் அனைத்துக்கட்சிகள், இயக்கங்கள் சார்பாக பாளையில் நேற்று முன்தினம் பேரணி - பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூடங்குளத்தில் அணு உலை பூங்கா அமைக்கக் கூடாது, அணு உலைக்கு எதிராக போராடியவர்கள் மீதான வழக்குகளை திரும்ப பெற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடந்த இந்த நிகழ்ச்சிக்கு அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தலைமை தாங்கினார்.

மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி மாநில செயலாளர் குமாரசாமி பேரணியை தொடங்கி வைத்தார். இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். கூடங்குளத்தில் கொண்டு வரப்பட்ட அணுமின் நிலையத்தை முதலில் கேரளாவில் தொடங்க மத்திய அரசுதிட்டமிட்டது. அங்குள்ள மக்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் கடுமையாக போராடியதன் விளைவாக அங்கு இத்திட்டம் கைவிடப்பட்டது.

ஆனால் கூடங்குளத்தில் மக்கள் நடத்திய போராட்டத்திற்கு எம்.பி., எம்.எல்.ஏக்கள் மற்றும் தி.மு.க., அ.தி.மு.க. ஆதரவு இல்லாததால் இங்கு அணுஉலை அமைக்கப்பட்டுள்ளது.

அணு உலையினால் மக்களுக்கு மிகப்பெரிய ஆபத்து உள்ளது. இதுபற்றி போதிய விழிப்புணர்வு இல்லை. அணுஉலையில் இருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது என்று அரசு கூறுகிறது.

ஆனால் அணுஉலையில் மின்சாரம் தயாரிக்க பயன்படும் யுரேனியத்தை பிளப்பதால் ஏற்படும் சக்தியின் மூலம் மின்சாரம் தயாரித்து விட்டு அதன் கழிவுகள் மூலம் அணுஆயுதங்கள் தயாரிக்கலாம்.

இதற்காக அணு கழிவுகள் பயன்படுகிறது. வல்லரசு நாடுகளும் இதைத்தான் எதிர்பார்க்கின்றன. இங்கு பயன்படுத்துகின்றன எந்திரங்கள் ரஷ்யாவில் உபயோகப்படுத்தப்பட்டு கழற்றப்பட்டவை. எனவே அது தரமானதாக இல்லை. இதனால் தான் அணு உலை சரியாக இயங்கவில்லை.

மத்திய பா.ஜனதா அரசு சமூக நீதியை அழிக்க நினைக்கிறது. தமிழகத்தில் மதவாதத்தை உருவாக்கி ஆட்சியை பிடிக்க முயற்சி செய்கிறது.



தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி முழுமையாக நீடிக்கும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கூறுகிறார். ஆனால் மூன்று மாதங்கள் நீடிப்பதே சந்தேகம் இங்கு அ.தி.மு.க. ஆட்சி பா.ஜனதாவின் பினாமி ஆட்சியாக நடக்கிறதெனத் தெரிவித்தார்.

கூட்டத்தில் மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா, எஸ்.டி.பி.ஐ. தலைவர் தெக்கலான் பாகவி, மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினர், அமைப்பினர் கலந்து கொண்டனர். (இ-7)




# சசிகலா, தினகரன் இன்றி அ.தி.மு.க. செயற்படாது

## நாஞ்சில் சம்பத் கூறுகிறார்

(தேவகோட்டை)

சசிகலா, தினகரன் இல்லாமல் அ.தி.மு.க. செயற்படாது என்று தேவகோட்டையில் நாஞ்சில் சம்பத் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் அ.தி.மு.க. அம்மா அணி சார்பில், டி.டி.வி. தினகரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பொதுக்கூட்டம் நடந்தது. நகர இணைச் செயலாளர் முருகன் தலைமை தாங்கினார். கர்நாடக மாநில செயலாளர் புகழேந்தி, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நாஞ்சில் சம்பத், நடிகர் குண்டு கல்யாணம் உள்ளிட்ட பலர் பேசினர்.

அம்மா முதல்வராக இருந்த போது நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களில் பங்கேற்றார். அவர் உடல்நிலை சரியில்லாததை வெளிக்காட்டாமல் உற்சாகத்துடன் பங்கேற்றார்.

தான் சோர்ந்து விட்டால் தொண்டர்களும் துவண்டு விடுவார்கள் என்று கருதி எப்போதும் உற்சாகமாக காணப்பட்டார்.

ஓ.பி.எஸ்.சுக்கு மருத்துவத்தை பற்றி என்ன விபரம் தெரியும்? அவருக்கு ஜெயலலிதாவின் சாவின் மர்மத்தை கேட்க என்ன அருகதை உள்ளது?

ஜெயலலிதா 75 நாட்கள் மருத்துவமனையில் இருந்த போது, 74 தலைவர்கள் வந்து பார்த்தார்கள். அவ்வாறு இருக்கும் போது ஜெயலலிதா மரணம் எப்படி மர்மமாக இருக்கும்?

சசிகலா மற்றும் தினகரன் மீது புகார் சொல்லும் பன்னீர்செல்வத்திற்கு தண்டனை கொடுக்க பொது மக்களிடமும், இளைஞர்களிடமும் நீதி கேட்க வந்துள்ளேன்.

அமைச்சர் மா.பா. பாண்டியராஜன் எப்போது எந்த கட்சியில் இருப்பார் என்று யாருக்கும் தெரியாது. ஒவ்வொரு பக்கமும் காற்று அடிக்கும் போது அவர் ஒவ்வொரு கட்சிக்கும் சென்று விடுவார். இவர் அ.தி.மு.கவை விமர்சிக்க என்ன அருகதை உள்ளது?

அ.தி.மு.கவை காப்பாற்ற வந்தவர் தான் தினகரன். இவர்தான் நிதி அமைச்சர் என்று சொன்ன அமைச்சர்கள், இன்று ஏன் மௌனமாக இருக்கிறார்கள்?




ஓ.பி.எஸ். தமிழகத்தில் அநாதையாக திரியும் காலம் வெகு விரைவில் வர உள்ளது. தினகரன் மௌனமாக இருப்பது, தமிழகத்தில் பெரிய மாற்றத்தை உருவாக்கும்.

திகாரில் இருந்து தினகரன் விடுதலையாகி வரும் போது ஒரு கோடி தமிழர்கள் அவரை வரவேற்பார்கள். நிலத்தை நிராகரித்து விட்டு தண்ணீர் செல்லாததைப் போல சசிகலா - தினகரன் இல்லாமல் கட்சி செயற்படாதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சசிகலாவின் விசுவாசியாக தம்பித்துரை செயற்படுகிறார்

## முன்னாள் அமைச்சர் முனுசாமி குற்றச்சாட்டு

(தர்மபுரி)

தர்மபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா அணி சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நேற்று நடந்தது.

இதில் முன்னாள் அமைச்சரும், ஓ.பன்னீர் செல்வம் ஆதரவாளருமான கே.பி. முனுசாமி திறந்து வைத்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது.

அ.தி.மு.கவின் சட்ட திட்டங்கள் அனைத்தும் தெரிந்திருந்தும் தம்பித்துரை உண்மையை மறைத்து சசிகலாவுக்கு விசுவாசமாக செயற்படுகிறார்.

தம்பிதுரையின் உண்மையான தலைவர் சசிகலா தான். சசிகலா மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் உள்ள விசுவாசத்தால் அ.தி.மு.க.வின் சட்ட திட்டங்களை திருத்தி சசிகலாவை பொதுச் செயலாளராக தேர்ந்தெடுத்தனர்.

சசிகலாவை தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச் செயலாளர் என்று தம்பித்துரை அடிக்கடி கூறி வருகிறார். புரட்சி தலைவர் எம்.ஜி.ஆரும், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவும் அ.தி.மு.கவில் பொதுச் செயலாளரை தேர்ந்தெடுக்கும் முழு உரிமையும் அடிப்படை தொண்டனுக்கு மட்டும் தான் உள்ளது என்று கூறியுள்ளனர். அந்த உண்மை நிலையை மறைத்து சுயநலத்திற்காக அவர்களாகவே அறிவித்தது தான் சசிகலா நியமனம்.

சசிகலாவும் அவரது குடும்பமும் முழுமையாக அ.தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும். ஜெயலலிதாவின் மீது உண்மையான பாசம் கொண்டவர்கள் அவரை தலைவராக ஏற்றுகொண்டவர்கள் அனைத்து தொண்டர்களின் எண்ணமும் இதே தான்.

மக்களால் ஆதரவு பெற்ற தலைமைதான் வேண்டும் என விரும்புகின்றனர். ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் ஆட்சி தொடரவேண்டும் என்று மக்களும் தொண்டர்களும் விரும்புகின்றனர்.

சேலத்தில் நடந்த ஓ.பன்னீர்செல்வம் பொதுக் கூட்டத்தில் முதலமைச்சர், எம்.எல்.ஏ. தவிர அனைத்து நிர்வாகி கள், தொண்டர்கள் பங்கேற்றனர். உண்மையான அ.தி.மு.க. சேலத்தில் திரண்டதை காண முடிந்தது. தற்போது நடைபெறுவது ஜெயலலிதா ஆட்சி இல்லை.

ஜெயலலிதாவின் மரணம் குறித்து உண்மையை வெளிப்படுத்தவே சி.பி.ஐ. விசாரணையை கேட்கிறோம். சசிகலா மூலம் முதலமைச்சர் ஆனவர் தான் எடப்பாடி பழனிச்சாமி. அவரை நாங்கள் முதலமைச்சராக ஏற்றுக்கொள்ள முடியாது.

எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் செயற்பட்டு வரும் இந்த அரசின்கீழ் எந்த நிர்வாகமும் செயற்படாமல் உள்ளது. சசிகலா வின்பினாமி அரசாகவே எடப்பாடி பழனிச்சாமி அரசு செயற்பட்டு வருகிறது.


அ.தி.மு.கவின் அணிகள் இணைய வேண்டும் என்பதை கட்சியின் உண்மையான தொண்டர்களும், ஜெயலலிதாவால் அடையாளம் காட்டப்பட்ட அமைச்சர்கள் உள்ளிட்டோரும் விரும்புகின்றனர். விரைவில் அ.தி.மு.க. அணிகள் இணைந்து தமிழகத்தில் நல்லாட்சி தொடர இருப்பதை யாராலும்தடுக்க முடியாதென அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வடகொரியாவின் மீது வலுவான தடை!

# உலக நாடுகளுக்கு அமெரிக்கா அழைப்பு

(வோஷிங்டன்)

**உலக நாடுகளின் கண்டனங்களை பொருட்படுத்தாது வடகொரியா நேற்று நடத்தியுள்ள ஏவுகணைச் சோதனையால் கடும் கோபத்திலுள்ள அமெரிக்கா அந்நாட்டிற்கு எதிராக வலுவான தடைகளைக் கொண்டு வர உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.**





வட கொரியா நேற்றுக் காலை 5.27 மணிக்கு வட மேற்கு பியாங்யாங்கில் உள்ள குசாங் பகுதியில் மீண்டும் புதிய ஏவுகணை சோதனை நடத்தியது.

வடகொரியாவின் இந்த சோதனையை ஆத்திரமூட்டும் செயல் என விமர்சித்துள்ள வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர், "வடகொரியாவிற்கு எதிராக வலுவான பொருளாதார தடைகளை உலக நாடுகள் கொண்டுவர வேண்டும். தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் வட கொரியாவின் செயலை உன்னிப்பாக கவனித்து வருகிறது.

வட கொரியாவினால் அப்பகுதியில் நீண்ட கால அச்சுறுத்தல் நிலவி வருகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

வட கொரியா நேற்று நடத்தியுள்ள சோதனையில் பயன்படுத்தப்பட்ட ஏவுகணை, ஜப்பான் எல்லையை தாண்டி ரஷ்யா வரை சென்று தாக்கும் எனவும் சீன் ஸ்பைசர் தெரிவித்துள்ளார். (இ)

## போஸ்னியாவில் சிறியரக விமானத்தில் தீ விபத்து

### ஐந்து பேர் உயிரிழப்பு

(சரஜீவோ)

போஸ்னியாவின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள மோஸ்டர் நகரில் நேற்று முன்தினம் சிறிய ரக விமானத்தில் திடீரென தீ பிடித்தது. நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து அதில் பயணம் செய்த ஐந்துபேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

விமான விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் தீயணைப்பு துறையினர் மற்றும் மீட்புக்குழுவினர் விரைந்து வந்தனர்.

விபத்தில் விமானத்தில் பயணம் செய்த மூன்று குழந்தைகள் உட்பட மொத்தம் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமானத்தில் திடீரென தீப்பிடித்தது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து எவ்வித தகவலும் இல்லை. மோஸ்டர் விமான நிலையத்தில் ஓபன் டோர்டேவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

## சரியான சூழலில் அமெரிக்காவுடன் பேசுவோம்- வடகொரியா அறிவிப்பு

(சியோல்)

சரியான சூழல் அமையும் போது, அமெரிக்காவுடன் பேசுவோம் என்று அமெரிக்க விவகாரங்களை கவனிக்கிற வடகொரியாவின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் தலைமை இயக்குநர் தெரிவித்தார்.

வடகொரியா அணு ஆயுத சோதனைகளிலும், நவீன ஏவுகணைகள் சோதனைகளிலும் ஈடுபட்டு வருவதால், அந்த நாட்டுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே பனிப்போர் நிலவி வருகிறது.

இருப்பினும், "சரியான சூழல்அமைந்தால்வடகொரிய ஜனாதிபதி கிம்ஜாங்உன்னை சந்தித்துப் பேசுவேன் அதை கௌரவமாக கருதுவேன்" என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், வட கொரியாவில் அமெரிக்க விவகாரங்களை கவனிக்கிற வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் தலைமை இயக்குநர் பொறுப்பிலுள்ள சோ சன் ஹூய், சீனத்தலைநகர் பீஜிங்கில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் பேசினார்.

அப்போது அவரிடம், "ட்ரம்ப் நிர்வாகத்துடன் பேசுவதற்கு வடகொரியா முன்வருமா?" என நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதிலளிக்கையில், "அதற்கான சரியான சூழல் அமையும்போது, அமெரிக்காவுடன் பேசுவோம்" என்று கூறினார்.

இதேபோன்று தென் கொரியாவில் புதிதாக பதவி ஏற்றுள்ள ஜனாதிபதி மூன் ஜே இன் உடன் பேசுவதற்கு வடகொரியா தயாரா?" என்றும் அவரிடம் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர், "பார்ப்போம்" என பதிலளித்தார். (இ)

## பழைமையான பிரமிட்டுகளிலிருந்து 17 புதிய 'மம்மி'கள் கண்டெடுப்பு





(கெய்ரோ)

உலக அதிசயங்களில்ஒன்றான எகிப்து நாட்டிலுள்ள பிரமிட்டுகளிலிருந்து 17 'மம்மி' களை தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

எகிப்து நாட்டிலுள்ள பிரமிட்டுகள் ஆச்சரியங்களையும், அதிசயங்களையும் தன்னுடன் புதைத்துக்கொண்டுள்ளன. பழைமையான காலங்களில் மன்னர்கள் இறந்தவுடன் அவர்களது உடல்கள் பதப்படுத்தி இந்த பிரமிட்டுகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ளன.

பதப்படுத்தி புதைக்கப்பட்ட இந்த உடல்களானது மம்மி என ஆராய்ச்சியாளர்களால் அழைக்கப்படுகிறது. எப்போது, இங்கு மம்மிகள் கண்டறியப்பட்டதோ, அப்போது முதல் இந்த பிரமிட்டுகள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகளின் முக்கிய இடமாக திகழ்கின்றன.

இந்நிலையில், அந் நாட்டின் மத்திய பகுதியில் உள்ள டவுனா காபால் மாவட்டத்தில் இருக்கும் பழைமையான பிரமிட்டுகளில் 17 மம்மிகளை ஆராய்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். மம்மிகளுடன் தங்கத்திலான தகடுகளையும் கண்டறிந்துள்ளனர்.

இது குறித்து தெரிவித்துள்ள தொல்லியல் நிபுணர்கள், கண்டறியப்பட்ட மம்மிகள் அரச குடும்பங்களை சேர்ந்தது போல் இல்லை. ஆனாலும், இது ஒரு முக்கியமான, அவசியமான கண்டுபிடிப்பு. இப்பகுதியில் முதன் முறையாக மம்மிகள் கண்டறியப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் லுக்சோர் நகரத்தில் 3500 ஆண்டுகள் பழைமையான 8 மம்மிகள் கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)




## எதிர்ப்பை மீறி வடகொரியா புதிய ஏவுகணைச் சோதனை

(பியாங் யாங்)

உலக நாடுகள் எதிர்ப்பை மீறி வட கொரியா நேற்றுக் காலை 5.27 மணிக்கு மீண்டும்புதியஏவுகணைசோதனை நடத்தியது.

வடகொரியா தொடர்ந்து அணு குண்டு சோதனை, ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது.

தென்கொரியா அமெரிக்கா மற்றும் ஐ.நா. சபையும் கடும் எச்சரிக்கை மற்றும் பொருளாதார தடை விதித்தும் கண்டுகொள்ளவில்லை.

இதனால் கொரிய தீபகற்பகத்தில் போர் பதட்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே தென் கொரியாவில் ஜனாதிபதி தேர்தல் நடந்தது.

புதிய ஜனாதிபதியாக மூன் ஜெ-இன் பதவி ஏற்றார். தகுந்த நேரம் வரும் போது வட கொரியா சென்று ஜனாதிபதி கிம் ஜாங்-உன்னை சந்திப்பேன் என்று அறிவித்தார். இதன் மூலம் இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றம் குறையும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில்வட கொரியா நேற்றுக்காலை 5.27 மணிக்கு மீண்டும் புதிய ஏவுகணை சோதனை நடத்தியது. இச்சோதனை வட மேற்கு பியாங் யாங்கில் உள்ள குசாங் பகுதியில்இருந்துநடத்தப்பட்டது.

அங்கிருந்து ஏவப்பட்ட ஏவுகணை 2 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பாய்ந்து சென்று ஜப்பான் கடலில் விழுந்தது. இதற்கு முன்பு 2 வாரத்துக்கு முன்பு வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியது. அது தோல்வியடைந்தது.

இந்த ஏவுகணை கண்டம் விட்டு கண்டம்பாய்ந்துசென்று தாக்கக்கூடியது அல்ல என அமெரிக்க பசுபிக் கமாண்ட் தெரிவித்துள்ளது. வடகொரியா இது போன்ற 2 ஏவுகணைகளை தயாரித்துள்ளது. அது அமெரிக்காவை தாக்கும் திறன் கொண்டது.

புதியஏவுகணைசோதனை நடத்தப்பட்டது பற்றி வடகொரியா எந்தவித தகவலும் வெளியிடவில்லை. (இ-7)

## பேருந்து விபத்தில் சிக்கி துருக்கியில் 20 பேர் பலி!

(இஸ்தான்புல்)

துருக்கி நாட்டில் மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற பேருந்து பள்ளத்தில் சரிந்து விபத்து ஏற்பட்டதில் 20 பேர் பரிதாபமாக பலியாகினர்.


துருக்கி நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலாத்தளமான மார்மாரியா என்ற மலைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சுற்றுலா பயணிகளை ஏற்றிக் கொண்டு பேருந்து சென்றது.

மலைப்பாங்கான பகுதி என்பதால் பேருந்து சற்று தடுமாறி பயணம் செய்துள்ளது. திடீரென சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த பேருந்து வீதியின் ஓரத்தில் இருந்த தடுப்பை உடைத்துக் கொண்டு பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த கோர விபத்தில் 20 சுற்றுலாப்பயணிகள் சம்பவ இடத்திலேயே பரிதபமாக பலியாகினர். மேலும், விபத்து குறித்து தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக் குழுவினர் பேருந்தை அப்புறப்படுத்தி, படுகாயமடைந்த 12-க்கும் அதிகமானோர்களை அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். (இ)

# கறுப்பு வைகாசி

கறைபடிந்த கறுப்பு வைகாசி மாதம்
முள்ளிவாய்க்காலில் முடிந்த மனிதப் பேரவலம்
முட்கம்பி வேலிக்குள் முடங்கிய தமிழர் வாழ்வு
வல்வளைப்பால் எரிந்த எமதினிய வன்னிமண்
மனிதாபிமானப் போர் என்ற போர்வையில்
இலங்கை செய்த மனிதப்படுகொலை
சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன் நடந்த சங்காரம்
சாட்சிகள் இன்றியே தமிழர்களை அழித்தார்கள்
எறிகணை வீச்சுக்களால் எரிந்து சாம்பலானவர்கள்
வான்குண்டு வீச்சுக்களால் வகை தொகையின்றி
மாண்டோர் கொத்துக் குண்டுகளால் குடும்பமாய்
அழிந்தவர்கள்
பொஸ்பரஸ் குண்டுவீச்சால் புதைந்து மடிந்தவர்கள்
கை கால் இழந்தவர்கள் கருகி மாண்டவர்கள்
எடுத்துப் புதைப்பாரின்றி ஏதிலியாய் செத்தவர்கள்
மார்பில் குடித்த பால் மரணப் பாலாகவே
மாதாவுடன் சேர்ந்து மரணித்த குழந்தைகள்
தண்ணீர் கிடைக்காத உப்புக் கடலோரம்
தாகத்தால் நாவறண்டு செத்தவர்கள்
எத்தனையோர்
அடிபட்டுச் செத்தவர்கள் அதிர்ச்சியால்
மாண்டவர்கள்
மருந்து கிடைக்காமல் மரணித்துப் போனவர்கள்
சரணடையப் போனோரையும் சங்காரம்
செய்தார்கள் இறந்த தமிழ்ப் பெண்களையும்
நிர்வாணமாக்கி
இன்பம் அனுபவித்த இனவாதப் பேய்கள்
இலட்சத்திற்கு மேல் தமிழரைக் கொத்துக் கொத்தாக
கொன்று குவித்த கொலைவெறி வைகாசி.

கந்த பேரின்பன்



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் தமிழீழ தேசியக் கொடியை ஏற்ற பிரிட்டனில் கையெழுத்துப் போராட்டம்





முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நினைவெழுச்சி நாளில்தமிழீழதேசியக் கொடியை ஏற்றுவதற்கு ஆதரவு தெரிவித்து மாபெரும் கையெழுத்துப் போராட்டம் ஒன்று பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நினைவெழுச்சி நாளில்தமிழீழதேசியக் கொடியை ஏற்றுவதற்கு தொடந்து மறுப்புத் தெரிவித்து வரும் பிரித்தானிய தமிழர் பேரவை இம்முறையும் அதே முடிவை தலைமை எடுத்துள்ள காரணத்தினால் பேரவையில் உள்ள அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் எதிர்ப்பு தெரிவித்து இப் பிரச்சினையை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்காக தொடர்ச்சியான கையெழுத்துப் போராட்டத்தை கடந்த வாரம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் இக் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருபவர்களுள் ஒருவரான முன்னாள் போராளியாகிய சிவஞானம் ஜெகன் கருத்து தெரிவிக்கையில்,

கெடுபிடிகளுக்கும் இராணுவ அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் புலத்தில் தமிழீழ மக்கள் தமது இன அடையாளங்களுக்காகப் போராடி வரும் இந்தக்கால கட்டத்தில், எந்தத் தடைகளும் இல்லாத புலம்பெயர் தேசத்தில் தேசிய கொடியை ஏற்க மறுப்பது எமது இனத்துக்கு செய்யும் துரோகம். நாம் எந்த இன அடையாளங்களுக்கான எமது இளமையையும் அங்கங்களையும் இழந்து போராடினோமோ அந்த தியாகத்தையெல்லாம் பிரித்தானிய தமிழர்பேரவையின் தலைமை கொச்சைப்படுத்துவதாகவே உள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன் பிரித்தானியாவில் தடுப்பு முகாம்களில் இருப்பவர்கள் கூட இந்த போராட்டத்திற்கு முழுமையான ஆதரவு வழங்கி வருகின்றனர். அந்த வகையில் தடுப்புமுகாம்களில் உள்ளவர்களிடம் கையெழுத்துக்களைப் பெறும் பணிக்கு பொறுப்பாகவுள்ள பொன்ராசா கிறிஸ்ரிராஜ் கருத்து தெரிவிக்கையில்,

நான் 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இலங்கை அரசின் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராடி வருகிறேன். இதனால் கைது செய்யப்பட்டு சித்திரவதையும் அனுபவித்தேன். இருப்பினும் பிரித்தானியா வந்தும் எமது தேசியக் கொடி ஏந்தியே போராட்டங்களை மேற்கொண்டோம். ஆனால் இப்போது வெளிநாட்டு அரசியல்வாதிகளுடன் உல்லாச விருந்துகளை அனுபவிக்கும் சுயநல நோக்கில் தேசியக்கொடியை தவிர்க்க நினைப்பது மிகவும் வேதனையளிக்கிறது எனத் தெரிவித்தார்.

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட இக் கையெழுத்துப் போராட்டம் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் நடைபெற்று வருவதாகவும் இக்கையெழுத்துக்கள் வெகுவிரைவில் பிரித்தானிய தமிழர் பேரவை அமைப்புக்கு அனுப்பப்படும் எனவும் குறித்த நிகழ்வின் ஒருங்கிணைப்பாளரான கிரோஜன் துரையப்பா தெரிவித்தார். (இ-9)

# தொண்டர்களுக்காக கட்சியும் மக்களுக்காக ஆட்சியும் நடத்தப்படல் வேண்டும்

## ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்து



(சென்னை)

தொண்டர்களுக்காக கட்சியும், மக்களுக்காக ஆட்சியும் நடத்தப்படல் வேண்டும் என சேலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட அ.தி.மு.க. (புரட்சி தலைவி அம்மா) அணி சார்பில் எம்.ஜி.ஆர். பிறந்தநாள் நூற்றாண்டு விழா, கட்சி வளர்ச்சி குறித்த பொதுக்கூட்டம் சேலம் கோட்டை மைதானத்தில் நேற்று முந்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு மேட்டூர் தொகுதி எம்.எல்ஏ.செம்மலை தலைமை தாங்கினார்.

முன்னாள் அமைச்சர்கள் பாண்டியராஜன், கே.பி. முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், பொன்னையன், முன்னாள் சபாநாயகர் பி.எச். பாண்டியன், பி.ஆர்.சுந்தரம் எம்.பி. ஆகியோர் உட்பட பலர் முன்னிலை வகித்தனர். இந்தக் கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர செல்வம் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

1972ஆம் ஆண்டில் அ.தி.மு.கவை உருவாக்கியவர் எம்.ஜி.ஆர். அதன்பிறகு அவர் 3 முறை முதலமைச்சராக ஆட்சி கட்டிலில் இருந்துள்ளார். அவரது மறைவுக்கு பின் கடந்த 28 ஆண்டுகளாக கட்சியின் பொதுச்செயலாளராக ஜெயலலிதா இருந்தார்.

அந்த காலகட்டத்தில் அ.தி.மு.கவை அழித்து விட வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி பல்வேறு இன்னல்களை கொடுத்தார். ஆனால் அதையும் முறியடித்து இந்தியாவில் தலைசிறந்த தலைவராக ஜெயலலிதா இருந்துள்ளார்.

குறிப்பாக சொல்லப்போனால் எம்.ஜி.ஆர்.விட்டு சென்றபோது இந்த இயக்கத்தில் 17 இலட்சம் தொண்டர்கள் மட்டும் இருந்தார்கள். ஆனால் எம்.ஜி.ஆரின் மறைவுக்கு பிறகு 28 ஆண்டுகளில் பொதுச்செயலாளராக இருந்த ஜெயலலிதா, தற்போது அ.தி.மு.கவில் ஒரு கோடி தொண்டர்களை உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு.

அ.தி.மு.க. தொண்டர்கள் இயக்கமாகவும், ஆட்சி மக்கள் ஆட்சியாகவும் இருக்க வேண்டும் என்றும் ஒரு குடும்பத்தின் பிடியில் கட்சியும், ஆட்சியும் இருக்கக் கூடாது என்றும் எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா தெரிவித்து வந்தனர். ஆனால் அவர்கள் கண்ட இலட்சியம், பாதை இப்போது எங்கே சென்று கொண்டிருக்கிறது?

சசிகலா, தினகரன் என ஒரு குடும்பத்தின் பிடியில் கட்சி சென்றுவிட்டது. அதை எதிர்த்து தர்ம யுத்தம் தொடங்கப்பட்டது. கட்சியை மீட்டெடுக்க வேண்டும். கட்சியை ஒருபோதும் ஒரு குடும்பத்தின் பிடியில் அடகு வைக்க விடமாட்டோம். தொண்டர்கள் விருப்பம் எதுவோ? அதன்படியே எங்களது பயணம் இருக்கும்.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணத்தில் ஏற்பட்டுள்ள மர்ம முடிச்சு விலக்கப்பட் வேண்டும். அதை நாட்டு மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். இதற்காக அவரது மரணம் குறித்து நீதி விசாரணை அமைத்து மத்திய புலனாய்வு ஆணையம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தோம்.

ஆட்சியில் இருப்பவர்கள் 122 எம்.எல்.ஏக்களை வைத்துக்கொண்டு எப்படியும் இன்னும் 4 ஆண்டுகளுக்கு மெல்ல மெல்ல ஆட்சியை கொண்டு செல்ல வேண்டும் என்று நினைக்கிறார்கள். தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டவில்லை.

7 ஆயிரம் கோடியில் சென்னையில் தொழில் தொடங்க முடிவு செய்த கியாமோட்டார்ஸ் நிறுவனம் ஆந்திராவுக்கு சென்று விட்டது. இதனால் 27 ஆயிரம் பேருக்கு கிடைக்க வேண்டிய வேலை வாய்ப்பு பறி போயுள்ளது. தற்போது எந்த திட்டமும் செயற்படுத்தப்படவில்லை. செயலற்ற நிலையில்தலைமை செயலகம் உள்ளது. ஆட்சியில் இருப்பவர்களுக்கு எதை பற்றியும் கவலை இல்லை. சேலம் இரும்பாலையை தனியாருக்கு விற்பதை தடுக்க பிரதமரிடம் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி பேசவில்லை எனத் தெரிவித்தார். (இ)

# மைத்திரியா? மகிந்தவா? குழப்பத்தில் சு.கவினர்

இரண்டு பக்கங்களிலும் கால் வைத்திருப்போர் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு வார இறுதி பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தாம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் தொடர்ந்தும் நீடிப்பதா? அல்லது மகிந்த ராஜபக்ஷவின் பக்கம் செல்வதா? என்பதனை நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் தீர்மானிக்க வேண்டிய காலம் மலர்ந்துள்ளது.

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் சுதந்திரக்கட்சியின் தலைவர்கள் எனக் கூறிக் கொண்டு வேறும் கட்சித் தலைவர்களுடன் இணைந்து செயற்படுகின்றனர்.


எதிர்காலத்தில் இவ்வாறு இரண்டு பக்கமும் கால் வைத்திருப்போர் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியாது.

அவ்வாறு தேவை என்றால் அவர்கள் குறித்த கட்சியில் இணைந்து கொண்டு அந்தக் கட்சி உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள வேண்டுமென துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அம்பாந்தோட்டை துறைமுகம் குறித்து சீனாவுடன் உடன்படிக்கை வேண்டாம்

## பிரதமருக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி



(கொழும்பு)

**அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான எந்த விடயங்கள் தொடர்பாகவும் சீனாவுடன் புரிந்துணர்வு உடன்பாட்டைச் செய்து கொள்ளவேண்டாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஐந்து நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இந்தப் பயணத்தின் போது, சீனாவுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்படவுள்ளது.

அதேவேளை, சீனாவுக்குப் புறப்படுவதற்கு முன்னதாக, நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதியும் பிரதமரும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

இதன்போதே, அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையில், சீனாவுடன் அது தொடர்பான எந்த உடன்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

முன்னதாக, ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணத்துக்கு முன்னர் அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரதமர் நாடு திரும்பியதும் அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)

பிரதமர் சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர், அமைச்சரவையில் மாற்றம் இடம்பெறும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் காலை சீனாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடிய போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அமைச்சரவை மாற்றம் தொடர்பாக, ஐ.தே.கவுக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை இரவு ஜனாதிபதியைச் சந்தித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் சுதந்திரமான குழுவாக நாடாளுமன்றத்தில் அமரப் போவதாக தெரிவித்துள்ளனர்.

இரண்டு கட்சிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் முடிவடையவுள்ள நிலையிலேயே அவர்கள் இவ்வாறு கூறியிருந்தனர்.

எனினும், ஜனாதிபதி அந்த திட்டத்தை உறுதியாக நிராகரித்து விட்டதுடன், அவ்வாறு செய்தால் தாம் கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என்றும் எச்சரித்துள்ளார். (இ-7)

## அவசர அம்புலன்ஸ் சேவையை விரிவுபடுத்த 20 மில். டொலரை வழங்குகிறது இந்தியா

(கொழும்பு)

இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் அவசர நோயாளர் காவு வண்டிச் (அம்புலன்ஸ்) சேவையை விரிவுபடுத்துவதற்கு, இந்தியா 20 மில்லியன் டொலர்களை நன்கொடையாக வழங்கவுள்ளது.

இந்தியாவின் உதவியுடன் மேல் மற்றும் தென்மாகாணங்களில் அவசர நோயாளர் காவு வண்டிச் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தை இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு இந்தியா உதவும் என்று, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்திருந்தார்.

இதற்கமைய, அடுத்த ஒரு ஆண்டுக்குள் இந்த திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் இதற்காக 20 மில்லியன் டொலர் கொடையை இந்தியா வழங்கும் என்றும் பிரதி வெளி விவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கான 225 நோயாளர் காவு வண்டிகள் மற்றும் இதனை இயக்குவதற்கான 1500 பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் இந்தக் கொடையில் உள்ளடங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது மேல் மற்றும் தென் மாகாணங்களில் இந்திய அரசின் உதவியுடன், 89 நோயாளர் காவு வண்டிகள் 570 பணியாளர்களுடன் இயக்கப்பட்டு வருகின்றன. இதற்காக இந்தியா 7.5 மில்லியன் டொலரை வழங்கியிருந்தது.

2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தச் சேவை மூலம் 20 ஆயிரம் அவசர நோயாளர்களைக் காவும் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விரிவான அரசியல் கலந்துரையாடல்களை நடத்த டில்லிக்கு வருமாறு மகிந்தவுக்கு மோடி அழைப்பு

(கொழும்பு)

விரிவான அரசியல் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு, டில்லிக்கு வருமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார் என்று, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு வந்திருந்த இந்தியப் பிரதமருக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு நடந்த சந்திப்பின் போதே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

மூடிய அறைக்குள் இருவருக்கும் இடையில் நடந்த இந்தச் சந்திப்பின் போது அரசியல் குறித்து கலந்துரையாடப்படவில்லை. ஆனால், இந்தச் சந்திப்பு ஒரு மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்ததாக உயர் மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது மிகவும் சிநேகபூர்வமான, சுமுகமான கலந்துரையாடலாக இருந்தது. எனினும் அரசியல் பேசப்படவில்லை என்று, கொழும்பு ஆங்கில நாளிதழுக்கு மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி மூலம் நேற்று முன்தினம் பிற்பகல் தெரிவித்தார்.

பல்வேறு நாளிதழ்கள் இந்தச் சந்திப்பு ஒரு மணிநேரம் இடம்பெற்றதாக செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால் உண்மையில் எவ்வளவு நேரம் சந்திப்பு நடந்தது என்று என்னால் கூற முடியாது.

என்னென்ன விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்று நினைவுபடுத்த முடியவில்லை. ஆனால் அரசியல் பற்றி கலந்துரையாடப்படவில்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதேவேளை, விரிவான அரசியல் கலந்துரையாடலை நடத்துவதற்கு மகிந்த ராஜபக்ஷவை டில்லிக்கு வருமாறு இந்தியப் பிரதமர் அழைப்பு விடுத்தார் என்று கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்புக்காக மகிந்த ராஜபக்ஷவுடன் கோத்தபாய ராஜபக்ஷ, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இந்தியப் பிரதமருடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இந்திய வெளிவிவகாரச் செயலர் ஜெய்சங்கர், இந்தியத் தூதுவர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோரும் சந்திப்பில் பங்கேற்றனர்.

எனினும், கலந்துரையாடல் மண்டபத்தில், மூடிய அறைக்குள் மகிந்த ராஜபக்ஷவும், இந்தியப் பிரதமர் மோடியும் தனியாகப் பேச்சு நடத்தியதாகவும், ஏனையோர் வெளியே காத்திருந்தனர் என்றும், கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### உங்கள் அகராதியில்...

ஒவ்வொரு மனிதரும் தங்கள் மனதில் ஓர் அகராதி வைத்திருக்கிறார்கள். சிலர் அகராதியில் அர்த்தம் சரியாக இருக்கும். சிலர் அகராதியிலோ அர்த்தம் தலைகீழாக இருக்கும்.

''இதோ! ஒரே நிமிடத்தில் வந்திடறேன்!'' என்பார்கள் பதினைந்து நிமிடம் கழித்து வருவார்கள்.

''நீங்கள் முதல் பஸ்ஸைப் பிடித்துப் போங்கள்'' பின்னால் பஸ்சில் நான் வருகிறேன் என்பார்கள். மறுநாள் காலையில் தான்போய் இறங்குவார்கள்.

"எங்கள் வீட்டிலிருந்து நாலு வீடு தள்ளி அந்த வீடு'' என்பார்கள். பார்த்தால் நான்கு பர்லாங்கிற்கு மேல் இருக்கும். சிலர், "நான் இல்லாமல் உங்க வீட்டுக் கல்யாணமா?'' என்பார்கள். ஒரு வாழ்த்துக் கடிதம் கூடப் போடாமல் இருப்பார்கள்.

விளக்கம் கேட்டாலோ, " அட என்னங்க நீங்க, புரியாமல் பேசிக்கிட்டு! கல்யாணத்துக்குக் கூப்பிடுகிறவங்க கிட்ட நான் வர மாட்டேன்னு எப்படிங்க முகத்துக்கு நேராச் சொல்ல முடியும்? சௌகரியப்பட்டாப் போறது; இல்லேன்னா அவ்வளவுதாங்க!'' என்று விட்டேத்தியாகப் பதில் சொல்லுவார்கள்.

''அந்தக் காரியத்தை முடிச்சுத் தர நானாச்சு'' என்றும் ஆய் ஊய் என்றும் அளப்பார்கள்.

காரியம் ஆகவில்லையே எனப் போய்ப் பார்த்தால், " நம்ம கையில என்னங்க இருக்கு? எல்லாம் விதிப்படி தாங்க நடக்கும்'' என்று வேதாந்த சித்தாந்தங்களை அள்ளி வீசுவார்கள்.

"அது விடயமா லெட்டர் போடப்போடறேங்க. லெட்டரை பார்த்துட்டுப் புறப்பட்டு வாங்க'' என்பார்கள் . அவர்கள் மன அகராதியில் உனக்கு லெட்டரே போடமாட்டேன்யா என்பது உண்மையான அர்த்தமாக இருக்கும்.

பொதுவாக உள்ள அகராதிப்படி தான் நம் மனதிற்குள்ளும் அர்த்தம் இருக்க வேண்டும். யாரும் தனித்தனியே அகராதி வைத்துக் கொள்ள வேண்டாம்.

ஒரு நிமிடத்தில் வந்து விடுகிறேன் என்று சொல்பவர் , உண்மையில் எவ்வளவு நேரம் ஆகுமோ அதையே சொல்லலாம்; தவறில்லை.

அடுத்த பஸ்சை பிடித்து வருகிறேன். முடியாவிட்டால் நாளை வருகிறேன் என்று வெளிப்படையாச் சொல்லலாமே! ஏன் சம்பந்தா சம்பந்தம் இல்லாமலும் முரண்பாடாகவும் நடந்து கொள்ள வேண்டும்?

மற்றவர்களுக்கு ஆக வேண்டிய காரியங்களில் இறங்கும் போது, என்னாலான முயற்சி உண்டு என்று சொன்னால் போதுமே ! ஏன் எவரஸ்டில் சுலபமாக ஏறுவேன் என்று நம்பிக்கையூட்ட வேண்டும்?

திருமணத்திற்கு அழைப்பவர்களிடம் , ''வேலைகள் நிறைய இருக்கின்றன. வர வேண்டும் என்பது தான் என் விருப்பம்'' என்று சொன்னால் போதாதா?

பேச்சுக்கும் செயலுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளை நாம் எப்போது தான் குறைத்துக் கொள்ளப் போகிறோம்?

நம் பேச்சை நாமே மதிக்காவிட்டால் எப்படி?

**லேனா தமிழ்வாணன்**

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2017-14.06.2017



மனத்தைரியத்தால் காரியங்களை செயற்படுத்தும் சிம்ம இராசி அன்பர்களே!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சூரியன், தொழில் ஸ்தானத்தில் யோகாதிபதி செவ்வாயோடு இணைந்திருக்கிறார். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வரவேண்டிய பாக்கிகள் இந்த மாதத்தில் வந்து சேரும். தடைப்பட்ட ஒப்பந்தங்கள் தானாக கிடைக்கலாம். இடைப்பட்ட காலத்தில் வந்த எதிரிகள் விலகுவர்.

அர்த்தாஷ்டமச் சனி வக்ர இயக்கத்தில் இருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். இதுவரை ஏற்பட்ட மருத்துவச் செலவு இனி குறையும். ஆரோக்கியத் தொல்லை அகலும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். உடன் பிறப்புகளுக்கு ஆதரவு கொடுப்பீர்கள். இடம், பூமியால் இலாபம் கிடைக்கும் நேரமிது. சனி வக்ர இயக்கமாக இருந்து செவ்வாயைப் பார்ப்பதால், பூர்வீக இடங்களை விற்று பொருளாதார வசதியைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

5,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருபகவான் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். எனவே பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. அவர்களின் கல்வி நலன் கருதி எடுத்த முடிவு அனுகூலமாகும். அதற்காக சிறிது தொகையை செலவிடும் சூழ்நிலை உண்டு.

குருவின் பார்வை உச்சம் பெற்ற சுக்ரன் மீது பதிவதால் திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தெய்வீக சிந்தனை அதிகரிக்கும். பட்டும், படாமலும் பழகிய உறவினர்கள் இனி பக்கபலமாக இருந்து உதவி செய்ய முன்வருவர்.

ஜென்மத்தில் ராகுவும், 7இல் கேதுவும் இருப்பதால் நன்மைகள் நடக்க வேண்டுமானால் நாகதோச நிவர்த்திக்குரிய பரிகாரங்களை முறையாகச் செய்வது நல்லது. சப்தம ஸ்தானத்தில் கேது இருப்பதால் வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் வராமல் பார்த்துக்கொள்வது நல்லது. குடும்ப ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள்.

இம்மாதத்தில் வரும் விசாக நட்சத்திரமன்று விரதமிருந்து, முருகப்பெருமான் ஆலயத்திற்குச் சென்று ஜோடி தீபம் ஏற்றி அர்ச்சனைகள் செய்வது நல்லது. வைகாசி விசாகத்தன்று வடிவேலனை வழிபட்டால் கைநிறைய பொருள் குவியும் என்பது நம்பிக்கை.

## வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும்


மிதுன செவ்வாய் சஞ்சாரம்

மே 26ஆம் திகதி மிதுன இராசிக்கு, செவ்வாய் செல்கின்றார். 4,9 இற்கு அதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். இடர்பாடுகள் விலகும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து இணைவர்.

முன்னோர் வழி சொத்தில் முறையான ஆதாயம் கிடைக்கும். அசையா சொத்து சேரும். தொழில் வளர்ச்சி கூடும்.

திருப்பம் தரும் புதன் பெயர்ச்சி

உங்கள் இராசிக்கு தன லாபாதிபதியாக விளங்கும் புதன், மே 27ஆம் திகதி ரிஷப இராசிக்கு செல்கிறார். அதன் பிறகு ஜூன் 12ஆம் திகதி




மிதுனத்திற்கு செல்கிறார். ரிஷபத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழிலை விரிவு செய்ய மூலதனங்கள் கிடைக்கும். வங்கிகளின் ஒத்துழைப்போடு வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளி வந்து சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவார்கள். மிதுனத்தில் புதன் சஞ்சரிக்கும் நேரம் மிகுந்த யோகமான நேரமாகும். தொட்டது துலங்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும்.

மேஷ சுக்ரன் சஞ்சாரம்

இதுவரை உச்சம் பெற்ற சுக்ரன், மே 28ஆம் திகதி மேஷ இராசிக்குச் செல்கிறார். 9ஆம் இடத்தில் சுக்ரன் உலா வரும்பொழுது பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். புகழ்கூடும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். மண், பூமி வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். மக்கட்பேறு கிடைக்கும் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டு முயற்சி கைகூடும். புதிய தொழில் வாய்ப்புகள் வந்து சேரும். இம்மாதம் அர்த்தாஷ்டமச் சனி வலிமை இழந்திருப்பதால் சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

முன்னேற்றம் அதிகரிக்கும் மாதம் இது. பொருளாதார நிலை உயரும். புதிய பாதை புலப்படும். வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். வாங்கிய வீட்டை விற்று விட்டோமே என்று கவலைப்பட்டவர்களுக்கு மீண்டும் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. மனக்குழப்பங்கள் அகலும். தாய் வழி ஆதரவு திருப்தி தரும். கணவன்-மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். குழந்தைகளின் முன்னேற்றம் பெருமைப்படத்தக்க விதத்தில் அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கலாம். பொதுவாழ்வில் புகழ் கூடும். வியாழன்தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. வாய்ப்பு இருப்பவர்கள் ஆறுபடை வீட்டில் ஒரு படை வீட்டிற்குச் சென்று, அழகன் முருகனை வழிபட்டு வருவதன் மூலம் அனைத்து யோகங்களும் வந்து சேரும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



தெய்வ நம்பிக்கையில் அதிக பற்றுக் கொண்ட கன்னி இராசி அன்பர்களே!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே குரு பகவான் வக்ரம் பெற்றிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் குருவின் பார்வை 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் மீதும் பதிகிறது. எனவே, முக்கிய திருப்பங்கள் பலவற்றையும் சந்திக்கும் மாதமாக இம்மாதம் அமையப் போகிறது. முகஸ்துதிக்காக பழகியவர்கள் உங்களை விட்டு விலகுவர். தொழில் வளர்ச்சி நன்றாக இருக்கும். துணிந்து நீங்கள் எடுத்த முடிவு மற்றவர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

உங்கள் இராசிக்கு 12இல் ராகுவும், 6இல் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். எனவே பயணங்கள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு நீண்ட தூரத்திற்கு மாறுதல் கிடைக்கலாம். உத்தியோகத்தில் சிலருக்கு சக ஊழியர்களின் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு புதிய இடத்தில் பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கும். ஜென்ம குருவின் காலத்தில் அடிக்கடி இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் வந்து கொண்டே இருக்கும். வரும் மாற்றங்களைப் பரிசீலித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

சகோதர ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பதால் உடன்பிறப்புகளின் வழியே பிரச்சினைகள் உருவாகலாம். அதிலும் சனியை, செவ்வாய் பார்ப்பதால் ஒருசில குடும்பங்களில் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுக்கும். பஞ்சாயத்துக்களுக்கு சகோதர வர்க்கத்தினர் கட்டுப்படுவார்களா? என்பது சந்தேகம் தான். தன்னம்பிக்கையோடும், தைரியத்தோடும் செயற்பட வேண்டிய நேரமிது.

முரண்பாடான கிரகங்களின் பார்வை பலம் பெற்று இருப்பதால், முன்னேற்றங்களில் தடை ஏற்படாமலிருக்க வராஹி அம்மனை வழிபடுவது நல்லது. அதுமட்டுமல்லாமல் வைகாசி விசாகத்தன்று முருகப்பெருமான் சந்நிதியில் கந்தசஷ்டி கவசம் பாடி ஜோடி தீபம் ஏற்றி வழிபாடு செய்யுங்கள். நீங்கள் செய்யும் பரிகாரங்கள், காரியத் தடையில் இருந்து ஓரளவாவது விடுபட வைக்கும்.

## புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்

மிதுன செவ்வாய் சஞ்சாரம்

மே 26ஆம் திகதி மிதுன இராசிக்கு, செவ்வாய் செல்கிறார். இக் காலத்தில் உடல் ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படலாம். தொழில் வளர்ச்சியில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளமாட்டார்கள். ஒரு கடனை அடைக்க, மற்றொரு கடனை வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து செய்ய வேண்டிய நேரமிது.

பொன்னான புதன் பெயர்ச்சி

மே 27 ஆம் திகதி ரிஷப இராசிக்கு, புதன் செல்கிறார். பிறகு ஜூன் 12 இல் மிதுன இராசிக்குப் புதன் செல்கிறார். இதன் விளை




வாக நல்ல வாய்ப்புகள் உங்களைத் தேடி வரப் போகிறது. இராசிநாதன் 9 இல் சஞ்சரிக்கும் பொழுது ஒளிமயமான எதிர்காலம் அமைய உங்களுக்கு உத்தரவாதம் கிடைக்கும். தந்தை வழியில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். இதுவரை பாசம் காட்டாத பெற்றோர்கள் இப்பொழுது பாசம் காட்ட முன்வருவர்.

மிதுன புதன் சஞ்சாரத்தின் பொழுது, நன்மையே வந்து சேரும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

மேஷ சுக்ரன் சஞ்சாரம்

மே 28 ஆம் திகதி மேஷத்திற்கு, சுக்ரன் செல்கிறார். இக்காலத்தில் விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றம் முதல் நாடு மாற்றம் வரை அவரவர் சுய ஜாதகத்திற்கு ஏற்ற விதத்தில் அமையும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு கிடைக்கும். அத்தியாவசியப் பொருட்களை மட்டுமல்லாமல் ஆடம்பரப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். பெண் குழந்தைகளின் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும் இம்மாதத்தில், ஜென்ம குருவால் நன்மைகள் கிடைக்க குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வரவும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய மாதம் இது. ஜென்ம குருவின் ஆதிக்கத்தால் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டாலும், மனநிம்மதி இருக்காது. உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். உடன்பிறப்புகளின் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. கணவன்-மனைவி ஒற்றுமை பலப்பட, விட்டுக் கொடுத்துச் செல்வது அவசியம். பிள்ளைகளின் கனவுகளை நனவாக்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் எதிர்பார்த்தபடி நடைபெறும். தாய்வழியில் அனுகூலம் உண்டு. தங்கம், வெள்ளி மட்டுமின்றி விலையுயர்ந்த மின்சாதனப் பொருட்களை மாதத்தின் மையப் பகுதியில் வாங்கி மகிழ்வீர்கள். ஆதியந்தப் பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(தொடரும்)



வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் உலக வலசைப் பறவைகள் தினத்தை முன்னிட்டு வதிவிடக் கருத்தமர்வும் வெளிக்களப் பயிற்சியும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்ற மூன்று நாட்கள் நிகழ்ச்சியில் வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த 108 மாணவர்கள் பங்கேற்றனர். இவர்கள் வெளிக்களப் பயிற்சியின்போது பறவை அவதானிப்பில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம்.

# பேராதனை பூங்காவில் நேபாள ஜனாதிபதி



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நேபாள ஜனாதிபதி பித்யா தேவி பந்தாரி பேராதனை பூங்காவிற்கு நேற்று சென்றுள்ளார்.

கண்டி - பேராதனை பூங்காவிற்கு நேற்று காலை சென்ற பந்தாரியை அமைச்சர் விஜயதாஷ ராஜபக்ச, அமைச்சர் தலதா அத்துகோரள ஆகியோர் வரவேற்றுள்ளனர்.

அங்கு சென்று தாவரவியல் பூங்காவை பார்வையிட்ட நேபாள ஜனாதிபதி மரக்கன்று ஒன்றையும் நாட்டினார். (இ)

# தலையில்லாத நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

தலையில்லாத நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

பயாகல பொலிஸ் பிரிவில் ஏத்தகம பிரதேசத்தில் இந்த தலையில்லாத சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ள நிலையில், களுத்துறை நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் பயாகல பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# தேயிலைக் கொழுந்தின் விலையை அதிகரிக்க திட்டம்-அமைச்சர் நவீன்

தற்பொழுது 100 ரூபாவை எட்டியுள்ள ஒரு கிலோ தேயிலை கொழுந்தின் விலையை 150 ரூபா வரையில் அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை கொட்டப் பொல வரலாற்று சிறப்புமிக்க கெட்டபரு ரஜமஹா விஹாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேயிலை கொழுந்து அறுவடை தேசிய வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# மட்டு.குளங்களை முந்தனை ஆற்றுடன் இணைக்க வேண்டும் வசந்த சேனநாயக்க யோசனை



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாரிய நீர்ப்பாசனக் குளங்களை முந்தனை ஆற்றுடன் இணைப்பதன் ஊடாக விவசாயச் செய்கையை அதிகரிக்கலாம் என நீர்ப்பாசனத்துறை பிரதியமைச்சர் வசந்த சேனநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை விஜயம் செய்த பிரதியமைச்சர், மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1073

Search for people, places and things Nagendram Home

தர்சி




தரணி




பிரசன்னா




குகன்




வாசுகி




கஜானன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அதிகார மோதல் ஏற்பட்டால் உடனடியாக தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அதிகாரம் தொடர்பில் சர்ச்சை நிலைமை ஏற்பட்டால் முன் கூட்டியே மாகாண சபைகளைக் கலைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வடமத்திய, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாண சபைகளின் ஆளும் கட்சி அதிகாரத்திற்கு சவால் விடுக்கப்பட்டால் பதவிக்காலம் நிறைவடைய முன்னதாகவே மாகாண சபைகள் கலைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

வடமத்திய மாகாண சபையின் 18 உறுப்பினர்கள் முதலமைச்சர் பதவியை கூட்டு எதிர்க் கட்சிக்கு வழங்குமாறு கோரி சத்தியக் கடதாசி ஒன்றை மாகாண ஆளுநரிடம் ஒப்படைக்கவுள்ளனர்.

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளிலும் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதில் ஆளும் கட்சி சவால்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே அவ்வாறான ஓர் நெருக்கடி நிலைமை ஏற்பட்டால் மாகாண சபைகளை கலைக்குமாறு ஜனாதிபதிக்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பரிந்துரை செய்ய தீர்மானித்துள்ளனர்.

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் பதவிக்காலம் செப்டெம்பர் மாதமும், மத்திய மாகாணத்தின் பதவிக்காலம் அடுத்த ஆண்டிலும் பூர்த்தியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் உள்ள விவசாய தோட்டமொன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாட்கள் உடன் தேவை. உணவு தங்குமிடம் இலவசம். தகுந்த சம்பளம் வழங்கப்படும். (சி-8554)

அழையுங்கள் :- 071 867 6424

## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜி

077 784 1558

(8168)


## பொதுக்கூட்ட அறிவித்தல்

வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயம்
வருடாந்த பொதுக் கூட்டம் 2017

ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 03.06.2017 சனிக்கிழமை , காலை 9.00 மணிக்கு வலி.வடக்கு பிரதேச செயலக பிரதிநிதிகளின் பிரசன்னத்துடன் நடைபெறும்.

இடம் - வயாவிளான் மத்திய கல்லூரி மண்டபம்

முக்கிய தீர்மானங்கள் மேற்க் கொள்ளப்படவிருப்பதனால் குடும்பத்திற்கு ஒரு உறுப்பினராவது வருகைதந்து குடும்ப பதிவை உறுதிப்படுத்தவும்.

குறிப்பு - வருடாந்த பொங்கல் - மடை 10.06.2017 சனிக்கிழமை நடைபெறும்.

(8606) செயலாளர்



வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் கைதடியிலுள்ள முதியோர் இல்ல சாந்தி நிலையத்திலுள்ள முதியோர்களுடன் பிரிட்டிஷ்வே ஆங்கிலக்கல்லூரி விரிவுரையாளர்கள்,மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

இதில் யாழ். மாவட்ட பிரிட்டிஷ்வே ஆங்கிலக்கல்லூரியின் முகாமையாளர் மார்க் வில்லியம்ஸ், உதவி முகாமையாளர் சி.கலீபன், விரிவுரையாளர்களான இ.ராஜன், பா.பெனெட் லெஸ்லி, நிர்வாக இணைப்பாளர் த.நிதர்ஷனா மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் முதியோர்களுக்கு அன்பளிப்புக்களும் மதிய உணவும் வழங்கியிருந்தனர். (படங்கள்- பொ. சோபிகா)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம் : ரோகினிசெவ் 12 ல்
உயரம் : 5'10"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7335

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம் : திருவோணம்
உயரம் : 170cmதகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/7337

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம் : திருவாதிரை
கி.பா : 17செவ்4ல்
உயரம் : 5'3"
தகைமை/தொழில்:O/Lஅரசதொழில்
தொ.இ: B/7340

பிறப்பு : 1978 இந்து
நட்சத்திரம்:அத்தம்
உயரம் : 5'5'
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: B/7341

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம் : கார்த்திகை
கி.பா : 27சூரிசெவ் 10ல்
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/7358

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம் : பூராடம்
கி.பா : 10சூரிசெவ் 9 ல்
உயரம் : 5'5"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/7365

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம் : மகம் சூரி செவ் 5ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:பட்டதாரி/அரசதொழில்
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7368

பிறப்பு: 1989 இந்துநட்சத்திரம் : மூலம் கி.பா : 49
தகைமை/தொழில் :A/L/அரசதொழில
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7369

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## விபத்தில் பெண்பலி இருவர் படுகாயம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, களுத்துறை தெற்கு பிரதேசத்தில் நேற்றுக் காலை கனரக வாகனமும் வானொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன் படுகாயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீடொன்றுக்கு பயணித்துக் கொண்டிருந்த வானே இவ்வாறு கனரக வாகனத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் வானின் பயணித்த பெண் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டப் போதிலும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வானின் சாரதி உட்பட இருவர் கடுங்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## விபச்சார விடுதி முற்றுகை எழுவர் கைது

பொரலஸ்கமுவ, பெபிலியானவில் "ஸ்பா" என்ற பெயரில் விபச்சாரவிடுதியை நடத்தி வந்த குற்றச்சாட்டின் பேரில், ஆண் முகாமையாளர் உட்பட 6 பெண்களை, பொரலஸ்கமுவ பொலி ஸார், நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர். 24-36 வயதுக்கு உட்பட்ட பெண்களே, இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## ஐ.தே.கவுடனான உறவை முறித்துக் கொள்ள வேண்டும் ஜனாதிபதிக்கு சு.கவினர் அழுத்தம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியுடனான உறவை முறித்துக் கொள்ளவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினர் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இந்த குழுவில் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் உள்ளடங்கி யுள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டு அரசாங்க உடன் பாடு நிறைவுக்கு வருகிறது.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவு தமது கோரிக்கையை முன்வைத்துள்ளது.

எனினும் சர்வதேச அழுத்தத்தின் மத்தியில் இரண்டு கட்சிகளினதும் உறவு மேலும் நீடிக்கப்படும் என்று அரசாங்க தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு கட்சிகளும் தேசிய கூட்டு அரசாங்கத்துக்கான உடன்படிக்கையில் 2015ஆம் ஆண்டு கைச்சாத்திட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 10 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் பாக். பிரஜை கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பாகிஸ்தானிய பிரஜை ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெரோயினை வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே, குறித்த பாகிஸ்தானிய பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார் என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எமிரேட்ஸ் EK650 என்ற விமானம் மூலம் டுபாய் வழியாக குறித்த பாக். பிரஜை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்த நிலையில் பாக். பிரஜையின் சந்தேகத்திற்கிடமான செயற்பாடுகள் காரணமாக சுங்க அதிகாரிகள் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

பின்னர், சந்தேகநபரின் பாதணியிலிருந்து மறைக்கப்பட்ட நிலையில் 10 மில்லியன் பெறுமதியான ஹெரோயினை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# கொமர்சல் வங்கி கிரெடிட் காட் வைத்திருப்போருக்கு 50% கழிவு



வடக்கு- தெற்கு- கிழக்கு- மேற்கு- அல்லது மத்திய பகுதியாகட்டும் இலங்கையின் எந்தப் பகுதியாக இருந் தாலும் சரி கொமர்ஷல் வங்கி கிரடிட் கார்ட் இருக்கும் பட்சத்தில் பிரபலமான ஹோட்டல்களில் 50 வீதம் வரை யிலான கழிவுகளுடன் தங்கியிருக்கும் வாய்ப்புக்களை தனது கிரடிட் கார்ட் வாடிக்கையாளர்களுக்கு கொமர் ஷல் வங்கி வழங்கியுள்ளது.

வங்கியின் ஈஸி வெகேஷன் திட்டத்தின் தற்போ தைய அறிவிப்பின்படி 24 ஹோட்டல்களில் இந்தக் கழிவுகள் வழங்கப்படவுள்ளன. விஸா அல்லது மாஸ் டர்கார்ட் மூலம் கொடுப்பனவுகளைச் செய்கின்ற போது இந்தக் கழிவுகள் வழங்கப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது.

இந்த ஹோட்டல்களில் ஏர்ள்ஸ் றீஜன்ட் கண்டி, பண்டனஸ் பீச் றெசோர்ட் அன்ட் ஸ்பா, சூரியா றெசோ ர்ட்ஸ், சென்டாரா சீசேன்ட் றெசோர்ட்ஸ் அன்ட் ஸ்பா, த ரெயின் பொரஸ்ட் எகோலொட்ஜ், சித்தாலேப ஆயுர்வேத ஹெல்த் றெசோர்ட் மற்றும் ஆதித்யா என்பனவற்றில் மே மாதம் 31-ம் திகதி வரை இந்தக் கழிவு வழங்கப்படும்.

ஏனைய 17 ஹோட்டல்களிலும் 2017 யூன் 30 வரை இந்த கழிவு முறை அமுலில் இருக்கும். ஆலியா றெசோர்ட் அன்ட் ஸ்பா, அவானி பென்தொட்டை, அவானி களுத்துறை, கிளப் ஹோட்டல் டொல்பின், ஹோட்டல் சீகிரிய, மாலுமாலு, மவுண்ட் பேட்டன் பங்களா, திக்வல்ல றெசொர்ட் அன்ட் ஸ்பா, த காம் றெசோர்ட் அன்ட் ஸ்பா, த ஈடன் றெசோர்ட் அன்ட் ஸ்பா, த பெரடைஸ் றெசோர்ட் அன்ட ஸ்பா, ஊகா பே, ஊகா ஜன்கிள் பீச், சீகிரிய ஜங்கில்ஸ், த புளு வோட்டர், சன் அக்குவா, டறீஒப் லைப் நேச்சர் றிசோர்ட் என்பனவே அவையாகும்.

கொமர்ஷல் வங்கியின் இவ்வகையான கழிவுத் திட்டமானது ஏற்கனவே அது கொம்டீல் திட்டத்தின் கீழ் வழங்கி வரும் நன்மைகளை கணிசமாக மேம்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது. கொமர்ஷல் வங்கி யின் கார்ட் வைத்திருப்பவர்கள் நாட்டின் பிரதான சில்லறை விற்பனையகங்கள் பலவற்றில் வட்டியற்ற இலகு தவணை முறையில் பொருள்களை கொள்வ னவு செய்ய வழங்கப்பட்டுள்ள வாய்ப்பே கொம்டீல் திட்டமாகும். மேலும் விஸா மற்றும் மாஸ்டர்கார்ட் என்பன நடத்தும் உலகளாவிய ஊக்குவிப்புத் திட்டங்களிலும் இந்த கார்ட்டுகளை வைத்திருப்பவர்கள் பங்கேற் கலாம். கொம்பேங்க் மெக்ஸ் லோயல்டி வெகுமதித் திட்டம் மூலமும் அவர்கள் பல்வேறு நன்மைகளை அனுபவிக்கின்றனர்.

கொமர்ஷல் வங்கி கார்ட்டுகள் இலங்கையில் மிகவேகமாக வளர்ச்சி கண்டுவரும் கார்ட்டுகளாகும். நாட்டின் பிரதான விற்பனை சந்தைப் புள்ளிகளில் கொமர்ஷல் வங்கியின் டெபிட் மற்றும் கிரடிட் கார்ட்டுகள் தலைமை தாங்கி நிற்கின்றன. வெள்ளி தங்கம் பிளேட்டினம் என பல பிரிவுகளில் இந்த கார்ட்டுகளை வங்கி வழங்குகின்றது. விஸா மாஸ்டர்கார்ட் மற்றும் விஸா சிக்னேச்சர் ஆகிய பிரிவுகளில் இவை வழங்கப்படுகின்றன. பிரீமியம் பிரி வில் உலக மாஸ் டர்கார்ட், விஸா இன்பினைட் என் பனவும் வழங் கப்படுகின்றன.

# சிறந்த முகாமையாளர் விருதுகள் 2017 இலங்கையில் ஆரம்பம்







கூட்டாண்மைத் துறையில் காணப்படும் சிறந்த முகாமையா ளர்களை இனங்காண்பது, மதிப்பி டுவது, கௌரவிப்பது மற்றும் முன் மாதிரியாகக் கொள்வதை அடிப்படை யாகக் கொண்டு சிறந்த முகாமை யாளர் விருது முன்னெடுக்கப்படுகிறது.

இந்த விருதுக்காக விண்ணப்பித் திருந்தோரை மதிப்பீடு செய்வதற்கா க நியமிக்கப்பட்டுள்ள நடுவர்களால், அவர்களின் நிர்வாகப் பாணி, பெறு பேறுகளில் கவனம் செலுத்தல், நிறைவேற்றல், மக்கள் நிர்வாகம் மற்றும் தலைமைத்துவ பண்புகள் போன்றன கவனிக்கப்படும்.

அவற்றிலிருந்து சிறந்த முகா மையாளர் தெரிவு செய்யப்படுவது டன், அபிவிருத்தி செய்து கொள்வ தற்காக வழிகாட்டல் வழங்கப்படும்.

சிறந்த முகாமையாளர் ஒருவர் சிறப்பாக திகழ்வது எவ்வாறு என் பதை கண்டறிவது இலக்காக அமைந்துள்ளதுடன், துறையில் காணப்படும் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் எவ்வாறு சிறப்பாக காணப்படுகின்றனர்.

போட்டிகர நிறுவனங்களில் காணப்படும் முகாமையாளர்களிட மிருந்து பயின்று கொண்ட விடய ங்கள் மற்றும் நிறுவனத்தில் தலை மைத்துவ கட்டமைப்புக்கு பொருத் தமான வகையில் முகாமையாள ர்களை தயார்ப்படுத்துவது எவ் வாறு குறித்து அறிந்து கொள்ள முடி யும்.

R-OPTI எனும் உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற ஆய்வு மாதி ரிக்கமைய முகாமையாளர்களின் வினைத்திறன் பரிசோதிக்கப்படும்.

நிறுவனங்கள் மற்றும் முகாமை யாளர்கள் ஆகியோர் சிறந்த செயற் பாடுகளுக்கு முன்மாதிரியாக திகழ முடியும், தலைமைத்துவ மேம்பாடு களுக்காக பரிந்துரைகளை பெற லாம் மற்றும் முகாமைத்துவ திற மைக்கான முக்கியமான இயல்பு களை இனங்காண்பது போன்ற வற்றை மேற்கொள்ளலாம்.

இலங்கையில் அறிமுகம் செய் யப்பட்டுள்ள சிறந்த முகாமையாளர் விருதுகள் நிகழ்ச்சிக்கு கொழும்பு லீடர்ஷிப் அக்கடமி மற்றும் பீப்பள் பிஸ்னஸ் ஆகியன அனுசரணை வழங்குகின்றன. இவற்றுடன் முன்னணி பன்முகத்துறை நிறுவ னங்களும் இணைந்துள்ளன.

இரு பிரிவுகளில் விருதுகள் வழங் கப்படும். பிரதான பிரிவில் வெவ் வேறு நிறுவனங்களில் காணப்ப டும் சிறந்த முகாமையாளர்கள் கௌரவிக்கப்படுவதுடன், இரண் டாம் பிரிவில் சிறந்த முகாமையா ளர்களை கொண்டுள்ள நிறுவன ங்கள் கௌரவிக்கப்படும்.

சிறந்த முகாமையாளர் விருது களுக்கான விண்ணப்பங்கள் கோரல் 2017 யூன் 30ம் திகதி யுடன் நிறைவடையவுள்ளதுடன், இதில் பங்கேற்பதற்கு http://www.greatmanagerawards.com/gma-srilanka.php எனும் இணையத்தளத்தை பார்க்கவும் விவ ரங்களுக்கு gmasrilanka@gmail.com அல்லது 07208 65001/ 0720865000 ஆகிய இலக் கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.




# புதுமைக்கு பிள்ளையார் சுழி போட வேண்டும்?

## தொழில் ரகசியம்

செய்ததையே செய்துகொண் டிருந்தால் கிடைத்ததேதான் கிடைத்துக்கொண்டிருக்கும். போட்டி நிறைந்த உலகில் இருக் கும் இடத்தில் இருக்கவே வேக மாக ஓட வேண்டும். இந்த லட்ச ணத்தில் பழையதை கட்டிக் கொண்டு, செய்தையே செய்து கொண்டு அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருந்தால் புளித்து போகவேண்டியது தான். புரிந்துகொள்ளுங்கள்!

இலங்கையில் சென்ற ஆண்டு சுமார் 650 புதிய பிராண்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டன என்று ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது. அதில் ஒரு சதவீதத்திற்கு குறை வானவை மட்டுமே வெற்றி பெற்ற தாம். மீதி பிராண்டுகள் தானும் செத்து மற்றவையை பேச்சு துணை க்கு கூட்டிக்கொண்டு போன ரக மாம். வெற்றி பெற்ற பிராண்டுகள் மட்டுமே புதுமையானவை என் றும் மற்றவை பெரும்பாலும் புது மை போர்வையிலிருந்த பழைய வையே என்றும் இன்னொரு ஆய்வறிக்கை கூறுகிறது.

புதுமை என்றால் என்ன?

'ஆல்டோ' கார் முதல் முறையாய் மஞ்சள் கலரில் வந்தால் புதுமை யல்ல. அது இன்னுமொரு வகை. அவ்வளவே.

தீர்க்கப்படாத வாடிக்கையாளர் தேவையை தீர்த்தோ, இருக்கும் தீர்வை இன்னமும் திறமையாக, எளிதாக, விலை குறைவாக தீர்க்கும் பொருளை புதுமை என்று கூறலாம். அப்படிப்பட்ட புதிய பொருள்களை, புதிய தீர்வுகளை சந்தை கண்டிராத புதுமையை படைக்க பல சந்தைப் படுத்துநர்கள் முன்வருவதில்லை.

புதுமை புகுத்தவில்லையென் றால் முதுமைதான் வரும் முன்னேற் றம் வராது என்று தெரிந்தும் பல சந்தைப்படுத்துநர்கள் புதுமை புரிய முனைவதில்லை. புதிய பொருள் களை அறிமுகப்படுத்துவதில்லை. ஏன் இந்த நிலை?

அடிப்படையிலேயே பலர் புதுமை களை பார்த்து பயப்படுபவர்கள். செய் வதையே செய்துகொண்டிருந்தால் போதும் என்று நினைப்பவர்கள். செல் பவர்களோடு சேர்ந்து செல்வதே பாதுகாப்பு என்று சிந்திப்பவர்கள்.

சாப்பிடுவதில் கூட பழையதை கட்டிக்கொண்டு அழுபவர்களா புது மைகளை புகுத்தப் போகிறார்கள்!

வாழ்க்கையில் ஓகே, வியாபா ரத்தில் புதுமைகள் புகுத்தாவிட்டால் விமோசனம் கிடையாது. இது தெரிந் தும் சந்தைப்படுத்துநர்கள் புதுமை யை புகுத்த தவற பல காரணங்கள் உண்டு. அப்படியே தப்பித் தவறி புது மைகளை புகுத்தினாலும் அவை அசல் புதுமைகளாக இருப்பதில்லை.

புதுமை முயற்சிக்கு பிள்ளை யார் சுழி போடவேண்டியது வாடிக் கையாளர்கள் தேவை தானே ஒளிய போட்டியாளர்களின் நிர்பந் தமாக இருக்கக்கூடாது. போட்டியா ளர் செய்கிறார், நாமும் அதே புது மையை செய்வோம் என்றால் அது புதுமையாகவும் இருக்காது, உருப் படவும் செய்யாது. வாடிக்கையாள ருக்கு என்ன தேவை என்பதை ஆய்வு செய்து அத்தேவையை மற்றவருக்கு முன் பூர்த்தி செய்யும் முயற்சிதான் ஒவ்வொரு தொழிலுக் கும் முக்கியம். அப்பொழுதுதான் புதுமை என்பது கம்பனியின் கலா சாரமாக மாறும். போட்டி புயலை மீறி வெற்றி கரை சேரும்!

'ஒரு முன்னணிக் கம்பனி அது. அது தொடாத துறையும் இல்லை, புரியாத புதுமையும் இல்லை. புதுமைக்கு பெயர் போன அக்கம்ப னியின் எழுதப்படாத விதி ஒன்று உண்டு: 'கம்பனியின் லாபத்தில் நான்கில் ஒரு பங்காவது கடந்த 4 வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருட்களால் இருக்க வேண் டும்'. புதுமையை கம்பனி முழு வதும் காற்று போல் பரவச்செய்யும் எப்பேற்பட்ட கோட்பாடு பாருங்கள்!

புதுமை என்பது வீட்டு சுவற் றுக்கு சுண்ணாம்பு அடிக்கும் வேலை இல்லை, புதிய பொருளை அறிமுகப்படுத்துவது என்பது சதா சர்வ காலமும் சிந்தித்துகொண்டே இருப்பது.

சில கம்பனியில் ஒவ்வொரு வாரமும் மீற்றிங் நடக்குமாம். புதியதாய் என்ன செய்யலாம், எங்கு என்ன தேவையிருக்கிறது என்பது பற்றி விவாதிக்க.

பழைய நடப்புகளைக் கொண்டு நடந்தவைகளை அலசி இப்படி தான் இருக்கவேண்டும் என்ற நினைப்பை வைத்துக்கொண்டி ருந்தால் புதிய பொருள்களை கொண்டு வர முடியாது. சீயக்காயில் என்ன புதியதாய் செய்யலாம் என்று சிலர் நினைத்துக்கொண்டிருக்க, ஷாம்புவில் புதியதாய் என்ன புகுத் தலாம் என்று வேறு சிலர் யோசித் துக்கொண்டிருக்க இரண்டையும் கலந்து 'மீரா சீயக்காய் ஷாம்பு' என்ற புதிய பிராண்டை அறிமுகப் படுத்தி வெற்றி பெற்ற 'கவின்கேர்' ரின் சாதுர்யம் உங்களுக்கும் வேண்டும்.

புதிய இடங்கள் செல்ல பழைய ரோடுகளில் பயணிக்காதீர்கள். உங்களை சுற்றி இருப்பவர்களின் வாழ்க்கையை வெளிச்சம் போட்டுப் பாருங்கள். அவர்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் சங்கடங்களை சல்லடை போட்டுத் தேடுங்கள். என்ன பிரச்சினை, எதனால் இந்த கஷ்டம் என்று ஆராயுங்கள். அதை போக்கும் புதிய பொருள்களை படைக்கும் வழியை தேடுங்கள். புதிய பொருளுக்கான யோசனை தானாய் பிறக்கும்.

'கேள்வி கேட்பவன் அந்த நிமி டம் முட்டாள். கேள்வியே கேட்காத வன் ஆயுள் முழுவதும் முட்டாள்' என்ற ஒரு சீன பழமொழி உண்டு. இந்த சீன பழமொழியை கண்ணில் படும்படி அலுவலகத்தில் எழுதி வை யுங்கள். உங்களுக்கும் உங்கள் தொழி லுக்கும் புண்ணியமாய் போகும்!

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,640.57 | 6,671.98 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,801.69 | 3,850.22 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 2,010.335

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** பிசி ஹவுஸ்(0.20), கல்மசு(1,250.00), பிசி பார்மா(0.30), சிங்கர் இன்(170.50), செரண்டிப் இன்.(8.60).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** கூஜே(42.20), எஸ்எம்பி லீசிங்(0.70), அடாம் கப்பிரல்(0.80), செரண்டிப் ஹோட்டல்(X)(18.70), கிறின் எல்வேட் டர்ஸ்(70.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 150.43 | 154.23 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 193.15 | 199.73 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 162.51 | 168.70 |
| சுவிஸ் பிராங் | 148.33 | 154.24 |
| கனேடிய டொலர் | 109.21 | 113.54 |
| அவுஸ்திரேலிய டொலர் | 110.03 | 115.01 |
| சிங்கப்பூர் டொலர் | 106.37 | 110.28 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.36 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.46 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




# புகழ் போதை

(13.05.2017 தொடர்ச்சி)

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கேசவனுக்கு தலை சுற்றியது. மயக்கம் வருவது போலிருந்தது. குழம்பிப் போய் கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்தான். மாணிக்கம் பேசசைக் கேட்ட ஊர் மக்கள் அனைவரும் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

மக்களை நோக்கி, "போகாதீர்கள் போகாதீர்கள்!" என்று கத்தினான் கேசவன். அதற்கு அவர்கள்..." போய்யா! போ. இனியும் உன் பேச்சைக் கேட்பதற்கு நாங்கள் ஒன்றும்மடையர்கள்இல்லை. இனி நீயும் எங்களைப் போல் ஒரு ஏழைதான்," என்று கூறிவிட்டு, "வாருங்கள் போகலாம்!" என்று ஒருவன்கையசைக்க, அனைவரும் அவனைத் தொடர்ந்து சென்றனர். அனைவரும் சென்றவுடன் தன்னிந்தனியாக கவலையோடு ஒன்றும் புரியாமல் நின்றிருந்த கேசவன் தோளில் தட்டிய மாணிக்கம்,

"வா உள்ளே போகலாம்," என்றான். கேசவன் எதிலும் விருப்பமின்றி, வெறுப்புடன் அவனுடன் சென்றான். வீட்டிற்குள் நுழைந்ததும் மாணிக்கம் வயிறு வலிக்கச் சிரித்தான். ஒன்றும் புரியாதவனாய் கேசவன் விழிக்க, மாணிக்கம் கேசவனை நோக்கி, "அதிர்ந்து விட்டாயா? உன் தந்தை என் தந்தையிடம் நிலங்களை விற்கவும் இல்லை. என் தந்தை வாங்கவும் இல்லை."



பிறகு நான் ஏன் பொய் சொன்னேன் என்று பார்க்கிறாயா? நீ இரக்கம் காரணமாக மக்களுக்கு கண் மூடித்தனமாக வாரி இறைத்தாய். உன்னைப் புகழின் விட அதிகமான போதையை உண்டாக்கி உன்னால் இலாபம் அடைந்து வந்தனர் மக்கள். "அவர்களை அடையாளம் காட்டவே, இனி உன் சொத்துக்களுக்கெல்லாம் நானே சொந்தக்காரன் என்று சொன்னேன்.

இதைக் கேட்டு நீ ஒன்றுமில்லாதவன் என்று தெரிந்த ஊர் மக்கள் நீர் இல்லாத குளத்தை விட்டு காக்கைகள் பறந்து செல் வதைப் போல், உன்னை விட்டு ஓடிவிட்டனர்.

இந்த நன்றி கெட்டவர்களிடம் இனி, நீ எப்படி நடக்க வேண்டாம்?" என்றான் மாணிக்கம். "நண்பா! என்னை வஞ்சித்து வாழ்ந்தவர்களை உன்னால் அடையாளம் கண்டு கொண்டேன்.

இனி ஆற்றில் போட்டாலும் அளந்துதான் போடுவேன். புகழ் போதையில் மூழ்க இருந்த என்னை கைகொடுத்து தக்க சமயத்தில் காப்பாற்றி விட்டாய்,

உனக்கு நான் எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை," என்று

நா தழுதழுக்க கூறினான் கேசவன்.

நீதி: இரக்கம் காட்டலாம். ஆனால், ஏமாளியாகி விடக்கூடாது.

(முற்றும்)




❖ 1525 - ஜெர்மனியின் பிராங்கென்ஹவுசன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரை அடுத்து விவசாயிகளின் போர் முடிவுக்கு வந்தது.

❖ 1618 - ஜொஹான்னெஸ் கெப்லர் முன்னர் மார்ச் 8 இல் நிராகரிக்கப்பட்ட தனது மூன்றாவது கோள் இயக்க விதியை மீண்டும் நிறுவினார்.

❖ 1718 - உலகின் முதலாவது இயந்திரத் துப்பாக்கிக்கான காப்புரிமத்தை லண்டனைச் சேர்ந்த வழக் கறிஞர் ஜேம்ஸ் பக்கிள் பெற்றார்.

❖ 1756 - இங்கிலாந்து பிரான்சின் மீது போரை அறி வித்ததில் ஏழாண்டுப் போர் ஆரம்பமாயிற்று.

❖ 1792 - பிரான்ஸ்சார்டீனியப்பேரரசு மீது போரை அறிவித்தது.

❖ 1796 - நெப்போலியனின் படைகள் இத்தாலியின் மிலான் நகரைக் கைப்பற்றினர்.

❖ 1851 - நான்காவது ராமா தாய்லாந்தின் மன்னராக முடி சூடினார்.

❖ 1860 - கரிபால்டியின் படைகள் சிசிலியின் நேப்பில்ஸ் நகரைக் கைப்பற்றினர்.

❖ 1897 - கிரேக்க துருக்கியப் போரில் கிரேக்கப் படையினர் பெரும் சேதத்துடன் பின்வாங்கினர்.

❖ 1915 - இந்திய பாதுகாப்புச் சட்டத்தை முன்னிறுத்தி இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் ஷவ்கத் அலியும் முகம்மது அலியும் கைது செய்யப்பட்டு சிந்துவாரா சிறையில் அடைக்கப்பட்டனர்.

❖ 1918 - பின்லாந்து உள்நாட்டுப் போர் முடிவுற்றது.

❖ 1919 - துருக்கியின் இஸ்மீர் நகரை கிரேக்கப் படைகள் முற்றுகையிட்டனர். 350 துருக்கியர்கள் கிரேக்க இராணுவத்தினரால் கொல்லப்பட்டு அல்லது காய மடை ந்தனர்.

❖ 1929 - ஒகைய்யோ மாநிலத்தில் கிளீவ்லன்ட் நகரில் மருத்து வமனை ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் 123 பேர் கொல்லப்பட்டனர்.

❖ 1932 - ஜப்பானியப்படையினர்ஷங்காயை விட்டுப்புறப்பட்டனர்

❖ 1932 - ஜப்பானின் பிரதமர் இனூக்காய் த்சுயோஷி அரசுக் கவிழ்ப்பு முயற்சியில் கொல்லப்பட்டார்.

❖ 1935 - மொஸ்கோவில் சுரங்க தொடருந்து சேவை ஆரம்பமானது.

❖ 1940 - இரண்டாம் உலகப் போர்: பெரும் போருக்குப் பின்னார் டச்சுப் படைகள் நாசி ஜேர்மன் படைகளிடம் சரணடைந்தனர்.

❖ 1940 - மக்டொனால்ட்ஸ்தனது முதலாவது உண வகத்தை கலிபோர்னியாவில் ஆரம்பித்தது.

❖ 1948 - இசுரேல் மீது அரபு நாடுகளான எகிப்து, ஜோரதான், லெபனான், சிரியா, ஈராக், மற்றும் சவுதி அரேபியா ஆகியன இணைந்து தாக்குதலை ஆரம்பித்தன.

❖ 1955 - உலகின் ஐந்தாவது உயரமான மக்காலு மலையின் உச்சியை பிரெஞ்சு மலையேறிகள் முதன் முதலாக எட்டினர்.

❖ 1957 - பசிபிக் பெருங்கடல் பகுதியில் மால்டன் தீவில் பிரித் தானியா தனது முதலாவது ஐதரசன் குண்டை சோதித்தது. ஆனாலும் இது தோல்வியடைந்தது.

❖ 1958 - சோவியத்தின் ஸ்புட்னிக் 3 விண்கலம் ஏவப்பட்டது.

❖ 1960 - சோவியத்தின் ஸ்புட்னிக் 4 விண்கலம் ஏவப்பட்டது.

❖ 1963 - நாசாவின் மேர்க்குரி-அட்லஸ் 9 விண்கலம் ஏவப்பட்டது. கோர்டன் கூப்பர் இவ்விண்கலத்தில் பயணித்து விண்வெளி யில் ஒரு நாளுக்கு மேல் தங்கிய முதலாவது அமெரிக்கர் ஆனார்.

❖ 1972 - 1945 முதலை ஐக்கிய அமெரிக்காவின் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஒக்கினாவா தீவு மீண்டும் ஜப்பானிடம் ஒப்படைக்கப்பட்டது.

❖ 1978 - டோக்கியோ பங்குச் சந்தை அமைக்கப்பட்டது

❖ 1985 - குமுதினி படகுப் படுகொலைகள், 1985: நெடுந்தீவு மாவலித்துறையில் இருந்து 64 பயணிகளுடன் புறப்பட்ட குமுதினி என்ற படகு இலங்கைக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள், பெண்கள் உட்பட 36 பேர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

❖ 1988 - எட்டு ஆண்டுகள் போருக்குப் பின்னர் சோவியத் இராணுவத்தினர் ஆப்கானிஸ்தானில் இருந்து பின் வாங்கத் தொடங்கினர்.

❖ 1991 - ஈடித் கிரெசன் பிரான்சின் முதற் பெண் பிரதமரானார்.

❖ 2005 - திருகோணமலை நகர் மத்தியில் இரவோடிரவாக புத்தர் சிலை எழுப்பப்பட்டதில் அங்கு கலவரம் வெடித்தது.

❖ 2006 - வவுனியாவில் நோர்வே அகதிகள் சபைப் பணியாளர் ஜெயரூபன் ஞானபிரகாசம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிறப்புகள்

❖ 1859 - பியேர் கியூரி, பிரெஞ்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1906)

❖ 1912 - புளிமூட்டை ராமசாமி, நகைச்சுவை நடிகர்

❖ 1928 - ஏ. ரி. பொன்னுத்துரை, இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர் (இ. 2003)

❖ 1954 - திருச்சி சிவா இந்திய அரசியல்வாதி.

இறப்புகள்

❖ 1978 - றொபேர்ட் மென்சீஸ், ஆஸ்திரேலியாவின் 12வது பிரதமர் (பி. 1894)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 70 | 120 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 120 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 120 | 200 | 160 | 200 | 200 | 100 | 180 |
| தக்காளி | 120 | 150 | 120 | 120 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 80 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 140 | 200 | 200 | 160 | 160 | 200 | 140 |
| கரட் | 180 | 300 | 250 | 240 | 180 | 300 | 180 |
| பூசணி | 50 | 50 | 50 | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 70 | 80 | 120 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 220 | 300 | 220 | 240 | 280 | 280 | 180 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 200 | 240 | 180 | 120 | 170 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 100 | 80 | 100 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 120 | 80 |
| பயற்றங்காய் | 120 | 100 | 50 | 120 | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 | 120 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 130 | 100 | 140 | 140 | 140 | 160 | 140 |
| கறிமிளகாய் | 100 | 100 | 160 | 200 | 180 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 |
| போஞ்சி | 160 | 200 | 200 | 200 | 160 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 130 | 50 | 60 | 100 | - | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 60 | 40 | 80 | 60 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 80 | 70 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | 300 | 300 | 220 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 100 | - | 280 | - | 200 | - |
| முள்ளங்கி | 60 | 100 | - | 80 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 50 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | - | 60 | 60 | - | - | - | - |

மக்கள் சக்தி பெற்ற தலைவனுக்கு தடைகளை தகர்த்து எறியக்கூடிய அளவுக்கு செயலாற்றலையும் மகிழ்ச்சியான மனநிலையையும் ஏற்படுத்தி தரும்.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இந்தியப் பிரதமர் மோடியை விக்னேஸ்வரன் சந்திக்க வேண்டும்

தமிழ் மக்கள் தமிழ் அரசியல் தலைமையால் ஏமாற்றப்படுகின்றனர்.

காணாமல்போனவர்களின் உறவுகளும் தமது சொந்த நிலத்தை இழந்து வாழ வழியின்றி தவிப்பவர்களும் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இவர்களின் தொடர் போராட்டம் பற்றியோ அல்லது அவர்களின் பிரச்சினைக்கு முடிவு கட்டுவது பற்றியோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இம்மியும் கருசனை கொள்ளாமல் உள்ளது.

ஆக, தமிழ் மக்கள் அரசியல் தலைமை இல்லாதவர்களாக தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தமிழ் மக்கள் நடத்துகின்ற தொடர் போராட்டம் தொடர்பில் கத்திக் குளறி குய்யோ முறையோ என்று உரத்து ஒலி எழுப்பி எம் மக்களின் போராட்டத்தை உலகறியச் செய்ய வேண்டிய தமிழ் அரசியல் தலைமை பேசாதிருக்கிறது.

இதைப் பார்க்கும் போது தொடர் போராட்டம் நடத்துகின்றவர்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்பதாக கூட்டமைப்பின் மன நிலைமை இருக்கிறது என்றே கூற வேண்டும்.

இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கு வருகை தந்த போதாவது எமது மக்களின் தொடர் போராட்டம் பற்றி எடுத்துரைத்திருக்க வேண்டும். ஆனால் அதுவும் நடக்கவில்லை.

எமது மக்களின் பிரச்சினையை ஆணித்தரமாக எடுத்துக் கூறக் கூடிய வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களைக் கூட பிரதமர் மோடியுடனான சந்திப்புக்கு அழைத்துச் செல்லவில்லை.

ஆக, இவற்றைப் பார்க்கும் போது தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் என்பது உறுதியாகிறது.

எனவே இந்நிலைமை ஆபத்தானது. தமிழ் மக்கள் எந்தத் தீர்வும் இன்றி தாமாக போராட்டத்தைக் கைவிடுவதற்கான ஒரு சூழ்ச்சி நடப்பது உறுதியாகிறது. இதை நம் அரசியல் தலைமை செய்கிறது.

எனவே இந்த மோசமான சூழ்நிலையிலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கின்ற அவசிய அவசர பணி வடக்கின் முதலமைச்சருக்கு உண்டு.

ஆகவே வடக்கின் முதலமைச்சர் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்தித்து தமிழ் மக்களின் அவலங்களை எடுத்துரைத்தாக வேண்டும்.

பிரதமர் மோடி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த போது முதலமைச்சர் விக்னேஸ்வரனை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

எனவே முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் பிரதமர் மோடியைச் சந்திப்பதற்குத் தயாராக வேண்டும்.

அவர் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்திப்பதாக இருந்தால், தமிழ் மக்கள் நடத்துகின்ற தொடர் போராட்டத்துக்கு ஏதோவொரு வகையில் தீர்வு கிடைக்கும்; வெற்றி கிடைக்கும்.

அதேவேளை தமிழ் மக்களுக்கு இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும் போது இதுபற்றியெல்லாம் கூட்டமைப்பு என்னிடம் தெரிவிக்கவில்லையே என்று பிரதமர் மோடி நினைப்பார்.

தவிர இவையாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்களின் தலைவராக இருப்பதற்கு விக்னேஸ்வரனே பொருத்தமானவர் என்ற முடிவை இந்தியா எடுப்பதற்கும் இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.

வெற்றியும் ஞானமும் வீரமும் தோல்வியிலும் துன்பத்திலும் இருந்து பிறந்தவை என்பதால்,

கொழும்பில் சந்திக்க முடியாத பிரதமர் மோடியை அவரது நாட்டில் சந்தித்து தான் யார் என்பதை முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிரூபிக்க வேண்டும்.

# மலையகத்திற்கான 10000 வீடுகள் த.மு.கூவுக்கு கிடைத்த வெற்றியே

## கல்வி இராஜாங்க அமைச்சர் மகிழ்ச்சி

தமிழ் முற்போக்கு கூட்டணி நல்லாட்சி அரசாங்கம் உருவாவதற்கும் அமைவதற்கும் பெரும் காரணமாக இருந்துள்ளது, அதனால் அரசாங்கத்துடன் பேரம் பேசி மலையக மக்களுக்கான உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்ள கூடியதாக உள்ளது என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் மலையகத்தில் தற்போது கல்வி உட்பட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, வீடமைப்பு வசதிகள் போன்றன அபிவிருத்தி அடைந்து வருகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் மலையகத்திற்கான இந்திய பிரதமரின் விஜயம் மலையக மக்களை உலகிற்கு தெரிந்து கொள்ள பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவரின் வருகையின் பின்னர் மலையத்தில் 10 ஆயிரம் வீடுகள் அமைய விருப்பதும் கல்வித் துறையில் பாரிய அபிவிருத்திகள் ஏற்பட இருப்பதும். தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு கிடைத்த ஒரு பாரிய வெற்றியாக கருதுகின்றேன்.

இதற்கு காரணம் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக 6 பாராளுமன்ற உறுப்பினர்களும் இவர்களில் 2 அமைச்சரவை அமைச்சர்களும் ஒரு இராஜாங்க அமைச்சரும் காணப்படுவதாகும்.

எந்த ஒரு அரசாங்கமும் அதன் ஆட்சி அமைப்பதற்கு காரணமான பங்காளர் கட்சிகளுடனே செயற்படும். அதே போல் வெளிநாட்டு உதவிகள், உட்பட இராஜதந்திரிகளினூடான செயற்பாடுகளும் அவர்களுடனே மேற்கொள்ளும்.

அந்த வகையில் இந்திய பிரமரிடம் ஏற்கனவே நாங்கள் 25 ஆயிரம் வீடுகள் கேட்டதற்கு இணங்க முதற்கட்டமாக 10 ஆயிரம் வீடுகள் கிடைக்கப் பெற்றமை தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு கிடைத்த பாரிய வெற்றியாக கருதுகின்றேன் என கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## அமர்வுகளில் எம்.பிக்கள் வரவு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமர்வுகளுக்கு வரும் பதிவுப்புத்தகம் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்ட பின்னர், மூன்றில் இரண்டு தொகையான உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு வருகை தருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த பதிவுப்புத்தகம் கடந்த 3ஆம் திகதி தொடக்கம் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

இந்த நிலையில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 173 பேர் வரை அமர்வுகளில் பங்கேற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

### சாஸ்திரங்கள்

✦ வாழ்க்கைத்துணையை விடுப்பதற்கு மாறாக இச்சைக்குப் பணிய வைப்பவர்கள்- முள் படுக கையில் புரள வைப்பது.
-லாபாபட்சம்
(கருடபுராணம்)




## திருப்பதி மலைவாழும் வெங்கடேசா

தண்ணிலவு பொழிந்தது. வானில குளிர் மேகங்கள் குலாவி உல வின. ஓங்கி உயர்ந்திருந்த மேருமலை, அந்த அற்புதச் சூழலில் உடலைத்தளர்த்தி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.

மேருமலையின் புத்திரனாகக் கருதப்படும் ஆனந்த பர்வதம் அங்கே ஆகாய மேகங்களைத் தடுத்தும் தழுவியும் விளையாடிக் கொண்டிருந்தது. மேடும் பள்ளமுமாக இருந்த ஆனந்த பர்வதத்தின் பச்சைப்புல்வெளிப் படுகையில் ஆதிசேஷன் அயர்வுதீரப் படுத்துக் கிடந்தான்.

கொத்து மேகங்களைத் தோளில் சமந்து உலக உலக வலம் வந்து கொண்டிருந்த வாயுதேவன் படுத்துக் கிடந்த பாம்பைப் பார்த்தான். கொஞ்சம் சீண்டிப் பார்க்க ஆசை கொண்டான்.

மேகங்களை இறக்கினான். ஆதிசேஷனின் உடலில் அங்கங்கே அம்புபோல் குத்தினான்.

ஆதிசேஷன் கண்விழித்துப் பார்த்தான்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

### திருமணம் என்பது என்ன?

மிகவும் பரிசுத்தமான நிகழ்ச்சியாகத்தான் திருமணத்தை இந்து மதம் காண்கிறது. ஒருவர் தனிப்பட்ட வாழ்க்கை முறைக்குள் செல்வது திருமணம் முடிந்த பிறகு தான். நாம் இன்றுகாணும சமூகம் நிலைத்து நிற்பதே இதன் அடிப்படையில் தான்.




தனிமனித வாழ் நிலையின் தர்மம், அதர்மம், காமம், குரோதம் ஆகியவற்றுக்கான சூழ்நிலைகள் உருவாவது திருமண வாழ்க்கையில் இருந்துதான்.

இந்துக்களின் திருமணச் சடங்குகளுக்கு ஜோதிடத்துடன் நெருங்கிய தொடர்பு உண்டு. அதில் மிகவும் முக்கியமானது. திருமணம் முடிக்கப் போகும் ஆண், பெண் ஆகியோரின் ஜாதகம் பார்ப்பதாகும்.

(தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை வவுனியா பிரதேசத்தில கூமாங்குளம், உக் குளாங்குளம், தெற்கிலுப்பைக்குளம் ஆ்கிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில பரப்புக் கடந் தான பிரதேசம் ஆகிய பிரதேச ங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## விலங்கு விசர் நோயை இல்லாது ஒழிப்போம்!

வளர்ப்பு நாய் அடிக்கடி குட்டி ஈன்று அளவுக்கதிகமாக பெருகுவதை தடுதிட கருத்தடை சத்திர சிகிச்சையை செய்து அன்புடன் வளர்ப்போம். கால்நடை வைத்திய நிலையங்களில் இதனைச் செய்திட முடியும்.

நோய்ச் சந்தேகமுடைய நாய்கள் தொடர்பில் அவதானமாக இருப்போம்!

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அருள் வெள்ளம்



நமது வாழ்க்கையின் நோக்கம் அமைதியும் நிறைவும் பெற்று வாழ்வதோடு ஆன்ம வளர்ச்சி பெற வேண்டும் என்பதேயாகும். ஆன்ம வளர்ச்சியை முதற் குறிக்கோளாகக் கொண்டால் பிறவெல்லாம் அற்பமாகவே தோன்றும். மனதை நிறை நிலையில் வைத்துக் கொள்வோம். கடமையின் மதிப்புணர்ந்து செயலாற்றி வாழ்வோம்.

உண்மையிலேயே ஆன்ம வளர்ச்சியை வேண்டுபவர் சிக்கல்களையும், பிணக்குகளையும் தாண்டி, அறிவைச் சுதந்திரமாக இயங்க விட வேண்டும். விரிந்த பேரியக்க மண்டல நிகழ்ச்சிகளையும், மனித வாழ்வையும் இணைத்து ஒத்துச் சிந்தியுங்கள். தன்முனைப்பு என்ற திரை கரைந்து விடும். தன் முனைப்பும், இயற்கை நியதியறியாமையும் ஒன்றை ஒன்று தழுவி நிலைத்திருக்கின்றன.

இதனால் மனிதன் தன்னிடம் ஒரு கற்பனை மதிப்பை (குயடளநீசநளவபைந) உருவாக்கிக் கொள்ளுகிறான். இந்த மருள் கொண்ட மதிப்பை அடிப்படையாகக் கொண்டு பிறரை ஒப்பு நோக்கும் போது கருத்தில் வேறுபாடுகளும், பிணக்குகளும் எழுகின்றன. தனது மனதைச் சீரமைத்துக் கொண்டு எவரை எக்கருத்தைத் தன்னோடு ஒப்பு நோக்கினாலும், ஒரு சமநிலை உணர்வு உண்டாகும். இந்த உணர்வில் தான் பேரின்பம் தொக்கி நிற்கின்றது. இப்பேருணர்வே அருள் வெள்ளமாகும்.

# வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்திய வல்வை கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டம்

## நேதாஜி சம்பியன்











வல்வெட்டித்துறை வருத்தப் படாத வாலிபர் சங்கமானது வல் வைக்குட்பட்ட கழகங்களிடையே அணிக்கு 7 நபர் கொண்ட உதை பந்தாட்ட தொடரை நடத்தி வரு கிறது.

அந்த வகையில் (13.05.2017) அன்று நடைபெற்ற இறுதி ஆட்டத் தில் இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நேதாஜி விளை யாட்டுக்கழகம் மோதியது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களைப் பெற்ற னர்.

வெற்றியாளரை தீர்மானிப்பதற்கு வழங்கப்பட்ட தண்ட உதையில் நேதாஜி அணியானது 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இறுதிச்சுற்றுத் தொடரின்

தொடர் நாயகன் - பிசாந் - இளங்கதிர் விளையாட்டுக்கழகம், ஆட்டநாயகன் - தருண் - நேதாஜி விளையாட்டுக்கழகம், வளர்ந்து வரும் இளம் வீரர் - தருண் நேதாஜி விளையாட்டுக்கழகம், சிறந்த கோல்காப்பாளர் - ஜிந்தன் - நேதாஜி விளையாட்டுக்கழகம், சிறந்த பின்கள வீரர் - விகர்ணன் - நேதாஜி விளையாட்டுக்கழகம் தெரிவாகினர். (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III மானிப்பாய் பரிஸ் 2ஆவது வெற்றி



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III சுற்றுப் போட்டியில் இருந்து யாழ். மாவட்டத்தில் இரு அணிகளை தெரிவு செய்வதற்கான தொடரில் 07.05.2017 அன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற தொடரின் 18ஆவது போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி, கே.சி.சி.சி. அணியை 8 ஓட்டங்களால் வெற்றிபெற்று தங்கள் 2 ஆவது வெற்றியை பதிவு செய்துள்ள னர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப் பாய் பரீஸ் அணி 41.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 196 ஓட்டங்களை பெற்றனர்.

கோபிரசாத் - 61, சுபதீபன் - 22, வினோத் - 22, சுஜீவன் - 13, ஜெய தீபன் - 30, சாஜித் - 15 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் பிரதி - 01, சாம்ப வன் - 04, தனுஸன் - 03, ஜெய ரூபன் - 02 இலக்குகளை கைப் பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.சி.சி அணி 47.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 188 ஓட்டங்களை பெற்றனர்.

ஜெயரூபன் - 10, கேதீஸ் - 30, பிரதீஸ் - 13, ஜனுதாஸ் - 68, உமா நாத் - 11, சாம்பவன் - 11, நீருஸன் - 12 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் கிசோ - 02, கோபி பிரசாத் - 03, விநோத் - 01, கனிஸ் ரன் - 01, நிதர்ஸன் - 01, சுவதீபன் - 02 இலக்குகளை கைப்பற்றினர். மானிப்பாய் பரீஸ் அணி பிரிவு A யில் 4 போட்டிகளில் பங்கு பற்றி 2 போட்டி களில் வெற்றிபெற்றுள்ளது. (க)

# திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க புத்தாண்டு விளையாட்டு முடிவுகள்

யாழ். திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் சித்திரைப் புத் தாண்டை முன்னிட்டு நடத்திய விளையாட்டு விழாவில், சதுரங் கம், கரம், மேசைப்பந்தாட்டம் துடுப்பாட்டம் விளையாட்டுக்களின் முடிவுகள்.

சதுரங்க அணிகளுக்கிடை யிலான போட்டியில் அண்கள் பிரி வில் யாழ். இந்துக்கல்லூரி 17 வயதுப்பிரிவினர் முதலிடத்தையும் யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி 17 வயதுப்பிரிவினர் இரண்டாம் இடத்தினையும், யாழ். இந்துக் கல்லூரி 13 வயதுப்பிரிவினர் மூன்றா மிடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான திறந்த போட் டியில் யாழ். வேம்படி உயர் தரப் பாடசாலை முதலிடத்தையும், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், யாழ். இந்து மகளிர் கல்லூரி மூன்றாம் இடத் தையும் பெற்றன. மேலும் தனிநப ருக்கான சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விபரம் வருமாறு,

சதுரங்கம், கரம், மேசைப்பந் தாட்டம், துடுப்பாட்டம் முதலிய அனைத்து விளையாட்டுக்களிலும் வெற்றி பெற்றவர்களுக்கான பரி சளிப்பு வைபவம் திருநெல்வேலி பணிக்கர்வளவில் அமைந்துள்ள இந்து வாலிபர் சங்க மைதானத்தில் நடைபெறும்.

சிவராஜ்குமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிதம விருந்தினராக ரில்கோ முகாமைத் துவப் பணிப்பாளர் தி. திலகராஜ்ும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாயத்துறை அமைச் சர் பொ. ஐங்கரநேசன் மற்றும் வைத்தியகலாநிதி ந. பிரதீபன், திருமதி விசாலாட்சி ஜெயதிலகன், திருமதி. சிறீமோகனராஸ், ம. திவா கரன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் சம்பியனாகியது சக்திவேல் வி.க.



வடமராட்சிக் கிழக்கு இளைஞர் கழகங்களுக்கிடையே அண்மை யில் நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் சக்திவேல் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் மோதி யது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கோல் போடும் பல சந்தர்ப்பங்களை சக்திவேல் அணி யினர் தவற விட போட்டியானது சமநிலையில் முடிவடைந்தது. எனினும் வெற்றியை தீர்மானிக்க தண்ட உதை வழங்கப்பட்டது.

இதில் சக்திவேல் விளையாட் டுக் கழகம் 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று 2017ஆம் ஆண்டுக் கான இளையோர் கிண்ண சம்பிய னாக தெரிவானது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வட மாகாண பாடசாலைகள் உதைபந்தாட்டம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது

வட மாகாண கல்வி திணைக் களம் நடத்தும் வடமாகாண பாட சாலை அணிகளுக்கு இடையிலான ஆண் / பெண்களுக்கான உதை பந்தாட்ட போட்டிகள் இன்று திங் கட்கிழமை முதல் தொடர்ந்து 4 நாட் கள் நடைபெறவுள்ளன.

இவர்களுக்கான போட்டிகள் கீழ்வரும் மைதானங்களில் நடை பெறவுள்ளதாக வட மாகாண உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் க.சத்தியபாலன் அறிவித்துள் ளார். 20 வயதிற்குட்பட்ட பெண் களிற்கான போட்டிகள் கனகரத்தி னம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஆண்களிற்கான போட்டிகள் ஒவ் வொரு வயதுப்பிரிவும் இரண்டு மைதானங்களில் நடைபெறவுள் ளது.

போட்டி நிரல் அட்டவணையின் படி 20 வயதிற்குட்பட்ட ஆண்களிற் கான போட்டியில் மேற்பிரிவிலுள்ள அணிகளுக்கு துரையப்பா விளை யாட்டு மைதானத்திலும் கீழ்ப்பிரி விலுள்ள அணிகளுக்கு அரியாலை உதைபந்தாட்ட மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

18 வயதிற்குட்பட்ட ஆண்களிற் கான போட்டியில் மேற்பிரிவிலுள்ள அணிகளுக்கு சென். பற்றிக்ஸ் மை தா னத்திலும் கீழ்ப்பிரிவிலுள்ள அணி களுக்கு துரையப்பா விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள் ளது.

16 வயதிற்குட்பட்ட ஆண்களிற் கான போட்டியில் மேற்பிரிவிலுள்ள அணிகளுக்கு யாழ். இந்துக் கல் லூரி மைதானத்திலும் கீழ்ப்பிரி விலுள்ள அணிகளுக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத் திலும் நடைபெறவுள்ளது. (க)

# தோல்வியை ஏற்கா...

வெடுப்பது விமல் வீரவன்சவைக் கேட்டு அல்ல. இதை விமல் தெரிந்துகொள்ள வேணடும்.

தன்னுடன் இருக்கும் ராஜபக்ஷர்களின் கருத்துக்களை கேட்ட பிறகே மகிந்த ராஜபக்ஷ முடிவுகளை எடுக்கின்றார்.

எனவே ராஜபக்ஷர்களுக்கு எவரேனும் பிரச்சினைகளைக் கொடுத்தால் அவர்களை தேசத்துரோகியாக்கி கொலை செய்வதே விமலுக்கு ராஜபக்ஷர்கள் கொடுத்துள்ள வேலை என தெரிவித்த இடதுசாரி கேந்திர நிலையத்தின் ஏற்பாட்டாளர் சமீர பெரேரா, முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தோல்வியை ஏற்றுக்கொள்ளாத அரசியல்வாதி எனவும் குறிப்பிட்டுள்ளார். (செ)

# வட்டு.,வவு., நவாலியில்...

முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை வாரத்தின் மூன்றாம் நாளான நேற்றைய தினம் **தனித்தமிழ் ஈழமே தீர்வு** என தமிழர வரலாற்றில் முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டை வழக்கம்பரையிலும், முன்னாள ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் விமானத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட நவாலி சென்.பீற்றர்ஸ் படுகொலை இடம்பெற்ற பகுதியிலும் வவுனியாவில் பண்டாரவன்னியன் நினைவுத் தூபிக்கு முன்பாகவும் நினைவு கூரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற இந்த நினைவு நிகழ்வில் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் உபதலைவர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த சிவாஜிலிங்கம்,

தமிழர்களுடைய நிரந்தர தீர்வொன்றுக்காக **தனித் தமிழ் ஈழமே தீர்வு** என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இடத்திலும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் இராணுவத்தின் முன்னேறிப்பாய்ச்சல் நடவடிக்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்ட நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாள் அஞ்சலிகளை மேற்கொண்டிருந்தோம்.

இவ்வாறு நூற்றுக்கணக்கில், ஆயிரக் கணக்கில், இலட்ச கணக்கில், என ஒவ்வொரு இடத்திலும் எமது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த படுகொலைகள் அனைத்துமே இலங்கை ஆட்சியாளர்களால் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட படுகொலைகளாகும் இவற்றுக்கு இன்னமும் நீதி கிடைக்காத நிலையில்தான் நாங்கள் இவ்வாறான நினை வேந்தல்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த நினைவு கூரல்களின் மூலம் இலங்கை அரசிற்கும், சர்வதேசத்திற்கும் ஒன்றை கூற விரும்புகின்றோம். நாங்கள் எப்போதும் எந்த நேரத்திலும் எமது மக்கள் படுகொலை செய்யப்பட்டதை மறக்கப்போவதில்லை. அந்த படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை ஒன்றின் மூலம் நீதியை பெற்றுக்கொடுப்பதன மூலமாகவே நாங்கள் சுதந்திரமாக வாழக்கூடிய அரசியல் தீர்வு ஒன்று ஏற்படும் அதனை நாங்கள் எப்போதும் வலியுறுத்துவோம் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், சர்வதேச விசாரணை மூலம் இந்த படுகொலைகளுக்கு நீதி கிடைப்பதே ஈழத்தில் கொல்லப்பட்ட இலட்சம் உயிர்களுக்கு காணிக்கையாக அமையும் எனவும் தெரிவித்தார்.

வவுனியாவிலும் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஏற்பாட்டில் நேற்று மாலை 6.00 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு அருகேயுள்ள பண்டாரவன்னியன் நினைவுத்தூபிக்கு முன்பாக இடம்பெற்றது

இவ் அஞ்சலி நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகதாரலிங்கம் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி நினைவு நிகழ்வுகளின் போது முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தத்தின்போது உயிரிழந்தவர்களுக்கான நினைவுச் சுடர் ஏற்றப்பட்டதுடன் அஞ்சலியும் செலுத்தப்பட்டிருந்தது. (செ-4,250)

# பிரமாண்டமான...

வின் தளபதி பிரிகேடியர் திஸாநாயக்க நாட்டி வைத்தார்.

நாவற்குழி மேற்கு பகுதியில் அமைந்துள்ள சிங்கள குடியேற்றத்துக்கு அருகில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த விகாரையில் "களன மிதுரு" கோபுரம் அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த வகையில் குறித்த கோபுரம் அமைப்பதற்கான ஒரு தொகுதி நிதியை களன மிதுரு பௌத்த அபிவிருத்தி நிலையம் வழங்கவுள்ளதுடன் மேலதிக நிதியை பல தரப்பினரிடமும் நிர்வாகத்தினர் கோரியுள்ளனர்.

இந் நிலையில் நேற்றைய தினம் இடம் பெற்ற அடிக்கல் நாட்டு நிகழ்வில் விகாராதிபதிகள் உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் கலந்து கொண்டனர்.

நாவற்குழி மேற்கு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டு திட்டத்தில் 50 சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அண்மையில் வீடமைப்பு அதிகார சபையினால் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ள பகுதியில் அமைந்துள்ள விகாரையிலேயே மேற்படி பிரமாண்டமான கோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேற்படி விகாரை அமைந்துள்ள பகுதியானது யாழ் நகர் ஆரம்பிக்கும் பகுதியாகவும் நாவற்குழி, ரயில் நிலையத்துக்கு அருகிலும், கண்டி-யாழ்ப்பாணம் ஏ9 வீதி மற்றும் மன்னார்-யாழ்ப்பாணம் ஏ32 வீதியும் சந்திக்கும் பகுதியிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இதே வேளை அப் பகுதியில் இருந்தே அதிவேக நெடுஞ்சாலை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அங்கு பிரமாண்டமான விகாரை கோபுரம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# மீனவர்...

மீனவர் ஒருவர் நேற்றைய தினம் திடீரென ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாக கட கடலுக்குள்ளேயே உயிரிழந்துள்ளார்.

குருநகர் பழைய பூங்கா வீதியை சோந்த துரைசிங்கம் ஆரோக்கியராஜா (வயது 60) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவர் நேற்றைய தினம் காலை 9 மணியளவில் மேலும் இரு நபர்களுடன் மீன் பிடிப்பதற்காக ஒரு வள்ளத்தில் குருநகர் கடற்பகுதிக்குள் சென்றுள்ளனர். 2 மைல் தூரம் சென்று கடலில் இறங்கி மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளை இவர் திடீரென கடலுக்குள் காணாமல் போயுள்ளார். அருகில் இருந்தவர்கள் இவரை தேடிய போது சிறு தூரத்தில் இவர் மிதந்து கொண்டிருந்ததை அவதானித்துள்ளனர்.

உடனடியாக அவரை மீட்டு கரைக்கு கொண்டு வந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போது இவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

குறித்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-9)

# மத்தி-மாகாண...

மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையே சுமுகமான உறவு ஏற்படுத்தப்படாமல் இருப்பது வடக்கின் தொழில்துறை விருத்திக்கு பாரிய தடையினை ஏற்படுத்தியுள்ளது என யாழ்.மாவட்ட வர்த்தகத்துறை பிரதிநிதிகள் அமெரிக்க குழுவினரிடம் எடுத்துரைத்துள்ளார்.

அமெரிக்க காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் பில் ஜோன்சன், அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் அதுல் கேசப் ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தகதுறை பிரதிநிதிகளை நேற்றைய தினம் யாழ்.ஜெட்வின் விருந்தினர் விடுதியில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். மேற்குறித்த கலந்துரையாடலின போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட வர்த்தக துறை பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில்,

இது ஆக்க பூர்வமான சந்திப்பாக இருந்தது. எமது நாட்டில் சுமுகமான அரசியல் தீர்வு ஒன்று விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும் என முக்கியமாக கேட்டுக்கொண்டோம்.

சமூகப் பிரச்சினைகள், இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி பாதிப்படைதல் என்பன தொழில் துறை விருத்தி அடையாத காரணத்தால் அதிகரித்து வருகிறது என சுட்டிக்காட்டியதுடன் தொழில்துறை விருத்தி செய்யப்படுமிடத்து வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொளளக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்றும் அதை எமக்கு ஏற்படுத்தி தருமாறு அவர்களிடம் கேட்டுக்கொண்டோம்.

உள்ளூர் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு பல தடைகள் காணப்படுகிறது. வெளிநாட்டில் உள்ள எமது புலம்பெயர் தமிழர்கள் இங்கு முதலீடுகளை செய்வதற்கு பாரிய தடைகள் காணப்படுகிறது. ஏதோவொரு விதத்தில் தடுக்கப்படுகிறது. எமது புலம்பெயர் உறவுகள் முதலீடுகளை சுதந்திரமாக செய்வதற்கு தடங்கல் உள்ளது. அவற்றை சரிசெய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டோம்.

மேலும் எமது பிரதேசத்தில் உள்ள அரசியல் ஸ்திரமற்ற தன்மை மிக முக்கிய காரணம். அத்துடன் மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையில் உள்ள அதிகாரங்கள், நல்லதொரு உறவின்மை போன்ற காரணத்தினால் வடக்கில் தொழில்துறை வளர்ச்சிக்கு பாரிய தடையாகவுள்ளது. இவர்கள் இருபகுதியினரும் எதிர் எதிர் கருத்துக்களை கொண்டு இருப்பது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு தடையாகவுள்ளது என தெரிவித்திருந்தோம்.

அதற்கு பதிலளித்த அமெரிக்க காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் பில் ஜோன்சன் தொழில்துறை தொடர்பான பிரச்சினைகளை தாம் நேரடி கவனத்துக்கே கொண்டு வருவோம் என உறுதியளித்திருந்தார். அது தொடர்பான தடைகளை தாம் நிவர்த்தி செய்வோம் எனவும் தமது அமெரிக்க அரசு வடக்கின் அபிவிருத்தி என்ற விடயத்தில் மிகவும் கருசனையுடன் உள்ளதாகவும் அதற்கு எந்த தடை வருவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறியிருந்தார் என யாழ்.வர்த்தக துறை பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.(செ-9)

# மோடியின்...

பெரும் கௌரவமாக கருதுகிறேன் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

இலங்கையின் மத்திய மாகாணத்திலுள்ள திகாயாவில் மலையகத் தமிழர்கள் மத்தியில் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை பேசிய இந்தியப் பிரதமர் மோடி,

முத்தையா முரளிதரன், மறைந்த தமிழக முதல்வர் எம்ஜிஆர் ஆகியோர் இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளித் தமிழர்களால் உலகுக்கு வழங்கப்பட்ட பரிசு என்று புகழ்ந்துரைத்தார். இதற்கு முத்தையா முரளிதரன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஊடகமொன்றுக்கு அவர் அளித்த பேட்டி வருமாறு,

தனது உரையின்போது எனது பெயரை இந்தியப் பிரதமர் மோடி குறிப்பிட்டது எனக்கு மிகப்பெரிய ஆச்சரியத்தை அளித்துள்ளது.

உலகிலேயே மிகப்பெரும் ஜனநாயக நாடாக இந்தியா திகழ்கிறது.

இந்நிலையில், எனது சொந்த நாட்டில் எனது பெயரையும், நான் சார்ந்த சமூகத்தின் அடையாளத்தையும் அவர் குறிப்பிட்டுப் பேசியது எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும். இந்தியாவுடன் எனக்கு மிகவும் நெருங்கிய உறவு உள்ளது.

நான் தென்னிந்தியாவைச் சேர்ந்த பெணணைத்தான் திருமணம் செய்துள்ளேன். எனது மூதாதையர்கள் இந்தியாவில் இருந்து இலங்கை வந்தவர்கள்தான்.

நாங்கள் அவர்களது 4 அல்லது 5வது தலைமுறையினர் ஆவோம். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் மிகநெருங்கிய நட்புறவு நிலவுகிறது. இலங்கையின் மூத்த சகோதரனாக இந்தியா உள்ளது. இலங்கைக்கு பல்வேறு உதவிகளை இந்தியா செய்து வருகிறது.

எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவு மேலும் வலுப்படும் என்று நம்புகிறேன் என முத்தையா முரளிதரன் இதன்போது தெரிவித்துள்ளார். (செ)

# புதிய முதலீட்டு...

யொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அது தொடர்பில் தெளிவூட்டும் ஊடகவியலாளர் சந்திப்பு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புதிய தேசிய வருமான வரி சட்டத்தின் கீழ், மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குறைவான முதலீடுகள் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் வட மாகாணத்திற்குள் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்காக 200 வீத நிவாரண விகிதம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கொடுப்பனவு ஏனைய மாகாணங்களுக்கு 100 வீதம் என்ற விகிதத்தில் வழங்கப்படவுள்ளது.

பாரியளவிலான முதலீடுகளுக்கான சலுகை கொடுப்பனவு 100 முதல் 150 வரையான விகிதத்தில் வழங்கப்படவுள்ளதுடன் துறைமுக அபிவிருத்திக்கான முதலீடுகளுக்காக 100 வீதம் வரை வரிச்சலுகை வழங்கப்படவுள்ளது.

புதிய தேசிய வருமான வரி சட்டமூலத்தின் கீழ் நிறுவன வருமான வரி வீதம் 03 பிரிவுகளை உள்ளடக்கியதாகும்.

அத்துடன் வங்கி, நிதி மற்றும் காப்புறுதி துறைகளுக்காக 28 வீதம் வரிச்சலுகையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மதுசாரம், புகையிலை, சூதாட்டம் ஆகியவற்றுக்கு அதிகபட்சமாக 40 வீத வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

காணி, கட்டிடம் மற்றும் பட்டியலிடப்பட்ட பங்குகள் தவிர்ந்த ஏனைய முதலீடுகளுக்கு சம்பந்தமற்ற விதத்தில் மூலதன இலாபம் மீதான வரி 10 வீதமாகவும், கூட்டுமுயற்சி வியாபாரங்கள் மீதான வரி 10 வீதமாகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை 2017ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அரச சலுகை வட்டி கடன் திட்டமும், இந்த வருடத்தின் மார்ச் 31ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். (செ)

# சைபர்...

கணனிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அண்மைய தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதில் அதிகமான கணனிகள் வர்த்தகர்களுடையது என கூறப்படுகின்றது. அதிகமான சேதம் ஏற்பட்டுள்ள நாடுகளில் ரஷ்யாவும், பிரித்தானியாவும் உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த சைபர் தாக்குதல் தொடர்பில் உலக நாடுகளின் அவதானம் குவிக்கப்பட்டுள்ளதாகவும், இன்று காலையில் மற்றுமொரு தாக்குதல் இடம்பெறலாம் எனவும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன், ஸ்பெயின், ரஷ்யா, அமெரிக்கா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளின் முன்னணி நிறுவனங்களின் இணையச் சேவைகள் மீது இந்தத் தாக்குதல் நடந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகிவருகின்றன.

இவையெல்லாம் தனித்தனி தாக்குதல்களா அல்லது ஒன்றோடொன்று தொடர்புடையவையா என்பது தெளிவாகவில்லை.

பிரிட்டனின் தேசிய மருத்துவ சேவையின் இணையக் கட்டமைப்பின் மீது மிகப் பெரிய தாக்குதல் நடந்திருக்கிறது.

பிரிட்டனின் முன்னணி மருத்துவமனைகளின் இணையகட்டமைப்பின் மீது நடந்துள்ள இந்தத் தாக்குதலில் நோயாளிகளுக்கான சேவைகள் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## முல்லையில் கடும்...

ணமாக குடிநீர் விநியோகம் நடைபெற்று வருவதாகவும் குடிநீர் நெருக்கடி தொடர்பாக கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் பிரதேச சபைகள், பிரதேச செயலகங்களின் ஒழுங்குபடுத்தல்களில் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருவதாகவும் முல்லை மாவட்ட செயலர் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் வசந்தபுரம், பேராறு, கற்சிலைமடு, சம்மளங்குளம், கூழாமுறிப்பு, மானுருவி, கருவேலங்கண்டல் ஆகிய பகுதிகளில் குடிநீர் நெருக்கடி அதிகளவில் காணப்படுகின்றது.

கரைதுறைபற்றில் மாமூலை கிராமம் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது. துணுக்காயின் பல கிராமங்கள் குடிநீர் நெருக்கடியினையும் எதிர்கொண்டுள்ளன. இதே வேளையில் முல்லை மாவட்டத்தில் வரட்சி நிலைமை அதிகரிக்குமானால் குடிநீர் நெருக்கடியும் மேலும் கூடுதலாக உருவாகும் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (செ-312)

## பிரான்ஸின் ஜனா...

மக்ரோன் நேற்று பதவியேற்றுள்ளார்.

இதனை முன்னிட்டு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பிரான்ஸில் சென்ற வாரம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், மெரின் லீ பென்னை தோற்கடித்து இமானுவல் மக்ரோன் வெற்றி பெற்றார்.

பிரான்ஸ் ஜனாதிபதியின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலமான இலிசி மாளிகையில் நடைபெறும் நிகழ்வில் மக்ரோன் நேற்று பதவி பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

பதவியேற்பின் போது அந்த நாட்டு படையினரால் இமானுவல் மெக்ரோனுக்கு 21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டுள்ளன. (செ)

## மங்கள சமரவீரவு...

சீனாவிலிருந்து நாடு திரும்பியதும் அமைச்சரவை மாற்றத்தை மேற்கொள்ள இதன்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதனிடையே அமைச்சரவை மாற்றத்தின் போது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நிதியமைச்சராக நியமிக்கப்பட உள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

தற்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இதற்கு இணங்கியுள்ளதாகவும் இதற்கு பதிலாக எந்த அமைச்சை பெற்றுக்கொள்வது என்பது குறித்த தகவலை அவர் இன்னும் வெளியிடவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. (செ)

## பயணச்சீட்டு பரி...

நிலையத்தில் கடமையில் இருந்த பயணச் சீட்டு பரிசோதனையாளர் ஒருவர் பயணிகளின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் பயணச் சீட்டு இன்றி புகையிரதத்தில் பயணித்த 2 பயணிகள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாகவே இவர் காயமடைந்துள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த குறித்த உத்தியோகஸ்தர் சம்பவ தினம் இரவு மதவாச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பயணிகளிடம் பயணச் சீட்டை கோரிய போது ஏற்பட்ட முரண்பாடு முற்றியதில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபர்கள் மதவாச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (செ)

## மியன்மார் தலைவி...

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மியன்மார் அரச தலைவியான ஆங் சான் சூகிக்கும் இடையில் நேற்று பேச்சுவார்த்தை ஒன்று சீனாவில் நடைபெற்றுள்ளது.

மியன்மாரில் ஜனநாயக ஆட்சியை உறுதிப்படுத்தவும் நாடாளுமன்றத்தை வலுப்படுத்தவும் இலங்கையிடம் உள்ள அனுபவங்கள் வழியாக முழுமையான ஒத்துழைப்பை வழங்க தயாராக இருப்பதாக பிரதமர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

மேலும் இலங்கையின் நாடாளுமன்ற பிரதிநிதிகளை மியன்மாருக்கு அனுப்பி வைப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

மியன்மாருக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்த வரலாற்று சிறப்புமிக்க உறவுகளை அடிப்படையாக கொண்டும், எதிர்காலத்தில் உறவுகளை வலுப்படுத்தவும் முன்னெடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் இறுதியில் ஆங் சான் சூகியை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைக்கு வந்து கண்டி நகரை காண வேண்டும் என்ற ஆவலில் தானும் இருப்பதாக சூகி இதற்கு பதில் தெரிவித்துள்ளார். (செ)

## தமிழர் தாயகம் ...

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்த எமது மக்களை நினைவுகூரும் சோக நாளாக இம்மாதம் 18-ம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது. இது சம்பந்தமாக விடுக்கப்பட்ட முதலமைச்சரின் அறிக்கை பின்வருமாறு.

2009-ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி அளவில் ஏற்பட்ட எம் உறவுகளின் அநியாயமான உயிரிழப்புகளுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தும் புனித நாளே இம் மாதம் வரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமாகும். அந்த உயிரிழப்புக்கள் நடந்து 8 வருடங்கள் ஆகின்றன. அன்று குழந்தைகளாகவிருந்த இளம் சிறார்கள் இன்று இளைஞர் யுவதிகளாக உருமாற்றம் பெறும் நிலையில் உள்ளார்கள். ஆனால் அவர்களின் உள்ளங்களில் கூட அன்று நடந்த பயங்கரமான நிகழ்வுகள் வடுக்களை விட்டுச் சென்றுள்ளன.

சாட்சியில்லாது நடத்தப்பட்ட சமரே முள்ளிவாய்க்கால். வெளியாரின் உள்ளீடுகள் தடுக்கப்பட்டு, ஊடக உள்நுழைவு மறுக்கப்பட்டு, போர் நடைமுறைகளுக்கு முரண்பட்ட விதத்தில் போராயுதங்கள் பாவிக்கப்பட்டு கரவாக மக்களை அழித்தொழித்த சமரே முள்ளிவாய்க்கால். அப்பாவிப் பெண்கள், பிள்ளைகள், குழந்தைக்ள், வயோதிபர்களின் உயிர்களைக்காரணமின்றிக் காவிச் சென்றதே முள்ளிவாய்க்கால். வட - கிழக்கு மாகாண மக்களின் சரித்திரத்தில் மாறா இடம்பெற்றுவிட்ட சோக வரலாற்றுப்பதிவே முள்ளிவாய்க்கால். அன்றைய தினம் என்றென்றும் எம் மக்களின் வரலாற்றில் ஒரு துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய தினமாகும்.

2009-ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி முடிவிலே உயிரிழந்த ஆயிரமாயிரம் பொது மக்கள் தொடர்பான உண்மை நிலை இது வரைக்கும் வெளிச்சத்திற்கு கொண்டுவரப் படவில்லை. நடந்தது சம்பந்தமான நம்பகத் தன்மை வாய்ந்த விசாரணைப்பொறிமுறை இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை. இன்றும் எம் மக்கள் உண்மையை அறிய ஆவலாக உள்ளார்கள்.

அண்மையில் ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைகள் பேரவை, போரிலே கொல்லப்பட்டவர்களுக்கான நீதி உறுதிப் படுத்தப்படும் என்ற தோரணையில் மேலும் இரு வருடங்கள் கால நீட்சி அளித்துள்ளது. வெளிப்படைத்தன்மையுடன் பொறுப்புக் கூறலானது நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே சர்வதேசத்தவர்களின் எதிர்பார்ப்பு.

இலங்கை அரசாங்கம் இது பற்றிய உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறியே கால நீட்சி பெற்றுக்கொண்டார்கள். ஆனால் அது பற்றி எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்க அரசாங்கம் முன்வருவதாகத் தெரியவில்லை. முன்னைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் மட்டும் வெளிநாட்டு உள்ளடங்கலுடன் போர்க்குற்ற விசாரணை நடைபெற வேண்டும் என்ற தமது தனியான கருத்தை வெளியிட்டுள்ளார். வெளிநாட்டு உள்ளீடுகள் இல்லாத நீதி விசாரணை ஒரு போதும் உண்மையை வெளிக்கொண்டுவர உதவி செய்யாது.

சிலர் இவ்வாறான பொறிமுறையை நாங்கள் வேண்டி நிற்பதன் நோக்கம் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே என்று நம்புகின்றார்கள். அதனால் பெருந்தன்மையுடன் இரக்கம் காட்டி அதைப்பற்றி மறந்துவிடலாமே என்று கூறுகின்றார்கள். இவ்வாறு கூறுபவர்கள் கொழும்பிலும் வேறு இடங்களிலும் சொகுசாக இருந்துகொண்டு இவ்வாறான கருத்துக்களை வெளிக்கொண்டு வருகின்றார்கள்.

இது தவறு. இப்பேற்பட்ட விசாரணை தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்க உதவும். குற்றவாளிகள் தண்டிக்கப்படுகின்றார்களோ இல்லையோ இதுவரை காலமும் தமிழ் மக்கள் எவ்வாறு நடத்தப்பட்டுள்ளார்கள் என்பது சம்பந்தமான விடயங்கள் இவ்வாறான விசாரணைகள் வெளிக்கொண்டுவருவன.

அத்துடன் நடந்தவை வெளிச்சத்திற்கு வந்தால் அவை தமிழ் மக்களின் நல்லதொரு அரசியல் தீர்வுக்கு முன்னோடியாக அமையக் கூடும். தமிழர்கள் தமது அரசியல் உரிமைக்கான கோரிக்கைகளை இதுவரை காலமும் தொடர்ச்சியாக முன்வைத்து வந்த காரணங்களை எடுத்தியம்ப அவ்வாறான விசாரணைகள் வழிவகுப்பன. உண்மையான அதிகாரப்பரவலாக்கம் விரைந்து செயற்படவேண்டியதொன்று என்பதை அனைவரையும் அறிந்து கொள்ளச்செய்வன.

இன்று ஜனநாயக வழிமுறைகளில் மக்கள் தங்கள் கவனத்தைத் திருப்பியுள்ளார்கள். அடிதடி எடுத்தே ஒரு விடயத்திற்கு தீர்வு காணலாம் என்ற எண்ணம் போய் எம்மை நாமே வருத்தி அகிம்சை முறையில் போராடி வெற்றிகள் காணமுடியுமென்பதை எமது மக்கள் எடுத்துக்காட்டி வருகின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் அந்தவகையிலே ஒருவிதப் போராட்டந் தான். அநியாயமாக கொலை செய்யப்பட்ட எம் மக்களை நாம்ஒன்றிணைந்து நினைவு கொள்வதன் மூலம் மக்களின் ஒரு பாரிய துயர அலையை உண்டுபடுத்துகின்றோம். இறந்து போனவர்களின் ஆன்மாக்கள் சாந்தி அடைய வேண்டும் என்று ஒருமித்து மனதார கோரிக்கை விடுவது இங்கும் பிறநாடுகளில் வாழும் தமிழ்மக்களையும் மனதால் ஒன்று சேர்க்க உதவுகின்றது.

எம் மக்களின் ஒற்றுமையே எமது கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்களைச் செவிசாய்க்க வைக்கும். ஆகவே இம் மாதம் 18-ம் திகதி முள்ளிவாய்க்காலில் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கட்சி பேதமின்றி, மத பேதமின்றி, இன பேதமின்றி, வர்க்க பேதமின்றி, ஏழைகள் பணக்காரர்கள் என்ற வித்தியாசமின்றி எமது மக்கள் சேர்ந்து பங்குபற்ற வேண்டும்.

வட-கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து தமிழ் மக்களும் அத்துடன் நாட்டின் ஏனைய இடங்களில் வசிக்கும் தமிழ் மக்களும் புலம் பெயர் தமிழ்மக்களும் ஒன்று சேர்ந்து தமது துக்கத்தை வெளிப்படுத்தும் நாளாக அதை மாற்ற வேண்டும்.

எனவே இம்மாதம் 18-ம் திகதி கால[illegible] 9.30 மணிக்கு முள்ளிவாய்க்காலில் கூடும் ஜனக்கூட்டம் 3 நிமிட நேர மௌன அஞ்சலியை நடத்தும் அதேவேளை, வடக்கிலும் கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் வாழும் தமிழ்ப் பேசும் மக்கள் மற்றும் புலம்பெயர் தமிழ்ப்பேசும் மக்கள் ஆகியோர் காலை 9.30 மணி தொடக்கம் 3 நிமிட நேர மௌன அஞ்சலியை நடத்த வேண்டும் என்று தாழ்மையுடன் வடமாகாண முதலமைச்சர் என்ற முறையில் உங்களிடம் கோரிக்கை சமர்ப்பிக்கின்றேன்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் தமது வசதிக்கேற்றவாறு மூன்று நிமிடநேர மௌன அஞ்சலியில் ஈடுபடலாம். ஒரு நாட்டின் தேசிய கீதம் இசைக்கப்படும் போது எவ்வாறு மக்கள் எங்கெங்கு நிற்கின்றார்களோ அங்கு தனித்து நின்று நாட்டிற்குக் கௌரவத்தை அளிக்கின்றார்களோ அதேபோன்று வரும் 18-ம் திகதி காலை 9.30 மணிக்கு சகலரும் இருக்கும[illegible]த்தில் சிரம் தாழ்த்தி 3 நிமிட நேரத்திற்கு இறந்த எம் உறவுகளுக்காக நினைவஞ்சலி செலுத்துமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

இந்தத் தினம் வரும் வருடங்களிலும் தமிழர்தம் துக்க தினமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். முடியுமானவர்கள் முள்ளிவா ய்க்காலுக்கு அன்று வந்து சேர்ந்திருந்து உங்கள் அமைதி அஞ்சலியைச் செலுத்த வேண்டுகின்றேன். பல இடங்களில் இருந்தும் மக்களை ஏற்றி வரப் பேருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பேருந்தினுள் ஏறக்கூடிய இடங்களையும் நேரங்களையும் உங்கள் வட மாகாணசபை உறுப்பினர்களிடம் இருந்து தெரிந்து கொள்ளுங்கள் என முதலமைச்சர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (செ)


விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(அ-8497)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
மிகக்குறைந்த கட்டணத்தில்
UK - 5Kg மேற்பட்ட பொதி 800/=
UK - 11 Kg மேற்பட்ட பொதி 500/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் Pvt (Ltd)
T.P:- 077 755 4528
யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி பருத்தித்துறை, சங்கானை, கிளிநொச்சி

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
(8617)

➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
ஆரம்பம் : 27.05.2017 - நேரம் : 8.30 a.m
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை


(C-8552)
365 நாட்களும்
72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (Express Service)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call 021 222 3536
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Call 021 222 6113
DHL aramex FedEx SKYNET


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.